

# கல்கி

KALKI 17-6-84

ரூ-1.50



# இப்போது... சருமத் தொல்லைகளை அகற்றிடுக
# ஆரோக்கியமும் இயற்கைப் பொலிவும் பெற்றிடுக.



Godrej நிமின்

## தூய வேப்பெண்ணெயின்
## இயற்கை குணம் கொண்ட சோப்

நீம், மார்கோஸா எனப்படும் வேப்பிலை சரும தொல்லைகளை விரட்ட இயற்கை தந்த வரப்பிரசாதம். தொடர்ந்து வேப்பிலை உபயோகித்தால் உங்கள் சருமம் பளபளப்பாகவும் தெளிவாகவும் விளங்கும்.


கோத்ரெஜ், தூய வேப்பெண்ணெயை நிமின் சோப்பில் கலந்துள்ளது. உங்கள் சருமத் தொல்லைகளை குளித்து ஒழிக்க ஒரு புத்துணர்ச்சியூட்டும் டாய்லெட் சோப். கோத்ரெஜ் தரும் நிமின் வெகுவாக நீடித்து நிற்கும். ஏனெனில் மற்ற வேப்பிலை சோப்புகளைப்போல கொழ கொழவென மாறுவதில்லை.



**நிமின்—உங்கள் கவனிப்புக்கிணையாக சருமத்தைக் கருத்துடன் காத்திடும்.**

CHAITRA-B G 230 TAM

# ஈபிள் டவரில் எத்தனை சாதனை!



பாரிஸ் நகரத்தின் அடையாளச் சின்னமாக வானுற ஓங்கி வனப்புற நிற்பது, ஈபிள் டவர் (ஐபில் டவர் எனவும் உச்சரிப்பதுண்டு.) இதனை 1889ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் குஸ்தாவ் என்பவர் கட்டி முடித்தார். அன்று முதல், ஏதேனும் ஒரு சாதனை புரிந்து புகழ் வேட்டையாடத் துடிக்கும் பலருக்கு இலக்காக இருந்து வருகிறது ஈபிள் டவர்.

டவர் கட்டி முடித்த மூன்றும் ஆண்டிலேயே, பாரிஸ் நகரத்தைச் சார்ந்த ஒரு ரொட்டிக் கடைக்காரன் இதன் 363 படிகளில் நிற்காமல் தாவித் தாவி ஓடி ஏறி ஒரு சாதனை புரிந்தான்.

1923–இல் விளையாட்டு விமர்சகன் ஒருவன் ஈபிள் டவரின் உச்சிப் படியிலிருந்து ஒரு சைக்கிளில் இறங்கிக் காட்டினான். (நம் சென்னிமலையில் மாட்டு வண்டி ஏறியதைப் போல) இதற்கு 35 ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்டண்ட் வேலைகள் செய்யும் ஒருவன் இதே ஈபிள் டவரிலிருந்து ஒற்றைச் சக்கர சைக்கிளில் (சர்க்கஸில் பார்த்திருப்பீர்களே!) டவரின் உச்சிப் படியிலிருந்து தத்தித் தத்திக் கீழிறங்கினான். 1964–இல் நான்கு மலையேறிகள் 984 அடி உயரமுள்ள டவரின் வெளிப்புறத்தில் ஏறி உச்சியை அடைந்தார்கள்.

இதற்கு இரண்டாண்டுகளுக்குப் பின்னர் 13 இளம் அமெரிக்க அழகிகள் டவரின் உச்சியில் திடீரென்று நிர்வாணமாகச் சுற்றிக் குதித்து விளையாடிக் கவர்ச்சி சாதனை செய்தார்கள்.

எல்லாச் சாதனையாளர்களும் வெற்றியுடன் திரும்பினார்கள் என்று சொல்ல முடியாது. 1901–இல் ஹங்கேரியைச் சேர்ந்த ஒருவன் தானே உருவாக்கிய இறக்கைகளை அணிந்து டவரிலிருந்து பறந்து கீழிறங்க முயன்றான். அவன் உருவாக்கிய இறக்கைகள் சரியாக இயங்காமையால் கீழே விழுந்து இறந்தான்.

தற்கொலை செய்து கொள்பவர்களையும் ஈபிள் டவர் ஈர்க்கிறது. இதுவரை 360 பேர் இங்கிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொண்டனர். இங்கே ஒரு கொலையும் நடந்திருக்கிறது. 1965–இல் ஸ்பானிஷ் தம்பதிகள் டவருக்கு வந்தனர். கணவன்–மனைவியை உச்சியிலிருந்து கீழே தள்ளிக்கொன்றான்.

இவ்வளவு புகழ் பெற்ற ஈபிள் டவரில் சென்ற மாதம் (ஏப்ரல் 84) இன்னொரு சாதனை நிகழ்ந்தது. மைக் மக்கார்த்தி என்னும் பிரிட்டிஷ்காரரும் அவருடைய காதலி அமந்தா டக்கரும் (Amanda Tucker) நான்கைந்து முறை டவருக்கு வந்து பார்வையிட்டுத் திரும்பினார்கள். இறுதியாக வந்தபோது அவர்கள் முதுகில் பயணிகள் எடுத்துச் செல்லும் பைகள் இருந்தன.

அவர்கள் மற்ற பார்வையாளர்கள் எதிரிலேயே பைகளைத் திறந்து அவற்றிலிருந்து பாராசூட்டுகளை எடுத்து அணிந்தனர். தற்கொலை முயற்சியைத் தடுப்பதற்காக அமைந்திருந்த இரும்பு வலைகளில் நுழைந்து, அங்கிருந்து குதித்தனர்.

மெல்லிய காற்றில் அவர்களுடைய பாராசூட்டுகள் விரிய, இரண்டு பெரிய தாமரைகளாக அவை மிதக்க அவற்றில் சாகசமாயிருந்தது. இருவரும் தரையிறங்கினர்.

ஈபிள் டவரிலிருந்து பாராசூட்டில் முதலில் குதித்தவர்கள் என்னும் பெருமையை மைக் மக்கார்த்தியும் அமந்தா டக்கரும் பெற்று விட்டனர்.

இன்னும் ஈபிள் டவரில் என்னென்ன சாதனைகள் நிகழப் போகின்றனவோ? யாருக்குத் தெரியும்?

**கோபு**

ஆதாரம்: டைம்




# கொஞ்சம் சிரியுங்கள்



பேச்சாளர்: (மூக்கைப் பொத்திய படி) ''கருவாட்டுக் கூடையுடன் இந்தப் பொதுக் கூட்டத்துக்கு வந்துள்ளவர் தயவு செய்து இங்கிருந்து போகும்படி அன்புடனும், பணிவுடனும் கேட்டுக் கொள்கிறேன்!''

நிருபர்: ''சினிமா நடிகரான நீங்க அரசியலுக்கு வந்ததற்கு யார் காரணம்?''

நடிகர்: ''ரசிகர்கள்தான்! அரசியலுக்குப் போய்த் தொலையாம சினிமாவில் நடிச்சு ஏன்யா எங்க கழுத்தை அறுக்கிறேன்னு கேட்டு நூற்றுக்கணக்கில் தினசரி லெட்டர் வந்துக்கிட்டிருக்குதுங்க எனக்கு!''



ஜெயிலர்: நாளைக்கு காலையில் உனக்குத் தூக்குத் தண்டனை கடைசி ஆசை என்ன?''

கைதி: ''மெக்ஸிகோ தேசத்துச் சலவைக்காரி ஜோக் என்ன ஜோக்னு தெரிஞ்சுக்கணும். எழுத்தாளர் சுஜாதாவைத் தயவுசெய்து இங்கே அழைத்து வந்து அந்த ஜோக்கை என்னிடம் சொல்லச் சொல்லுங்க!''



கணவன்: ''அரைமணி நேரம் தட்டியபின் கதவைத் திறக்கிறியே, ஏன்?''

மனைவி: ''நீங்கள் லொட் லொட்னு கதவைத் தட்டுற சத்தத்தில் உங்கம்மாவின் தூக்கம் கெடட்டும்னுதான்!''

-உ. ராஜாஜி



அவன்: ''குனிந்து நடப்பது தான் பெண்ணுக்கு அழகுன்னு எப்படித் தெரிஞ்சுக்கிட்டே?''

இவன்: ''மேன்ஹோல் திறந்து கிடப்பது தெரியாமல் ஒரு தடவை உள்ளே விழுந்துவிட்ட அன்று!''






# ராகமாலிகா பட்டு சேலைகள்

சுகன் ஆர்கேட்,

நெ. 12பி, நாகேஸ்வரராவ் ரோடு, பனகல் பார்க் எதிரில்

தியாகராய நகர் சென்னை-600 017

(ஞாயிறு கடை உண்டு)

சிறப்புப் பேட்டி

# மறக்க முடியாத வழக்குகள்!

உங்கள் வாழ்க்கையில் உங்களால் மறக்க முடியாத தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கு ஒன்றைப் பற்றிக் கூறுங்களேன் என்று சில நீதிபதிகளைக் கேட்டபோது அவர்கள் கூறிய சில சுவையான வழக்குகள். வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்கள் மாற்றித் தரப்பட்டுள்ளன.

''நான் வழக்கறிஞராகப் பணியாற்றியபோதும் சரி, பின் நீதிபதியாகப் பணியாற்றிய போதும் சரி, பலவிதமான வழக்குகளைச் சந்தித்திருக்கிறேன். பல விவாகரத்து வழக்குகளும் இதில் அடங்கும். பொதுவாக நான் எல்லா விவாகரத்து வழக்குகளிலுமே, தம்பதிகளை சேர்த்து வைக்கவே முயன்றிருக்கிறேன். பல சமயங்களில் என் முயற்சியில் வெற்றியும் பெற்றிருக்கிறேன். அத்தகைய வழக்குகளில் ஒன்றினை என்னால் என்றைக்குமே மறக்க முடியாது'' என்று சொல்லி வழக்கு விவரத்தை விளக்கினார் முன்னாள் நீதிபதி கைலாசம்

சென்னையைச் சேர்ந்த ஒரு பெண்மணி. அவருக்குத் திருப்பதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையைத் திருமணம் செய்து வைத்தார்கள். கணவர் கல்லூரியில் விரிவுரையாளர். நல்ல சம்பளம். மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை நடத்தினர். தீபாவளி சமயம் மனைவியை அழைத்துக் கொண்டு கணவர் சென்னையில் உள்ள மாமனார் வீட்டுக்கு வந்தார். சில நாட்கள் தங்கியிருந்து விட்டுத் தான் மட்டும் திரும்பிப் போய் விட்டார். நாட்கள் கழிந்தன.

கணவர் மனைவியைப் புறப்பட்டு வரச் சொல்லிக்



○ நீதிபதி மோகன்

கடிதம் எழுதினார். மனைவி வீட்டிலோ, மாப்பிள்ளையை வந்து, பெண்ணை அழைத்துக் கொண்டு போகவும் என்று பதில் எழுதி விட்டனர். மாப்பிள்ளை, ''லீவு இல்லை. அழைத்துக் கொண்டு வந்து விடவும்'' என்று மறுபடி லெட்டர் எழுத, பெண் வீட்டில், ''வந்து அழைத்துக் கொண்டு போங்கள். நாங்களாகக் கொண்டு வந்துவிட மாட்டோம்'' என்று பிடிவாதமாய் எழுதி விட்டனர். இந்தப் பிடிவாதப் போக்கு கணவரையும் விடவில்லை. 'வேண்டுமெனில் பெண்ணைக் கொண்டு வந்து விடுங்கள். இல்லையெனில் பெண் உங்களுடனே இருக்கட்டும்' என்று கண்டிப்பாய் எழுதி விட்டார்.


மாதங்கள் சென்றன. கணவர் விவாகரத்து வழக்குத் தொடர்ந்தார். வழக்கு என் முன்னால் வந்தது. எனக்கு ஆரம்பம் முதலே இந்த வழக்குக் கொஞ்சம் விசித்திரமாய்ப்





○ ஜஸ்டிஸ் செங்கோட்டு வேலன்

பட்டது. எனக்கென்னவோ விவாகரத்துக்கு இது ஒரு காரணமா என்று தோன்றியது.

சம்பந்தப்பட்டவர்களிடம், இந்த வழக்குப் பற்றி என்னுடைய சேம்பரில் பேச விரும்புகிறேன் வாருங்கள்'' என்றேன். அங்கே கணவரைத் தனியாக அழைத்து, ''உங்கள் மனைவியின் நடத்தையில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் உண்டா?'' என்றேன். அவர், ''துளிக்கூட இல்லை'' என்றார். பின்









அவரை அனுப்பி விட்டு, மனைவியைத் தனியே அழைத்து அவரிடம், ''உங்கள் கணவரின் நடத்தையில் உங்களுக்குச் சந்தேகம் உண்டா?'' என்றேன். அவரும் தம் கணவரைப் பற்றி நல்லபடியாகவே சொன்னார். சரி! எப்படியும் இவர்களை ஒன்று சேர்த்து வைத்து விடுவது என்று முடிவு கட்டினேன்.

இருவரையும் கூப்பிட்டு என் முன் உட்காரச் சொன்னேன். அப்போது தான்



○ கைலாசம்

எனக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது.

கணவனிடம், ''நீங்கள் உங்கள் மாமனார் வீட்டுக்கு வந்து, மனைவியை அழைத்துக் கொண்டு போக மாட்டீர்கள் அப்படித்தானே?'' என்றேன். அவர் 'ஆமாம்' என்றார். பின் மனைவியிடம், ''உங்கள் கணவர் வந்து அழைத்துப் போனால் தவிர, நீங்களாக அவர் வீட்டுக்குப் போக மாட்டீர்கள் அப்படித் தானே?'' என்றேன். அவரும் 'ம்' என்று தலையை யாட்டினார்.

''காரணமில்லாத உங்கள் வறட்டு கௌரவப் பிரச்னைக்கு ஒரு வழி சொல்கிறேன். என்னுடைய இந்த அறை உங்கள் இரண்டு பேருக்கும் பொதுவானது தானே. இந்தப் பொது இடத்திலிருந்து நீங்கள் இரண்டு பேரும் உங்கள் வீட்டுக்குப் போகலாமே?'' என்றேன்.

இரண்டு பேருமே இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவர்களுக்கு மகிழ்ச்சிகலந்த ஆச்சரியம். கொஞ்ச நேரத்துக்கு என்ன சொல்வதென்றே தெரியாமல் திக்கு முக்காடி விட்டனர். என் முடிவுக்கு சந்தோஷமாய்க் கட்டுப்பட்டனர். இருவரும் நேரே கிளம்பினர் ஊருக்கு. எனக்கு இன்னும் ஆச்சரியமான



✕ ரத்தினவேல் பாண்டியன்

விஷயம் என்னவென்றால், எனக்கு திடீரென அவர்களிடம் இப்படி ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்று எப்படித் தோன்றியது என்பது தான். அதை ஆண்டவன் கிருபை என்று தான் நினைக்கிறேன். அவர்களை சேம்பருக்கு நான் அழைத்த போது கூட, எப்படியும் இவர்களைச் சேர்த்து வைக்க வேண்டுமென்று தான் நினைத்தேனேயொழிய, இப்படிக் கேட்க வேண்டுமென்றோ, இப்படிக் கேட்கப் போகிறோம் என்றோ நினைத்துக் கூடப் பார்க்கவில்லை..''

● ● ●

**நா**ன் கோவையில் வழக்கறிஞராகப் பணியாற்றிய போது கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ராமசாமி என்பவர் சார்பில் வாதாட அரசாங்கத்தால் நியமிக்கப் பட்டேன். நல்ல முறையில் வழக்கை நடத்த வேண்டிக் குற்றம் சாட்டப்பட்டவரை சிறைச்சாலையில் சந்தித்தேன். குற்றத்தைப்பற்றிய விவரம் கேட்ட போது, தான் கம்ப ராமாயணம் படிப்பது வழக்கம் என்றும், அக்காவியத்தில் தாடகை வதைப் படலம் படித்ததாகவும் அதனால் இவ்வுலகில் துஷ்டர்களை அழித்து நல்லவர்களைக் காப்பது அனைவருடைய கடமை என்று உணர்ந்து கொண்டாராம். தன் அண்ணன் கிராமத்தில் கொலை, களவு ஆகிய பல அக்கிரமங்களைச் செய்ததால் தாடகையை ஒத்திருந்தான், எனவே அவனைக் கொல்வது தன்னுடைய கடமையாகக் கொண்டு அவன் இரவு



○ ஜஸ்டிஸ் சிங்காரவேலு

நேரத்தில் வெளியேபோகும் போது ஒரு கடப்பாரையால் அடித்துக் கொன்று விட்டதாகவும், பின்பு நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றுவிவரத்தைச்சொல்லி அவர்களால் கைது செய்யப் பட்டு பின்பு இரண்டாம் வகுப்பு நடுவர் முன் தான் கொலைக் குற்றம் புரிந்ததாக ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்து, பின்பு முன் விசாரணையின் போதுஇரண்டாம் வகுப்பு குற்றவியல் நடுவர் முன் தான் குற்றவாளி என்பதை ஒப்புக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

மாவட்ட குற்றவியல் நீதிமன்றத்தில் நடக்கவிருக்கும் கொலைக் குற்ற வழக்கில் அவர் தரப்பில் வாதாட என்னை அரசாங்கம் நியமித்

இருப்பதாகவும் விசாரணை ஆரம்பத்தில் கொலைக்குற்றத்தை வாசித்துக் குற்றவாளியா, இல்லையா என்று கேட்டால் குற்றவாளி அல்ல என்று சொல்லவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன்..

அதற்கு அவர் 'நான் பொய் சொல்ல மாட்டேன். ஒரு பொய் சொல்வதால் தான் ஆயுள் முழுவதும் கம்பராமாயணம் படித்ததன் நன்மை எல்லாம் போய் விடும். என்னைத் தயவு செய்து மன்னித்துவிடுங்கள்' என்றார். நான் பலமுறை கேட்டும் பயனில்லாதபடியால் ஏமாற்றத்துடன் சிறைச்சாலையினின்று திரும்பினேன்.

அவர் தண்டனை பெறப் போவது நிச்சயமாக இருப்பினும் இத்தகைய உயர்ந்த குறிக்கோள் உடைய ஒருவனைக் காப்பாற்ற மறு முயற்சி எடுக்க வேண்டுமென்று கருதி மீண்டும் சிறைச்சாலையில் சந்தித்து

''பொய்மையும் வாய்மை
இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

என்ற குறளை அவனுக்கு விளக்கி, அவன் பொய் சொல்வதால் எவருக்கும் தீமை விளைவதில்லையென்றும், மாறாக அவன் விடுதலை பெற ஒரு சிறு வாய்ப்பு உண்டு என்றும்சொன்னதன் பேரில் ஒருவாறாகக் குற்றத்தை மறுக்க ஒப்புக் கொண்டான்.

கோவை மாவட்ட நீதி மன்றத்தில் நீதிபதி திரு. அந்தோனி லோபோ முன் வழக்கு ஆரம்பமாகியது. முதல் சாட்சி இறந்துபோன அண்ணன் மனைவி. சம்பவ தினத்தன்று இரவில் தன் கணவன் புறப்பட்டுச்சென்ற சில நொடிகளில் ஐயோ என்ற சப்தம் கேட்டதாகவும் உடனே ஓடிப் பார்த்த போது ராமசாமி அந்த இடத்திலிருந்து கடப்பாரையுடன் ஓடியதாகவும் கூறினாள். குறுக்கு விசாரணையில் அவள் போலீசால் முதன் முதலில் விசாரிக்கப் பட்டபோது ராமசாமியும் கிருஷ்ணனும் ஓடினார்கள் என்று சொல்லியிருப்பதை அவருக்குச் சுட்டிக் காட்டியதும் அவ்வாறு சொன்னதை ஒப்புக் கொண்டதன்பேரில்வழக்கொன்றும் தொடராததையும் எடுத்துச் சொல்லிக் கேட்ட போது, கிருஷ்ணனுக்கும் எங்களுக்கும் விரோதம் ஆனதால் சொன்னேன் என்றாள். உடனே மாவட்ட நீதிபதி விரோதம் காரணமாக ஒருவனைக் குற்றம் செய்ததாகச் சொல்லும் இவள் சாட்சியத்தை ஏற்பதற்கில்லை என்றார்.

அடுத்ததாககைப்பற்றப் பட்ட கம்பராமாயண உரை புத்தகம் சான்றாக எடுத்துக் கொள்ளப்பட்டதைக் குறித்து. குற்றவாளி கம்பராமாயணம் படித்தது நம்பத் தகுந்ததாக இல்லை என்பதை நீதிபதி குறிப்பிட்டார்.

அடுத்து ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவு செய்த இரண்டாம் வகுப்பு குற்றவியல் நடுவர் விசாரிக்கப்பட்டார். அவர் ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் தான் பதிவு செய்யும்படி கேட்டிருக்க வேண்டும், முழு விவரமும் சொன்னது நடுவர். 'இந்த வாக்குமூலத்தை பதிவு செய் என்று கட்டாயப்படுத்துவதற்கு ஒப்பாகுமானதால் ஒப்புதல் வாக்குமூலம் ஏற்பதற்கில்லை' என்ற முடிவுக்கு வந்தார்.

நேராகப் பார்த்த சாட்சி, நம்பத் தக்கதாக இல்லை. ஒப்புதல் வாக்கு மூலம் ஏற்கத் தக்கதாக இல்லை. மேலும் பேல் கோர்ட்டில் குற்றத்தை மறுப்பதால் ராமசாமி குற்றவாளி அல்ல என்று தீர்ப்பளித்தார். தீர்ப்பு எனக்குப் பூரண திருப்தி அளித்தது. விடுதலை அடைந்தவுடன் ராமசாமி என்னிடம் வந்து தன்னுடைய உயிரைக் காப்பாற்றினதற்கு நன்றி கூறிவிட்டுச் கம்பராமாயண புத்தகத்தைத் திரும்ப வாங்கிக் கொடுக்கும்படி வேண்டினார். நானும் உத்தரவு பெற்று அவருக்குத் திரும்ப வாங்கிக் கொடுத்தேன். ''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' என்ற பேருண்மையை விளக்குவதாக அமைந்த இந்த வழக்கு எனக்கு வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவமாக இருக்கும் என்று முடித்தார் நீதிபதி செங்கோட்டுவேலன்.

ஒரே அலுவலகத்தில் பணியாற்றி வந்த ஒரு கிறிஸ்துவப் பெண்ணும் ஒரு இந்து ஆடவனும் காதலித்துத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார்கள். ஆனால் பெண்ணும் அவள் பெற்றோரும் இந்துவான அவன் கிறிஸ்துவ மதத்திற்கு மாறினால் தான் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ள முடியும் என்று கூறிவிட்டனர். ஆறுஆண்டுகள் கடந்தன. குடும்பத்தில் தன்னுடைய கடமைகளை முடித்துக் கொண்டு கிறிஸ்துவ மதம் மாறி 1971—ல் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்.

மகிழ்ச்சியாகக் கடந்த அவர்கள் இல்வாழ்க்கையில் கிடைத்த பரிசு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும்.

மதம் மாற்றத்திற்குப் பிறகும் கணவன் இந்து மதக் கடவுள்களைவணங்குவதாகவும், நெற்றியில் விபூதி குங்குமம் அணிவதும், கிறிஸ்துவ மதத்தில் நம்பிக்கையற்றவராகவும் இருந்து வந்த காரணத்தினால் மனைவி அவனை வெறுக்கத் தொடங்கினாள். நாளடைவில்இவை கொடூரமான செயல்கள் என்றும் அதனால் தான் இனி அவருடன் சேர்ந்து வாழ முடியாது என்றும் தீர்மானித்து கோர்ட்டு உத்தரவு மூலம் இருவரும் தனித்து வாழ வழக்குத் தொடுத்தாள்.

அதேசமயம் தன் தாம்பத்திய உரிமை கோரித் தன்


நீரில் விழுந்துவிட்ட ஒருவனைக் காப்பாற்றிக் கரையில் கொண்டுவந்து போட்டார்கள்.

''அடடா...'' என்றான் அவன்.

''என்ன?'' — சுற்றியிருந்தவர்கள் கேட்டார்கள்.

''உங்களை எல்லாம் வீணைக் துன்பப் படுத்தி விட்டேன்... எனக்கு நீச்சல் தெரியும் என்பது இப்போதுதான் ஞாபகம் வருகிறது...''

—ஆர். எஸ். சுப்பிரமணியன்.



மனைவி தன்னுடன் வாழ வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று எதிர் வழக்குத் தொடுத்தார் கணவன். இரு வழக்குகளும் ஒன்றாக விசாரிக்கப்பட்டன. கோர்ட் அவர்கள் இருவரையும் சமரசமாகப் போய் வாழ்க்கை நடத்துமாறு புத்திமதி கூறியும் வாதி தன் மதப்பற்றின் காரணமாக இந்து மனப்பான்மையுடன் உள்ள கணவனுடன் வாழ முடியாது என்று இட்டவட்டமாகக் கூறிவிட்டதால், ஜஸ்டிஸ் சிங்காரவேலு கீழ்க்கண்ட தீர்ப்பை வழங்கினார். கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய பின்னும் இந்து மதக் கோட்பாடுகளை விடாமலிருந்தது. பிரிந்து வாழ அனுமதிப்பதற்குப் போதிய காரணங்களாக நிரூபிக்கப்படாததால் வாதி கொடுத்த வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

அதேசமயம், தனக்கு விருப்பமில்லாத மனைவியைக் கணவனுடன் வாழ்க்கை நடத்துமாறு தீர்ப்பளிப்பது மனிதாபிமானசெயல் அல்லவென்றும் அப்படி கோர்ட்டு உத்தரவிட்டாலும் அந்த உத்தரவைக் கோர்ட்டு மூலம் அமல் செய்ய இயலாது என்றும் தீர்மானித்துப் பிரதிவாதி போட்டிருந்த வழக்கையும் தள்ளுபடி செய்தார். காலப்போக்கில் குழந்தைகளின் நலனை உத்தேசித்து, தாயின் மனம் மாறக்கூடும் என்ற நம்பிக்கையின் பேரில் விவாக ஒப்பந்தம் அமலில் இருக்கும் நிலையில் மேற்கண்ட தீர்ப்பு கூறப்பட்டது. ஆறு ஆண்டுகள் காதலித்துத் திருமணம் செய்துகொண்டு மூன்று குழந்தைகள் பெற்ற பிறகும் ஒரு சிறு காரணத்திற்காகப் பிரிவது சரி இல்லை என்றும் மூன்று குழந்தைகளும் மதபேதமின்றி நல்வாழ்வு வாழ வேண்டுமென்ற கருத்திலும் இரண்டு ஆண் குழந்தைகளும் தந்தையுடனும் பெண் குழந்தை தாயுடனும் வசிக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், இரு ஆண் குழந்தைகளைத் தாயிடமும் அதே போல் பெண் குழந்தையைத் தந்தை வசிக்கும் இடத்திற்கு ஒவ்வொரு இரண்டாம்சனிக்கிழமைகளிலும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது மூன்று குழந்தைகளும் தாயிடமும் ஆங்கிலப் புது வருட தினத்தன்று அம்மூன்று குழந்தைகளும் தந்தையிடம் இருக்கவேண்டுமென்றும் இதனால் குழந்தைகள் மூலமாகவாவது பெற்றோர் மண வாழ்க்கை மீண்டும் மலரும் என்றமனிதாபிமான தீர்ப்பை வழங்கினார். இத்தீர்ப்பு இருதரப்பாருக்கும் அவர்களைச்சேர்ந்தவர்களுக்கும் மனநிறைவை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.


சமீபத்தில் தீர்ப்பளித்த வழக்கு என்பதால் மட்டுமல்லாமல் பிடிவாதமாகச் சேர்ந்து வாழ மறுக்கும் மனைவியையும் சேர்ந்து வாழ விரும்பும் கணவனையும் கள்ளமில்லாத குழந்தைகளையும் சேர்க்க விரும்பி நான் மனிதாபிமானத்தால் வழங்கிய தீர்வு என்பதால் நான் இதை மறக்க முடியாதவழக்காக நினைக்கிறேன் என்கிறார் ஜஸ்டிஸ் சிங்காரவேலு

● ● ●

**1971**-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாகம்மா என்ற பெண்மணி தன்னுடைய ஐந்து குழந்தைகளையும் கொன்று தானும் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்த போது அவள் காப்பாற்றப் பட்டு விட்டாள். குழந்தைகளைக் கொன்றதற்காகவும் தற்கொலை முயற்சிக்காகவும் அவருக்கு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டது. படிக்காத கிராமத்துப் பெண்மணியான நாகம்மா தான்குழந்தைகளைக் கொன்றதற்கான காரணத்தை விளக்குகிறாள்.

எனக்கு 11 வயதிலும், 6 வயதிலும், 4 வயதிலும் மூன்று ஆண் குழந்தைகளும் 7 வயதிலும் ஒன்றரை வயதிலும் இரண்டு பெண் குழந்தைகளும் இருக்கின்றனர். என்னுடைய கணவர் என்னையும், குழந்தைகளையும் கவனிக்காமல் வேறு இரண்டு பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். எப்போதாவது வந்தாலும் எங்களை 'அடித்துத் துன் புறுத்துவார். வீட்டில் இருந்த பாத்திரம் பண்டங்களை எல்லாம் அடமானம் வைத்துச் சாப்பிட்டு வந்தார்கள். இனி அடமானம் வைப்பதற்கும் எதுவுமில்லை என்ற நிலை. அக்கம்பக்கத்திலும் இவர்களுக்குக் கொடுத்துச் சலித்து விட்டார்கள்.

இரண்டு நாட்கள் குழந்தைகள் பட்டினியாகவே பள்ளிக்குப் போய் வந்தார்கள். இதனிடையே அவர்களுக்கு உடம்பு வேறு சரி இல்லை. கணவரிடம் நானும் குழந்தைகளும் பட்டினி என்று சொன்னதற்கு எல்லோரும் போய்ச் சாவுங்கள் என்று கூறிவிட்டுப் போய் விட்டார். அவருடைய தம்பியிடம் போய் இரண்டு ரூபாய் கடன் கேட்டதற்கு நான் சொல்கிறபடி கேட்டால் பணம் தருகிறேன் என்றான். அவனுடைய கெட்ட எண்ணத்தைப் புரிந்து கொண்டு நான் பேசாமல் திரும்பிவிட்டேன். மீண்டும் என் கணவர் வந்ததும் குழந்தைகளை விட்டு விட்டு எங்கேயாவது போய் விடுவது என்கிற தீர்மானத்தில் காலியாக இருந்த பக்கத்து வீட்டில் போய் ஒளிந்து கொண்டேன். அங்கிருந்து கொண்டு என் வீட்டில் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். குழந்தைகள் எல்லோரும் பட்டினியால் துடித்துக் கொண்டிருந்தார்கள். கைக்குழந்தைக்குப்பால் கேட்டுப் பெரிய பையன் பக்கத்து வீட்டில் கேட்டபோது அவர்கள் மறுத்து விட்டார்கள். அழும் குழந்தையை வைத்துக் கொண்டு அவன் தவித்துக் கொண்டிருந்தான். பசிக்கிறது என்று மற்றக் குழந்தைகள் அப்பாவை எழுப்பின. ஆனால் அவர் எழுந்திருக்கவில்லை. என்னால் அதற்கு மேல் பார்த்துக் கொண்டு மறைவாக இருக்க முடியவில்லை. நான் அவர்கள் எதிரில்சென்றதும் 'அம்மா எங்களை விட்டு விட்டு எங்கேபோனே. எல்லோரும் சாகலாம். வாம்மா' என்றான் பெரிய பையன். எல்லோரும்கிணற்றுக்குப் போனோம். அங்கே ஏதோ வேலை நடந்துகொண்டிருந்தது. அதனால் திரும்பி விட்டோம். இரவு மீண்டும் போனோம். நிலா வெளிச்சம் அதிகமாக இருந்தது. நாய் வேறு குரைத்துக் கொண்டிருந்தது. அதனால் திரும்பி விட்டோம். பிள்ளைகளின் பசியைப் போக்க முடியவில்லை. யாரிடமும் ஒப்படைக்கவும் முடியவில்லை. அவர்களை விட்டு விட்டுநான் சாகவும் மனம் செட்சவில்லை. மறுநாள் காலை பெரிய பையன் பள்ளிக்குக்கிளம்பிக் கொண்டிருந்தான். அவனைப் போக வேண்டாம் என்று கூறி முகம் கழுவச் சொன்னேன். முகம் கழுவும்போது தூக்கித் தலைகீழாகத் தண்ணீர்த் தொட்டியில் போட்டு அமுக்கினேன். கொஞ்சம் திமிறினான். ஆனால் மனசைக் கல்லாக்கிக் கொண்டு வெளியே வந்து விட்டேன். சிறிது நேரம் கழித்துப் போய்ப் பார்த்தபோது கை, கால் ஆடவில்லை. தூக்கிக் கீழே படுக்க வைத்தேன். பெரிய மகள் குழந்தையை என்னிடம் கொடுத்தாள். அதைத் தொட்டியில் போட்டு விட்டு மீண்டும் வெளியே வந்து சிறிதுநேரம் கழித்துப் போய்ப் பார்த்த போது அது செத்துப் போயிருந்தது. பெரிய மகளை முகம் கழுவச்சொன்னேன். அதே போல் அவளையும் தூக்கித் தொட்டியில் போட்டேன். சிறிதுநேரம் கழித்து அது அடங்கிப் போய்விட்டது. அடுத்ததாக மணி என்ற ஆறு வயது பையனை முகம் கழுவும் போது முன் செய்தது போல் செய்தேன். கடைசியாக நான்கு வயது மகளைக் கூப்பிட்டேன். அவளுக்குக் கண் தெரியாது. அவளையும் தூக்கித் தொட்டியில் போட்டுவிட்டு நான் கிணற்றுக்குப் போனேன். நான் கிணற்றில் குதிப்பதைப் பார்த்து விட்டு, சிலர்என்னை காப்பாற்றித் தூக்கி வந்து என்வீட்டில் போட்டார்கள். இது தான் நடந்தது




கூவத்தின் பழைய பெயர் 'கூகம்!'

சென்னையில் இருந்து அரக்கோணம் செல்லும் இருப்புப் பாதையில் கடம்பத்தூர் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே ஆறு கல் தொலைவில் கூவ(க)ம் என்று ஓர் ஊர் உள்ளது. இதற்குத் திருவிற்கோலம் என்றும் பழம்பெயர் ஒன்று உண்டு. தொண்டை நாட்டின் ஐந்து பெருங்கோயில்களில் ஒன்று இங்கு உள்ளது.

இவ்வூருக்கு அண்மையில் தான் கூவ(க)ம் ஆறு ஓர் ஏரியில் இருந்து புறப்படுகின்றது. எனவே ஊரும் கூவ(க)ம் ஆயிற்று போலும்.

சோலைகள் சூழ்ந்த எழில் கொஞ்சும் ஊர் என்று திருஞானசம்பந்தர் இந்த ஊரை வர்ணிக்கிறார்.

முந்தினான் மூவருள்
முதல்வன் ஆயினான்
கொந்துலாம் மலர்ப்பொழில்
கூகமேவினான்
அந்திவான் பிறையினான்
அடியார் மேல்வினை
சிந்துவான் உறைவிடம்
திருவிற்கோலமே.

- திருச்செங்கோடு. ப. கந்தசாமி.

அமைச்சர்: ''வயசாகி விட்டதால் அரண்மனையை விட்டு இனி எங்கும் போகப் போவதில்லேன்னு நீங்க அறிவிச்சதில் பரம சந்தோஷம்!''

மிகவு குண்டான அரசன்: ''யாருக்கு?''

அமைச்சர்: ''அரண்மனைப் பல்லக்குத் தூக்கிகளுக்குத்தான்!''

—உ. ராஜாஜி.



என்று கூறி முடித்தாள் நாகம்மா. அவளுக்கு அளிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை மூன்று ஆண்டுகள் சிறைவாசமாகக் குறைத்து, பின்பு ஒரு அனாதை சிறுவர்கள் இல்லத்தில் சேர்ப்பதற்குக் கோர்ட்டு மூலம் ஏற்பாடு செய்தோம். இதனால் அவள் மனத்துக்கு கொஞ்சம் ஆறுதல் கிடைக்கும் என்ற எண்ணத்தில் தான் இப்படி செய்தோம்.

இது நடந்து பதின்மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இன்று நினைத்தாலும் என் கண்களைக் குளமாக்கி விடும் வழக்கு இது. வரவேற்புரை அலமாரியில் என் கைக்கு அகப்படுவது! போல் வைத்திருக்கிறேன். அப்போதைய உயர்நீதி மன்ற நீதிபதிகள் திரு. நாராயணசாமி முதலியார் மற்றும் வி. வி. ராகவன் அவர்களால் தீர்ப்பளிக்கப்பட்ட இந்த வழக்கில் நான் பப்ளிக் பிராசிக்யூட்டராக இருந்தேன் என்கிறார் நீதிபதி **திரு. ரத்தினவேல் பாண்டியன்.**

கோர்ட்டுக்கு வெளியே என்னுடைய ஜூனியர் அந்தப்பெண்மணியை ''இப்படிக் கொடூரமாக கொலை செய்திருக்கிறாயே! நீ அப்படிக் கொல்ல வேண்டுமென்று நினைத்தால் நாலணாவிற்கு விஷம் வாங்கிச் சாப்பாட்டில் கலந்து கொடுத்திருக்கலாமே?'' என்றுகூறியதற்கு அந்த பெண், 'நாலணாவும் ஒரு வேளை சாப்பாடும் இருந்தால் நான் ஏன் ஐயா என் குழந்தைகளைக் கொல்லப் போகிறேன்' என்ற பதில் என்னை உலுக்கி விட்டது.

• • •

**1974**-ல் நடந்த இந்த வழக்கின் வாதி - பிரதிவாதி இருவரும் ஒரு சத்தோலிக்க கிறிஸ்துவ தம்பதி. இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள். இதில் வாதியான கணவனின் வழக்கு என்னவென்றால் இரண்டாவது குழந்தை பிறந்த பிறகு மனைவி தன்னை உடலுறவு கொள்ள அனுமதிப்பதில்லை. அதற்கான முயற்சியில் ஈடுபடும்போதே தன்னைத்திட்டுவதுடன் அடிப்பதும் உண்டு. இந்தக் கொடுமையின் காரணமான தன்னுடைய மனநிலையும் உடல்நிலையும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் 1973—ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல்விவாக சம்பந்தத்திலிருந்து பின் வாங்கி விட்டதாகவும் கூறுகிறார். ஆகையால் வாதியின் சார்பாக இருவருக்குமிடையில் சட்ட ரீதியான விவாகரத்து வேண்டுமென்பது தான் வழக்கு.

மனைவியின் எதிர் வழக்கு என்னவென்றால், கணவன் கூறுவது போல் உடலுறவு கொள்ளத் தான் மறுத்ததில்லை என்றும் மாறாக 1973-ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு முறையும் மே மாதம் மறு முறையும் தனக்கு அபார்ஷன் நடந்ததாகவும் அதனால் வழக்கை வாபஸ் வாங்கவேண்டுமென்பதுதான்.

இரு தரப்பினரையும்விசாரித்த பிறகு ஜஸ்டிஸ்மோகன் கொடுத்த தீர்ப்பின் விவரம் இதுதான். ஆங்கில வழக்கறிஞர் டெனிங் என்பவர் தீர்ப்பளித்த ஒரு வழக்கைத்தான் அவர் மேற்கோள் காட்டியிருந்தார். உடலுறவுக்கு மனைவி அனுமதியளிக்காவிட்டால் அது கணவனுக்குச்செய்யும்கொடுமைதான். கணவன் — மனைவி உறவில் உடலுறவு என்பது ஒரு முக்கியமான பங்குவகிக்கிறது. சரியான காரணமில்லாமல் அதற்கு மறுத்தால் அது மற்றவருக்குச் செய்யும் மாபெரும் கொடுமை.

ஆனால் தக்க காரணத்துடன், உதாரணமாக, உடல்நிலை சரி இல்லாமல் இருந்தாலோ அல்லது கணவனுடைய தவறான அணுகலினாலோ அல்லது கணவனுக்குக் கொடுமை செய்ய வேண்டுமென்ற கெட்ட நோக்கத்துடன் இல்லாமலோ இருந்தால் அது கணவனுக்குச் செய்யும் கொடுமையாகாது.

இந்த வழக்கில் பிரதிவாதியான மனைவி தன்னுடைய வாதத்தில் மணவாழ்க்கைக்குக் கட்டுப்பட்டு இருந்ததாகக் கூறுகிறார். மேலும் இரண்டாவது பிரசவத்திற்குப் பிறகு உடல்நிலை சரியில்லாதகாரணத்தால் பதினைந்து நாட்கள் மருத்துவமனையில்இருந்ததும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இரண்டாவது பிரசவத்திற்குப் பிறகு இருமுறை அபார்ஷன் செய்ததற்கான மருத்துவ ஆதாரங்கள் இருப்பதால் உடலுறவு கொள்ளத் தன்னை அனுமதிப்பதில்லை என்ற வாதியின் கூற்று பொய்யாகிறது. அதனால் இது கணவனுக்கு மனைவி செய்யும் கொடுமை அல்ல என்பதால் இரு தரப்பினரின் வழக்கையும் தள்ளுபடி செய்து விட்டார்.

கணவன் — மனைவி விவாகரத்து வழக்கில் இதுபோன்ற ஒன்று புதுமையானதும் இதுவரை நான் தீர்ப்பளித்த வழக்குகளில் முதலாவதுமான இந்த வழக்கு என் மனதில்நீங்காஇடம்பெற்றுவிட்டது என்கிறார் ஜஸ்டிஸ் மோகன்.

பேட்டி: கலாமூர்த்தி

# சென்னையில் ராகேஷ் சர்மா



ராகேஷ் சர்மா

**சமீபத்தில் சென்னைக்குவந்தவிண்வெளி வீரர்களான ராகேஷ் சர்மா, ரவீஷ் மல்ஹோத்ரா ஆகியோரைப் பின் தொடர்ந்த நமது நிருபர்கள் ப்ரியன் மௌலி இருவரும் எழுதுகிறார்கள்.**

தாம்பரம் விமானப்படை தளத்தில் உள்ள ஆபீஸர்ஸ் மெஸ்'ஸில் குழந்தைகள், சிறுவர்கள், இளம்பெண்கள் விமானப்படை வீரர்கள் அவர்கள் மனைவிகள் என்று எக்கச்சக்கமான கூட்டம்.

''அங்கிள் நீங்கள் வானத்தில் சுற்றும் போது ஏதேனும் அமெரிக்க விண்வெளிக் கலத்தைப் பார்த்தீர்களா?''

''நாங்கள் சென்ற பாதை வேறு.''

''யோகாசனம் சற்றுக் கொண்டீர்களே இங்கே செய்து காட்டுங்களேன்.''

''இந்தக்கூட்டத்திலா..?''

''பூமிக்கு வந்து எத்தனை நாட்களுக்குப் பிறகு உங்கள் உடம்பு பழையபடி ஆயிற்று?''

''மூன்று நாட்கள்கழிந்த பிறகு தான் இரத்தஓட்டம் சீராக ஓட ஆரம்பித்தது.''

''ரவீஷ் அங்கிள். மறுபடியும் ரஷ்யாவுக்குப் போவீர்களா?''


''யெஸ் பேபி. ஆகஸ்டில் ஷோகப் போகிறேன்.''

இதுபோன்ற கேள்விகள் மட்டுமல்ல. இன்னும் சற்று விளக்கமான அறிவியல் பூர்வமான கேள்விகளும் கேட்கப்பட்டன. விண்வெளி வீரர்களான ராகேஷ் சர்மாவிடமும் ரவீஷ் மல்ஹோத்ராவிடமும். கேள்வி கேட்டதில் பெரும்பகுதியினர் ஆறிலிருந்து இருபது வயதுக்குட்பட்டவர்கள். எல்லாவற்றுக்கும் பொறுமையாகப் பதிலளித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். சலிக்காமல் ஆட்டோகிராப் போட்டுத் தள்ளிக் கொண்டிருந்தனர். இடையில் அவர்களுடைய நண்பர்கள் வேறு. ராகேஷ், ரவீஷ் என்று அவர்கள் பக்கம் இடித்துக் கொண்டிருந்தனர்.

மைக்கில் கணீரென்று ஒரு குரல். தாம்பரம் விமானப் படைத் தளத்தின் அதிகாரி சந்திரசேகரன் பேசினார்.

''அன்பான குழந்தைகளே, நமது, ராகேஷ் சர்மாவும், ரவீஷ் மல்ஹோத்ராவும் மனிதர்களுக்கு அப்பாற்பட்டவர்களல்ல. அவர்களுக்குக் கொடுத்த கடமையை அவர்கள் செவ்வனே நிறைவேற்றி இருக்கிறார்கள். நாளை நீங்களும், ரவீஷ், ராகேஷ் போல் வர வாய்ப்புண்டு. இப்போது நான் ஒரு ரகசியம் சொல்லப் போகிறேன். 1961–இல், ஐதராபாத்தில் நான் பணி புரிந்த போது, முதல் விண்வெளி வீரரான யூரிகாகரின் அங்கு வந்திருந்தார். உங்களைப் போல் நானும், அவருடன் போட்டோ எடுத்துக் கொள்ளவும், கையெழுத்துப் பெறவும் துடித்துக்கொண்டிருந்தேன். பத்தடி தூரத்தில் ஒரு சிறுவன், இதுபற்றிக் கவலை கொள்ளாமல் நின்றுகொண்டிருந்தான்.'' இவ்வாறு சொல்லிவிட்டு நிறுத்தினார் சந்திரசேகரன். சஸ்பென்ஸ். ''அந்தச் சிறுவன் தான் இப்போது உங்கள் முன் நிற்கும் ராகேஷ்சர்மா'' என்றவுடன் கூட்டம் ஆச்சரியத்தால் விழிகளை உயர்த்திக் கைதட்டி வாழ்த்திற்று.

முன்னதாக நடந்த நிருபர்கள் கூட்டத்தை மிகச் சிறப்பாகக் கையாண்டவர் ரவீஷும், ராகேஷும். ராணுவத்தில் நேரம் தவறாமை முக்கியமான ஒன்று.



தமிழக அரசின் சார்பில் விருது



மனைவியுடன்



ரவீஷ் மல்ஹோத்ரா

ஆனால் நிருபர்கள் கூட்டம் பதினைந்து நிமிடம் தள்ளி வைக்கப்பட்டது. முதலில் பேச ஆரம்பித்த ராகேஷ், மைக் சரியாக வேலைசெய்ய வில்லையென்றவுடன் மைக் இல்லாமல் பேச ஆரம்பித் தார்.

ரவீஷிடம் ஒரு கேள்வி:

''ராகேஷ் வானத்தில் பறந்து கொண்டிருந்த போது நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்''

''நான் கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருந் தேன்.''

இடையில் புகுந்தார் ராகேஷ்.

''நான் மனப்பூர்வமாகச் சொல்கிறேன். நம்முடைய நெருங்கிய சகா ஒருவர் நம்மைக் கீழிருந்து கண் காணித்துக் கொண்டிருக் கிறார் என்ற எண்ணமே எனக்கு மிகுந்த மனோ பலத்தைக் கொடுத்தது.''

பத்திரிகையாளர் கூட்டத்தில்



''நீங்கள் விண்கலத்தில் இருந்த போது உங்களுக்கு Sky Sick அல்லது Home Sick இருந்ததா?'' என்றார் ஒரு பத்திரிகையாளர்.

''எனக்கு எந்தவிதமான Sick–ம் இல்லை.''

''அங்கேயே இருக்கச் சொன்னால் இருந்து விடுவீர் களா?''

''நோ. பூமியில் வசிக்க வும், விண்வெளியில் வேலை செய்யவும் பிரியப்படுகி றேன்.''

ராகேஷ், ரவீஷ் இருவரில் ரவீஷ்தான் வயதிலும் அனு பவத்திலும் சீனியர் ஆனால் அதிர்ஷ்டம் அடித்தது ராகேஷுக்குத் தான். ராகேஷ் வானத்தில் 1600 மணி நேரம் பறந்திருக் கிறார். 3400 மணி நேரம் பறந்திருப்பார் ரவீஷ்.

''சீனியரான உங்களை விட்டு விட்டு ராகேஷை அனுப்பினார்களே! உங்க ளுக்கு வருத்தமாக இல் லையா?''

''நோ. கொஞ்சம்கூட வருத்தமில்லை'' என்றார் ரவீஷ்.

''மறுபடியும்விண்வெளிக்கு செல்வதானால் மீண்டும் நீண்ட பயிற்சி தேவையா?''

''ஒரு வாரம் மீண்டும் பயிற்சி செய்தால் விண் வெளிக்குச் செல்லும் தகு தியைப் பெற்றுவிடுவேன்.''

தாம்பரத்திலிருந்து வள் ளுவர் கோட்டத்துக்கு ஊர் வலமாகக் கிளம்ப அவசர மாகச் சென்ற ராகேஷிடம் ''உங்களுக்கு கடவுள் நம் பிக்கை உண்டா; எந்தக் கட வுளை வணங்குகிறீர்கள்?'' என்று கேட்ட போது ராகேஷ், ''நான் எந்த குறிப்பிட்ட கடவுளையும் வணங்குவது கிடையாது. ஆனால் கடவுள் நம்பிக்கை உண்டு'' என்றார்.

''ராகேஷ் உங்களுக்குப் பிடித்த கலர்?''

சற்று நேரம் யோசித்து விட்டு ''நேவி ப்ளு''என்றார் ராகேஷ்.

• • •

வள்ளுவர் கோட்டம் வரை திறந்த ஜீப்பில் வந் தார்கள். ஆங்காங்கே முடிச்சு முடிச்சாக மக்கள் கூட்டம். ராகேஷும், ரவீஷும், வலது கையையும் இடது கையையும் கோத்துக் கொண்டுகைகாட்டியபடியே வந்தார்கள்.

கூட்டத்தில் யார்ராகேஷ் யார் ரவீஷ் என்ற போது ஒருவர் கூறினார்.

''மீசை இல்லாதவர் ராகேஷ். மீசை வைத்திருப் பவர் ரவீஷ்.''

• • •

வள்ளுவர் கோட்டத்தில் விழா சரியாக ஆறுமணிக்கு ஆரம்பித்து ஏழு மணிக்கு முடிந்து விட்டது. (எம்.ஜி.ஆர். கலந்து கொண்ட எந்த விழாவாவது இவ்வளவு சீக்கிரத்தில் ஆரம்பித்து முடிந்தது உண்டா?)

ரவீஷ் பேசும் போது "எங்கள் விண்வெளிப்பயணம் இந்தியாவிலுள்ள இளைய தலைமுறையினரையும், சின்னஞ்சிறு சிறுவர்களையும் கூட விண்வெளி அறிவியல் பற்றிப் பேச வைத்திருக்கிறது" என்றார்.

கேட்டுக் கொண்டிருந்தவர், "ரொம்ப சரி" என்று முணுமுணுத்தனர்.

மேடையில் எம்.ஜி.ஆரும் ரவீஷ் மனைவியும் (அசப்பில் மேனகா காந்தி மாதிரியே இருக்கிறார்.) பேசிக்கொண்டனர்.

இரு விண்வெளி வீரர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் அளித்த நினைவுப் பரிசில், வீரர்களின் உருவப் படம், இந்திய சோவியத் நினைவு உலக உருண்டை விண்வெளிச் சின்னம் (சூரியன் ரதம் ஓட்டுவது) விண்வெளி ஓவியங்களை இருந்தன.

ராகேஷ், ரவீஷ் பேச்சை மொழி பெயர்த்த அவ்வை நடராசன் சொன்ன ஒரு விஷயம்: ரவீஷிடம் அவ்வை சொன்னாராம், "உங்கள் ராகேஷை விட எங்கள் முதல்வர் தான் முதல் விண்வெளி வீரர்."

"அப்படியா?" எப்படி?"

"ரொம்ப வருடங்களுக்கு முன்பே 'கலையரசி' என்ற படத்தில் விண்வெளி வீரராக நடித்திருக்கிறார்."

"ஆ... அப்படியா...?" என்று சிரித்தாராம் ரவீஷ்.

இரவு எட்டு மணி. ராஜாஜி ஹாலில் விண்வெளி வீரர்களுக்கு அரசு அளித்த விருந்தில் சுமார் 400 பேர் கலந்து கொண்டனர். விருந்தின் முடிவில் விண்வெளி வீரர்களுக்கு நடராஜர் சிலை, தஞ்சாவூர் தட்டு. அவர்கள் மனைவிகளுக்குப் பட்டுப் புடவை வழங்கப்பட்டன. விண்வெளி வீரர்களின் குழந்தைகளுக்கு 'எல்காட்' கடிகாரம் வழங்கப்பட்டது.

விருந்து முடிந்ததும், ரவீஷிடமும், ராகேஷிடமும், ரஷ்ய மொழி கற்றுக்கொண்டவர்களை: அந்த மொழியில் கையெழுத்துபோடுங்கள் என்றவுடன் 'இந்தியாவில் இதுதான் நாங்கள் போடும் முதல் ரஷ்ய கையெழுத்து'' என்று கூறிக் கையெழுத்துப் போட்டுத் தந்தனர்.

- காலையிலிருந்தே யூனிபார்ம் அணிந்திருந்த விண்வெளி வீரர்கள் இரவு விருந்துக்கும் அதே உடையிலேயே வந்திருந்தனர்.
- விருந்தில் அவர்கள் சாப்பிட்டது நான்- வெஜிடேரியன்.
- வள்ளுவர் கோட்டத்துக்கும் சரி, ராஜாஜிஹாலுக்கும் சரி, விண்வெளி வீரர்கள் அவர்கள் குழந்தைகளைக் கூப்பிட்டுக் கொண்டு வரவில்லை.
- விருந்து முடிந்த பின் நடந்த ஸ்வர்ணமுகியின் நடனத்தை ரசித்தனர்.

படங்கள்: சுபா


# கும்பகோணம், லலிதா பார்மஸி

(உரிமையாளர்: **Dr. V.R.L. சர்மா**)

ஸ்தாபிதம்: 1942 D.L. No. 40/83 போன்: 2379

**157, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை-609 001**

எமது பார்மஸியின் தலைமையகம் மேலே கண்ட விலாசத்தில் செயல்பட்டு வருகிறது. தங்களுக்குத் தேவையான எமது தயாரிப்புகளை தபால் மூலமோ, நேரிலோ இவ்விடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். எமது மருந்துகள் யாவும் கீழ்க்கண்ட எமது கிளைகளிலும் கிடைக்கும்.

**1. லலிதா பார்மஸி**
39, ரங்கநாதன் தெரு, தியாகராயநகர், சென்னை-600 017 போன்: 441454

**2. லலிதா பார்மஸி**
105, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை-600 004 போன்: 73007

**3. லலிதா பார்மஸி**
81, வடக்கு ரத வீதி, சிதம்பரம்

N.B.: கும்பகோணத்தில் எமது பிராஞ்ச் விரைவில் செயல்படும்.

நேரிலோ தபால் மூலமோ வைத்திய ஆலோசனை பெற விரும்புபவர் எமது டாக்டரின் உதவியாளர் **Dr. R. தியாகராஜன்** அவர்களுடன் தொடர்பு கொள்ளக் கோருகிறோம்.



## "நம்ம வீட்டுக் கல்யாணம்!"

பல துறைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் ஆர்வத்துடன் கூடி விருந்து அகமகிழ்ந்து, "இது நம்ம வீட்டுக் கல்யாணம்" என்று உரிமையோடு சொல்லிச் சொல்லி ஆனந்தித்த திருமணம் ஜூன் 6ல், மயிலை ஏ.வி.எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

அமரர் "கல்கி" அவர்களின் பேத்தி மணமகள் செல்வி லக்ஷ்மி. கல்கி ஆசிரியர் திரு. கி. ராஜேந்திரனின் புதல்வி. தாய் வழியில் ஸ்ரீசதாசிவம் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி ஆகியோரின் பேத்தி.

மணமகன் செல்வன் நடராஜன் பி. டெக்., டி.டி.கே. ஃபார்மா பிரதம நிர்வாகியான திரு. வி. ராமமூர்த்தி, அவர்களின் குமாரன்.


பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், இசைக் கலைஞர்கள், தொழிலதிபர்கள், விளம்பரத்துறையினர், அரசியல்வாதிகள், திரை உலகப் பிரமுகர்கள், பத்திரிகை ஏஜெண்டுகள், அமைச்சர்கள், அரசுத்துறை அதிகாரிகள், டாக்டர்கள் என்று பல துறைகளைச் சேர்ந்தவர்களும் விஜயம் செய்து மணமக்களை வாழ்த்தினர். அமைச்சர்கள் திரு. ஹண்டே, திரு. வீரப்பன் ஆகியோரும் தமிழக சட்டசபை, மேலவைத் தலைவர்களான திரு. ராஜாராம், திரு. ம. பொ. சி. ஆகியோரும் வந்திருந்து சிறப்பித்தனர். பிரதமர் இந்திராகாந்தி வாழ்த்துமடல் அனுப்பியிருந்தார்.

இரு இளைஞர்களும் திரு. லட்சப்பா பிள்ளை அவர்களின் மங்கள நாதஸ்வர இன்னிசை திருமணமண்டபத்தை நாதவெள்ளத்தில் ஆழ்த்தி இருந்தது.

விமரிசையாக நடந்த இந்தத் திருமணத்தில் மாலை வரவேற்பின்போது, லால்குடி ஸ்ரீ ஜெயராமனும் உமையாள்புரம் ஸ்ரீ சிவராமனும் பக்கவாத்தியம் வாசிக்க செம்மங்குடி ஸ்ரீ சீனிவாச அய்யர் அவர்களின் கச்சேரி அற்புதமாக அமைந்தது. 'என்றென்றும் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கக் கூடிய மறக்க முடியாத கச்சேரி" என்று வந்திருந்த அனைவரும் கூறிப் பரவசமடைந்தனர்.

மணமக்களுக்குக் கல்கி நேயர்களின் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் வேண்டுகிறோம்.

படம்: உத்ரா


இலங்கை மீது இந்தியா
படையெடுக்கச் சவால் விடுகிறேன்!...
விவசாயி
ராணுவ நடவடிக்கை

கல்கி



1984 ஜூன் 17
மலர் : 42 இதழ் : 46
ரக்தாக்ஷி ஆனி 3



# புரையோடிய புண்

பஞ்சாபில் புரையோடிவிட்ட புண்ணுக்கு அறுவைச் சிகிச்சை செய்திருக்கிறார் பிரதமர். 'ஏன், இதை முன்பே செய்திருக்கக் கூடாதா?' என்போருக்கு, 'மருந்தினால் குணப்படுத்த முடியாது என்ற நிலை வரும்போது தான் சஸ்திர சிகிச்சையை நாட வேண்டும்' என்பதே பதில். முன்பே இந்த நடவடிக்கையை எடுத்திருந்தால் மக்களுடைய, முக்கியமாகப் பஞ்சாபியருடைய முழு அனுதாபமும் ஆதரவும் கிட்டாமல் போயிருக்கலாம். இனி மேலும் தாமதித்திருந்தாலோ ஒருவேளை பாரததேவி தனது ஓர் அங்கத்தையே இழக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கலாம். அதைத் தவிர்க்கவே ஓர் ''எமர்ஜென்ஸி ஆபரேஷன்'' நடந்தது. ராணுவத்தைப் பஞ்சாபில் பொற்கோயிலுக்குள்ளேயும் அனுப்புவது என்ற முடிவை மிகுந்த மனவேதனையுடன்தான் பிரதமர் எடுத்திருப்பார் என்பதில் ஐயமில்லை. எனினும் தவிர்க்க முடியாத முடிவாகி விட்டது. சரியான நேரத்தில் சரியான நடவடிக்கை எடுத்த பிரதமரை நாடு வாழ்த்துகிறது.

பொற்கோயிலுக்குள் தீவிரவாதிகளின் தேர்ச்சிபெற்ற ராணுவப் படையே இருந்தது என்பதும் அவர்களிடம் ரைஃபிள்கள், மிஷின்கன்கள், ஸ்டென்கன்கள் மட்டுமின்றி மிக நவீனமான மிஸைல்களும் டாங்கி எதிர்ப்பு ராக்கெட்டுகளும் கூட இருந்தன என்பது தெரிய வந்துள்ளது. இந்த நவீன ஆயுதங்களால் தாக்கப்பட்டு நமது ராணுவத்தினரில் அறுபது பேர்களுக்கு மேல் வீரமரணம் அடைந்துள்ளனர். வன்முறையால் விரும்பியதையெல்லாம் பெறலாம் என்ற நினைப்போடு, இதற்கு அன்பு மார்க்கத்தையே போதிக்கும் சீக்கிய மதத்தின் பிரதான பொற்கோயிலையே தங்கள் கோட்டையாக்கிக் கொண்ட தீவிரவாதிகளின் போக்கை ஏற்க முடியாது; அனுமதிக்கவும் கூடாது. எனவேதான் ராணுவ நடவடிக்கைக்கு அவசியம் நேர்ந்தது.

ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்து முடிந்தாலும் ரணங்கள் ஆற வேண்டும். இந்த நேரத்தில் மிகவும் பெருந்தன்மையாக நடந்து கொண்டு சீக்கிய மக்களின் அன்பைக் குறையின்றிப் பெற வேண்டிய பெரும் பொறுப்பு புதுதில்லிக்கு உண்டு. சண்டிகார் பஞ்சாபுக்கே உரியது என்பது போன்ற சீக்கியரின் நியாயமான கோரிக்கைகள் பலவும் தாமதமின்றி ஏற்கப்பட வேண்டும். மற்ற பல பிரச்னைகளை ஜனநாயக முறையில் பேச்சு வார்த்தை நடத்தி பரஸ்பரம் விட்டுக் கொடுத்துத் தீர்ப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும். பஞ்சாபில் செய்திகள் பிரசுரம், ஒலிபரப்பு முதலியவற்றுக்கு உள்ள தடைகள் உடனடியாக நீக்கப்பட்டு ஜனநாயக சக்திகளுக்கு முழுச்சுதந்திரம் தரப்பட வேண்டும். பிரதமர் இவற்றை நினைவில் கொள்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

இதற்கு மறுபுறமாக, வன்முறையில் நாட்டம் கொண்ட தீவிரவாதிகளின் பாதிப்பிலிருந்து இப்போது விடுபட்டு விட்டதால் அகாலிதளத்தின் மிதவாதத் தலைவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளலாம். ஒருபுறம் மக்களின் நல்லாதரவைப் பெறவும் மறுபடியும் தங்கள் கோரிக்கைகளின் தீவிரத்தைத் தணித்துக் கொண்டு அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தவும் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

பாரத அன்னையின் உடலில் புண்ணாக அன்றி வெற்றித் திலகமாக விளங்கட்டும் பாஞ்சாலம்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

# திராணியின்றி திணறும் அரசு

● கல்கி கோடைமலர் கண்டேன்! ஆனந்தம் கொண்டேன்! லேட்டாக வந்தாலும் சூடாக இருந்தது! ஹரீஷ், உத்ரா, சுபா, சாரதி எடுத்த வண்ணப்படங்கள் குளுமையிலும் குளுமை! குட்டிப்பாப்பா, சுட்டிப்பாப்பா அடித்த ஜோக்குகள் அருமை! 'உதய்'யின் ''பேட்டி'' சித்திரக்கதை நல்லதொரு தமாஷாக இருந்தது! கோடை விடுமுறையை குதூகலமாகக் கொண்டாட, ''கல்கி'' கோடைமலர், பெரிதும் உதவியது.

சாத்தூர்–3. எம். செல்லையா

● கலைஞரின் சுப்பிரமாலை அட்டைப்படத்துடன் ''கலைஞர் அறுபது'' என்ற சுவையான நிகழ்ச்சித் தொகுப்பு 'கல்கி'யில் கண்டு களிப்புற்றேன். ''காகித ஓடம் கடலலை மீது'' என்ற உருக்கமான பாடல் இடம் பெற்ற படத்தின் பெயர், ''மறக்க முடியுமா?'' அவன் பித்தனா? அல்ல.

சிவகங்கை. அ. ரமணி

● வானொலியில் 'நேரம் நல்ல நேரம்' நிகழ்ச்சியினைக் கேட்டு மகிழ்ந்தோம். கவிஞர் வைரமுத்து அவர்களின் கணீரென்ற குரலையும், புதுக் கவிதை பற்றிய அவரது கருத்துக்களையும் கேட்டுப் பூரிப்படைந்தோம். நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக இருப்பதால் தொடர்ந்து தங்களது 'நேரம் நல்ல நேரம்' நிகழ்ச்சியினை வாரம்தோறும் ஒலிபரப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை–28. கு. கிருஷ்ணசாமி.

● எஸ். இந்திரா தொகுத்தளித்த மேதைகளின் ஜோக்குகள், சிரிப்பை மட்டும் வரவழைக்கவில்லை; சிந்தனையையும் கூடக் கிளறி விடுகிறது.

திருச்சி–3. எம். ஆர். பி. கணேஷ்.

● சோமசுந்தரம் எழுதிய 'இனி என்ன?' என்ற சிறுகதை படித்தேன். வேலையிலிருந்து ஓய்வு பெற்ற ஒருவரின் மனநிலையை மிக அற்புதமாய்ச் சித்திரித்திருக்கிறார்.

குத்தாலம். த. ராஜா.

● 'கலைஞர் அறுபது' அபூர்வமான புகைப்படங்களுடனும், அரிய அருமையான அறுபது கவிக்கொழுந்துகளுடனும் இனிக்கின்றன.

வளவனூர் சி. ஆர். நாகராஜன்

## வட்டமேஜை

● இவ்வார விவாத மேடையில் இப்போது தேவையான பள்ளிக்கூட அட்மிஷனைப் பற்றி விவாதித்துள்ளீர்கள். வட்டாரப் பள்ளிக்கூடங்கள் வந்தால் தான் நடுத்தர மக்களாகிய எங்களின் பிள்ளைகள் குறைந்த கட்டணத்தில் தரமானகல்வியைப் பெற இயலும்.

விருத்தாசலம்–1 விருதை. செல்வம்.

● மறைந்த செட்டி நாட்டரசருக்குக் கல்கி செலுத்திய அஞ்சலி தக்க நேரத்தில் தரப்பட்டுள்ளது.

சிதம்பரம் என். விக்னேஷ்

● பாடியிலுள்ள ஈ. எஸ். ஐ. மருத்துவமனைக்குச் சென்றேன் டாக்டரிடம் என் உடல் நிலையை விளக்கிக் கூறினேன். அவர் என்னைக் கேட்டது. ''அதுக்கு என்ன பண்ணனும்?'' என்னத்தைச் சொல்ல? சிரிப்பதா? அழுவதா?

சென்னை–50. கே. எஸ். எஸ். மணியன்.

● பம்பாயின் மத்திய பகுதியில் வசிப்பவன் நான். இங்கே நடந்தது 'இனக்கலவரம்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் பம்பாயின் புறநகர்ப்பகுதியான 'பிவண்டியில்' மூது இனக்கலவரமாக இருந்தது. பிறகு அதன் தொடர்பாக நடந்தவை இனக்கலவரங்கள் அல்ல. சமூக விரோத



சக்திகளின் செயல். இதில் விசலக்கூத்தக்க விஷயம் என்னவென்றால், யார் கலவரங்களுக்குக் காரணம், எங்கிருந்து எப்படி இது ஆரம்பிக்கிறது என்று தெரிந்தும், இந்த சக்திகளை அடக்கமுடியாமல் திணறுகிறது அரசு. நாட்டின் தலைமைக்கே நேர்மையிலும், நன்னடத்தையிலும் தூய பொது வாழ்க்கையிலும் நம்பிக்கை இல்லாத போது, 'நீ குற்றவாளி' என்று குற்றவாளியைப்பார்த்துக் கூற எப்படி திராணியிருக்க முடியும்? எப்படி அவர்களைக் கட்டுப்படுத்த முடியும்?

இந்தகலவரங்களை ஒரு தற்காலிக நிகழ்ச்சி என ஒதுக்க முடியாது. தீவிரமாய்ப் பொது வாழ்வில் பரவி வரும் பெரு நோயின் அடையாளங்களே இவை.

பம்பாய்–8. எஸ். ராம்தாஸ்.

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)




கோல்கேட்டின் நம்பகமான ஃபார்முலா, சிறப்புடன் செயல்பட்டு நீங்கள் பல்துலக்கும் ஒவ்வொரு முறையும் உங்களுக்கு புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம் அளிக்கின்றது. பற்களுக்கு ஆரோக்கியமும் உறுதியும் தருகிறது.

எப்படி என்றால்...



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர் நாற்றத்தையும் பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச்சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.



பயன்: தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கு எதிரான பாதுகாப்பு, உறுதிமிக்க ஆரோக்கியமான பற்கள்.

ஆகவே, சாப்பிட்டு முடிந்தவுடனேயே மறக்காமல் கோல்கேட் டென்டல் க்ரீம் உபயோகித்து பிரஷ் செய்யுங்கள்.

**கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்**
**பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது!**

CKBE 882 86 TM

# மூலக் கனல்

## அத்தியாயம் 10

மேடை நாடகங்களுக்கும் இயக்கம் தொடர்புடைய இருபொருள்படும் வசனங்களுக்கும், பாடல்களுக்கும், திருமலை பெற்ற பாராட்டும், கைத்தட்டுக்களும், ஒரு சினிமா கம்பெனி அதிபரைப் பெரிதும் கவர்ந்தன. அவர் தாம் தயாரிக்க இருந்த ஒரு படத்திற்குச் சென்னையில் வந்து தங்கி வசனம் எழுதிக் கொடுக்கும்படி திருமலையைக்கேட்டார். ஒருபுறம் அவனுக்கு மலைப்பாயிருந்தாலும் மறுபுறம் அதில் ஈடுபட வேண்டுமென்று ஆசையாகவும் இருந்தது. பெருவாரியான மக்களைக் கவர்ந்து தன்பக்கம் இழுக்க அது ஒரு சாதனம் என்று அவனுக்குப் புரிந்திருந்தது. இயக்கமே அப்படித்தான் புரிந்து கொண்டிருந்தது.

இதற்கிடையில் பதவியிலிருக்கும் அமைச்சராக எழிலிருப்புக்கு விஜயம் செய்த சின்னக் கிருஷ்ணராஜனுக்கு எதிராக அவனும் இயக்கத் தோழர்களும் கறுப்புக்கொடி காட்டினார்கள். காங்கிரஸ் அமைச்சராகப் பதவியிலிருந்த சின்ன உடையார் தான் தேர்ந்தெடுக்கப்பட்டபகுதி மக்களுக்கு எந்தநன்மையும்செய்யவில்லை என்பதைக் காட்டவும் மதச்சார்பற்ற அரசின் பிரதிநிதியாகிய உடையார் எழிலிருப்புத் தேரோட்டத்தில் முதல் வடம் பிடிக்க வருவதைக் கண்டித்தும் கறுப்புக் கொடி பிடிக்கப்பட்டது. கறுப்புக்கொடி காட்டுவதற்கான இரண்டாவது காரணம் ஊரில் யாருக்குமே பிடிக்கவில்லை. சின்ன உடையாருக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து தேருக்கு முதல் வடம் பிடிப்பது என்பது வழக்கமாகி இருந்தது. ஒரு வம்புக்காக அதை எதிர்ப்பது என்பது யாருக்கும் திருப்தி தரவில்லை. திருமலைக்கு இரகசியமாகத் தமிழ் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த வேணுகோபால சர்மா கூட அதை அவனிடமே கண்டித்தார். ''மதச்சார்பற்ற என்பதற்கு அர்த்தம் எல்லா மதங்களையும் சமமாகப் பாவிக்கிறது என்பதுதானே ஒழிய, இந்து மதத்தை மட்டும் ஒழிக்கிறதுங்கறதில்லே ஒரு கிறிஸ்தவ அமைச்சரோ, இஸ்லாமிய அமைச்சரோ இப்படித் தங்கள் மத சம்பந்தமான விழாவுக்கு வந்தாங்கன்னு அவங்களுக்குக் கறுப்புக் கொடி பிடிக்கிற துணிச்சல் உங்களுக்கு உண்டா? ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பது போல நடந்து கொண்டிருக்கீங்களே!''

''சாமி! இதெல்லாம் அரசியல்! உங்களுக்குப் புரியாது. நீங்க கண்டுக்காம

நா. பார்த்தசாரதி



ஒதுங்கிக்குங்க! எங்களுக்கு உடையாரை எதிர்க்கணும். அதுக்கு என்ன வேறச் செய்வோம்'' என்று அவருக்குப் பதில் சொல்லிச் சமாளித்தான் திருமலே. சர்மா எத்தனேயோ தடவை திருப்பித் திருப்பிக் கண்டித்தும் அவன் அவரைச் சாமி என்று தான் விளித்தான்.

அவன் சினிமாக் கம்பெனிக்கு வசனம் எழுதுவதற்காகச் சென்னேக்குப் புறப்பட வேண்டிய சமயத்தில் இந்தக் கருப்புக் கொடிப் போராட்டம் வந்ததால் பயணம் தடைப்பட்டது. திருவிழாவில் தேரோட்டத்துக்கு இடையூறாகக் கலவரம் மூளுமோ என்று பயந்தனர் போலீஸார். கருப்புக் கொடிப் போராட்டத்துக்கு அனுமதி தரப் படவில்லே. தடையுத்தரவும் பிறப்பிக்கப் பட்டது.

துணிந்து தடையை மீறிக் கருப்புக்கொடி காட்டியதால் கைதாகி ஒரு வாரம் கழித்துத் தான் வெளியிலே வர முடிந்தது. உடையார் எதைச் செய்தாலும் எதிர்க்க வேண்டுமென்ற திருமலேயின் போக்கு ஊராருக்குப் பிடிக்கவில்லே. அதனுல் இந்தக் கருப்புக் கொடிப் போராட்டம் ஆதரவற்றுப் பிசுபிசுத்துப் போயிற்று. விடுதலேயானதும் அவன் சென்னேக்குப் புறப்பட வேண்டியிருந்ததனுல் போராட்டத்தின் தோல்வியை அவன் பொருட்படுத்தவில்லே. ஆனுல் கருப்புக் கொடிப் போராட்டத்தைத் தவிரவேறெருதோல்வியும் அவனுக்கு ஏற்பட்டது.

தனக்கு முதல் முதலில் ஓர் இரவுப் பறவையாகப் பழக்கமாகிப் பின்பு தன் நாடகங்களில் நடிக்கும் நடிகையாகி விட்ட பெண்ணேத் தவிர எழிலிருப்பிலேயே அவளோடு இன்னெரு வீட்டில் ஏறக்குறைய மனேவியாக வாழ்ந்த மற்ரெரு பெண்ணேத் தான் அவன் தன்னேடு சென்னேக்குக்கூட்டிக் கொண்டு போவதாக முடிவு செய்திருந்தான். சண்பகத்தைப் போன்ற அதிகப்படிப் பறிவில்லாத கிராமத்துப் பெண்ணே அவன் சென்னேக்கு அழைத்துப் போவதில்லே என்றே முடிவு செய்து விட்டான். நீண்ட காலமாகச் சண்பகத்தைப் பார்க்காமலே இருந்து விட்ட அவன் ஊருக்குப் போவதற்கு முன் சொல்லிக் கொண்டு போகலாம் என்று அவளிடம் போனுன். இவன் போவதற்கு முன்பே 'சக்களத்தியைத் தான் சென்னேக்கு அழைத்துப் போகப் போகிருன்' என்கிற தகவல் சண்பகத்துக்கு எப்படியோ எட்டியிருந்தது. இதற்கு நடுவில் ஒருநாள் வெட்கத்தை விட்டு நந்தவனத்துக்குத் தேடிப் போய்த் தன் சகோதரனேச் சந்தித்துத் தன்னுடைய சிரமங்களே எல்லாம் சொல்லி விட்டு வந்திருந்தாள் அவள். அவனும் அவள்மேல் அனுதாபத்தோடு எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டிருந்தான். ''கஷ்டகாலத்திலே நம்ம கூடப்பிறப்புத் தான் நமக்கு உதவுவாங்க. எதுக்கும் உன் கூடப் பிறந்தவனேப் பார்த்து எல்லாம் சொல்லி வையி'' — என்று இந்த விஷயத்தில் பக்கத்து வீட்டு ஆச்சி தான் சண்பகத்துக்கு யோசனே சொல்லியிருந்தாள். இப்போது புருஷன் தன்னிடம் சொல்லிக் கொண்டு போக வரப் போவதை அறிந்ததும் சண்பகம் அவசர அவசரமாக ஆச்சி மூலமே சகோதரனுக்குத் தகவல் அனுப்பினுள். அவனும் உடனே வந்தான். தொடர்ந்த நரக வாழ்க்கையாகப் பட்டியில் அடைப்பட்ட மாடு போல் வாழ்வதைவிட இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று சண்பகம் இப்போது துணிந்திருந்தாள்.

''முதல்லியே நீ இங்கே இருக்கவேணும். ஆச்சி வீட்டிலே இரு. கொஞ்ச நேரம் நான்





## அருள்வாக்கு

பரம ஸாத்வீக உணவானாலும்கூட அளவு முக்கியம். ஒரு சாப்பாடு, ஒரு பலகாரம் என்றிருப்பது நல்லது. இல்லாவிட்டால் இரண்டு சாப்பாடு ஒரு டிஃபன் என்று இப்போது பெரும்பாலோர் வைத்துக் கொண்டிருக்கிற மாதிரியே இருந்தாலும் ஒவ்வொரு வேளையும் மிதமாகச் சாப்பிட வேண்டும். வைத்திய சாஸ்திரம் தர்ம சாஸ்திரம், இரண்டின் பிரகாரமும் அரை வயிற்றுக்குத்தான் சாப்பிடணும். கால் வயிற்றுக்குத் தீர்த்தம் குடிக்கணும். மற்ற கால் வயிறு வாயுவுக்கு விட்டு விடவேணும். தினசரி இரண்டு சாப்பாடு, ஒரு சிற்றுண்டி என்று வைத்துக் கொண்டாலும் சனிக்கிழமை, குரு வாரம், ஸோமவாரம் (மாதா, பிதா இல்லாதவரானால்) அமாவாஸ்யை இவைகளும் அவரவர் குலதெய்வத்தைப் பொறுத்து ஷஷ்டி, கிருத்திகை, சதுர்த்தி, பிரதோஷம் ஆகிய தினங்களில் ஒருவேளை சாப்பாடு ஒருவேளை பலகாரம் என்று வைத்துக்கொள்ள வேண்டும். ஞாயிற்றுக்கிழமையில் அஸ்தமனத்துக்கு அப்புறம் சாப்பிடக்கூடாது. அதனால் மத்யானம் சாப்பிட்டுவிட்டு அஸ்தமனத்துக்கு முந்தியே பலகாரம் பண்ணிவிட வேண்டும். பதினைந்து நாளுக்கு ஒருமுறை 'லங்கணம்' அதாவது முழுப்பட்டினி போடணும். அதுதான் ஏகாதசி உபவாசம். மற்ற நாட்களிலும் மித போஜனமே பண்ண வேண்டும்.

பசி என்கிறது ஒரு வியாதி மாதிரி. வியாதிக்கு மருந்து 'டோஸேஜ்' பிரகாரம்தானே சாப்பிடுவோம்! கொஞ்சம் கூட அதிகம் சாப்பிட மாட்டோமல்லவா? அதே மாதிரி பசி என்கிற வியாதிக்குச் சிகித்ஸையாக மருந்து மாதிரி உணவு உட்கொள்ள வேண்டும்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

பேசிச் சமாளிக்கிறேன். அப்புறம நுமர்ன்னு தற்செயலா வர்ற மாதிரி நீயும் ஆச்சியும் உள்ளே வாங்க'' என்று சொல்லிச் சகோதரனை ஆச்சி வீட்டில் வந்து மறைந்திருக்கச் செய்தான் சண்பகம்.

எதிர்பார்த்தபடி இருமலை வந்தான். அவசர அவசரமாக இரண்டு வார்த்தை சொல்லிவிட்டுக் கிளம்பும் வேகத்தில், ''இந்தா சண்பகம் இப்போ உட்கார நேரமில்லே. எனக்கு அவசரம். மெட்ராஸ்புறப்பட்டுப்போறேன். சினிமாவுக்குவசனம்எழுதற சான்ஸ் வந்திருக்கு. மாசா மாசம் பணம் வந்து சேரும். வீட்டையும், பயலையும் கவனிச்சிக்கோ...?'' — என்று ஆரம்பித்தான்.

''நீங்க மட்டும்தான் தனியாப் போறியளா?''

''ஆமாம்.. அதுக்கென்ன...?''

''பொய் சொல்லாதீங்க....அந்த வடக்குத் தெருக்காரி உங்களோட வர்ரதாக் கேள்விப்பட்டேனே? உள்ளதைச் சொல்லுங்க''—

''அப்படித்தான்வச்சுக்கயேன். அவளை எங்கூட இட்டுகிட்டுபோறதுக்கு உன் பெர்மிஷன் எனக்குத் தேவையில்லே''

''ங்களுக்கு எதுக்குத்தான் என் பர்மிஷன் தேவை? நீங்கதான் எல்லாப் பாவத்துக்கும் துணிஞ்ச மனுஷனாச்சே...?''

''ஆங்... போடி. உங்கிட்டப் பெரிசா அட்வைஸ் கேக்க நான் இங்கே வரலே, பாவ புண்ணியத்துக்கு நீதான் ஹோல்சேல் ஏஜென்ஸி எடுத்திருக்கியோ...?''

இந்தச் சமயத்திலே சண்பகத்தின் சகோதரனும் ஆச்சியும் உள்ளே நுழைந்தனர்.

''வாப்பா மச்சான் நீ எப்ப வந்தே?''— என்று அவனை எகத்தாளமாக வரவேற்றான் இருமலை.

''நீங்க மெட்ராஸ் போறதா இருந்தா அக்காளையும் ராஜாவையும் தான் கூடக் கூட்டிக்கிட்டுப் போகணும். அதுதான் முறை.''

''முறை என்னடா பெரிய முறை நான் எதைச் செய்யறேனோ அதுதான்டா முறை''

''இப்படி முரட்டடியாப் பேசினா எப்படித் தம்பி? சண்பகத்துக்கும் உங்களை விட்டா வேற யார் இருக்காங்க நீங்கதானே எல்லாம்?''— என்று ஆச்சியும் இதமாக எடுத்துச் சொன்னாள். அவனோ என்ன பேசுகிறோம் என்ற சுய நினைவே இன்றி, ''ஏன்? வேற யார் இருக்காங்கன்னு குறைப்பட்டுக்க வேண்டாமே. யாரையாவது நல்ல ஆளாப்பார்த்துத் தேடிக்கிறதுதானே?'' — என்று சொல்லியதும், ''டேய் நாக்கை அளந்து பேசு'' — என்று சண்பகத்தின் தம்பி கையை ஓங்கிக்கொண்டு இருமலைமேல் பாய ஆச்சி அவனைத் தடுத்தாள். அவன் கூறிய வார்த்தைகள் சண்பகத்தின் ரோஷத்தைக் கிளறிவிட்டன. அவள் எரிமலையாகச் சீறி வெடித்தாள்.

''உன் புத்திதானே உனக்குத் தோணும். நாய் எச்சிக்கலையிலே வாய் வைக்கிற மாதிரி நீ ஊர் ஊராப் பொம்பிளைப் பித்துப்பிடித்து அலையிறியே. அதுமாதிரி என்னையும் நினைச்சியா? நான் நல்ல வமிசத்திலே நல்ல அப்பனுக்குப் பொறந்தவடா'' — என்று சண்பகம் கூறியதும் அவள் கழுத்தை நெரித்துக்கொன்று விடுவது போல அவன் மேல் விருட்டென்று

பாய்ந்தான் திருமலை. அவனுடைய மிகவும் பலவீனமான பகுதியை அவன் சொற்கள் சீண்டி விட்டன. ஆச்சியும், சண்பகத்தின் தம்பியும் அக்கம்பக்கத்தாரும்தலையிட்டுவிலக்கி விடாவிட்டால் திருமலை சண்பகத்தைக் கழுத்தை நெரித்துக் கொன்றிருப்பான் அப்போது.


''அறுத்தெறியறதுக்கு நீ என்கழுத்திலே தாலி கூடக் கட்டலே... இன்னியிலேருந்து உனக்கும் எனக்கும் இனிமேப் பேச்சு வார்த்தையே கிடையாது. உன் மூஞ்சியிலேயே இனிமே முழிக்க மாட்டேன்'' என்று குழந்தையை எடுத்துக் கொண்டு அந்த வீட்டிலிருந்து வெளியேறித் தம்பியோடு மறுபடி நந்தவனத்துக்கே போய் விட்டாள் சண்பகம். எந்த ஒரு பலவீனமான பகுதியைச் சீண்டுவதற்காக அவன் எரிபட்ட னத்திலிருந்து ஜன்ம விரோதியாக மாறினானோ அதே பகுதியை இப்போது கீறி ரணப்படுத்தி விட்டாள் சண்பகம். எல்லாவற்றையும் மறக்க மறக்க அவன் வடக்குத்தெரு ஆசைநாயகியோடு பட்டணம் புறப்பட்டான். சினிமா உலகம் அவனைச் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றது. அவனது வாழ்க்கையில் மற்றோர் அத்தியாயம் புதிதாக ஆரம்பமாகியது. முதல் படம் அமோகமான வெற்றியை அடைந்தது. நூறு நாளையும் கடந்து பல ஊர்களில் படம் 'ஹவுஸ் ஃபுல்' ஆக நடவே ஒரே சமயத்தில் பல படங்களுக்கு வசனம் பாடல்கள் எழுத வேண்டிய சான்ஸ்கள் அவனைத் தேடி வந்தன. ஓர் உதவியாளர் நம்பிக்கையானவராக வேண்டியிருந்தது. எழிவிருப்புப் புலவர் வேணுகோபால சர்மாவுக்குத் தந்தி கொடுத்தான். சர்மா உடனே அடுத்த ரயிலிலேயே சென்னைக்குப் புறப்பட்டு வந்து சேர்ந்தார். (தொடரும்)


கல்கி

வழங்கும்



நேரம் நல்ல நேரம்



விவிதபாரதி நிகழ்ச்சி

பிரதி வியாழன் இரவு 9-30க்கு

சென்னை, திருச்சி நிலையங்களில்

ஒலிபரப்பாகிறது

கல்கி வாசகர்களுடன்

உரையாடுபவர்

கவிஞர் வைரமுத்து

இன்றிரவு ஜூன் 14 ல

கேட்கத் தவறாதீர்கள்!

தயாரிப்பு: எஸ். வி. ரமணன்

# கோடு தாண்டிய சீதைகள்

## தேவிபாலா

அந்தக் கடிதத்தை நாலாவது முறையாகப் படித்து விட்டாள் பவித்ரா...

''குக்கர், சத்தம் குடுத்துப் பத்து நிமிஷத்துக்கு மேல ஆச்சு... இன்னும் வெளியே வெக்காம என்ன பண்ணறே?'' மாமியாரின் அதிகாரக் குரல் ஊஞ்சல் சங்கிலியோடு சேர்ந்து கர்ணகடூரமாக ஒலிக்கிறது....

''தோ... பாக்கறேம்மா...''

தேங்காய் துருவும் போது...

தம்பியின் அந்த லெட்டர்...

அரைக்கும்போது...

அந்த லெட்டர்...

துப்புரவாக நிம்மதியை இழந்துபோகிறாள்.

சாப்பிட டைனிங் டேபிளில் உட்காரும் போது மாமனார் மெல்ல பேச்சை ஆரம்பிக்கிறார்...

''உனக்கு G.P.F.—லே எவ்ளோ கிடைக்கும் பவித்ரா...?''

''கிட்டத்தட்ட நாலாயிரம் கிடைக்கும்பா...'' டக்கென்று பதில் சொல்லும் ராம் மெல்லச் சிரிக்கிறான்...

பவித்ரா பதில் பேசவில்லை...

''நமக்குக் கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபா துண்டு விழறதே...''

நாத்தனார் லதாவின் கல்யாணச் செலவுக்கான பட்ஜெட் தடபுடலாக அங்கே அலசப்படுகிறது...

''உன்னால வேற எதுவும் முடியாதா ராம்?''

''வழியில்லேப்பா... இதுலே ரெக்கவரி நாலுக்கு மேலே போயிண்டிருக்கு...''



''வேற என்னடாப்பா வழி? கல்யாணத்துக்கு இன்னும் சரியா ஒரு வாரம் தான் இருக்கு...'' என்று அம்மா கவலையோடு கேட்கிறாள்...

''ம்... அதான் நானும் யோசிக்கறேன்.''

''ஏன், பவித்ரா, உனக்கு சொஸைட்டி லோன் உண்டு இல்லியா?''

''இன்னும் ஐநூறு ரூபா பாக்கி இருக்கே... அதை அடைச்சாத்தான் எடுக்க முடியும்...''

''கிட்டத்தட்ட நாலாயிரம் ரூபா கிடைக்குமே''

''ம்...''

''அப்ப அந்தப் பணத்தை அடைச்சிட்டா எடுக்கலாமா?''

''கேட்டுப் பாக்கணும்...''

''நானே நாளைக்கு உங்க ஆபீசுக்கு வர்றேன்... ப்ரொவிஷன் இருந்தா பிடிச்சிரலாம்... அப்பக் கூட மூவாயிரத்துக்கு மேலே துண்டு விழறதே...''

சாதத்தில் ரசத்தை ஊற்றிப் பிசையும் பவித்ராவுக்கு அதை வாய்க்குக் கொண்டு போகப் பிடிக்கவில்லை...

G.P.F.

சொஸைட்டி...

இரண்டு கதவுகளும் அடைபட்டுவிட்டது...

என்ன செய்யலாம்?...

முகம் கழுவிக் கொள்ள பாத்ரூம் போனவள், ரவிக்கைக்குள் வைத்திருந்த அந்தக் கடிதத்தை எடுத்துத் திரும்பவும் படிக்கிறாள்...

அன்புள்ள அக்கா... நலம்... ஒரு சந்தோஷச் செய்தி. எனக்கு... கம்பெனியில கேஷியர் வேலைக்கான ஆர்டர் நேற்று வந்தது... நல்ல சம்பளம்... இலவச வீட்டு வசதி எல்லாம் உண்டு. வேலை தேடித் தோற்றுப்போன எனக்கு, நம்பிக்கையைத் துப்புரவாக இழந்து விட்ட எனக்கு, இது கைகொடுத்திருக்கிறது. ஆனால் ஒரு கஷ்டம்.. கேஷ் செக்யூரிட்டி மூவாயிரம் ரூபாய் கட்டாவிட்டால் அந்த வேலை கிடைக்காது... எனக்கு உன்னைத் தவிர ஆதரவு வேறு யாரும் இல்லை... பணத்தை இன்னும் ஒரு வாரத்துக்குள் கட்டியாக வேண்டும்... ஏற்பாடு செய்து விட்டுக் கடிதம் போடு. நானே வந்து வாங்கிக் கொள்கிறேன்...''

—ரகு.

இன்னும் ஒரே வாரம்...

அதாவது அடுத்த வெள்ளிக்கிழமைக்குள்.

அடுத்த வெள்ளிக்கிழமை...

அன்றுதான் லதாவின் கல்யாணம்....

மண்டைக்குள் வண்டு குடைய, கைகளால் தலையை அழுந்தப் பிடித்துக் கொண்டாள்.

''எனக்கு உன்னைத் தவிர வேறு நாதி இல்லை.''

''இன்னும் மூவாயிரத்துக்கு மேல துண்டு விழறது பவித்ரா.''

அம்மாவின் முகம் கண்ணுக்குள் வந்து போனது...

''உன் தம்பிக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சுக்குடு பவித்ரா... உன்னையும் கல்யாணம் செஞ்சு குடுத்தப்புறம் உங்கப்பா பென்ஷன்ல கால் வயிறும், அரைவயிறுமா நாங்க அவஸ்தைப் படறது உனக்குத் தெரியாதா

அவனோட எதிர்காலமே உன் கையில தான்டீ அடங்கியிருக்கு...

வலது கையைத் திருப்பித் திருப்பி இரண்டு முறை பார்க்கிறாள்...

வளையல்...

இரண்டு வளையல்கள்...

ரெண்டு சவரன்...

வித்தா கிட்டத்தட்ட மூவாயிரம் கிடைக்கும்... ரகுவுக்கு அனுப்பிடலாம்...

இது ஒண்ணுதான் வழி...

எதுக்கும் ராம்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிடணும். நாளைக்கு வளையல் எங்கேனு கேட்டா, சொல்லாம செஞ்சோம்னு தப்பாப் போயிடும்...

ரகுவோட லெட்டரையும் அவர்கிட்டக் காட்டணும்...

மனம் ஒரு விதம் தெளிவுக்கு வர, அவசரம் அவசரமாக முகம் கழுவத்தொடங்கினாள்...

அன்று, ஆபிஸிலும் வேலையில் சற்று உற்சாகமாகவே இருக்கிறாள்...


''என்ன பவி, இன்னிக்கு செம 'மூட்' போலிருக்கு...''

''அடுத்த வாரம் நாத்தனார் கல்யாண மாச்சே அதுவா இருக்கும்...''

''நீ என்ன வாங்கிண்டு இருக்கே, காஞ்சிபுரமா... பனாரஸா...''

'நூல் புடவைக்கே வழியில்லே இங்க... காஞ்சிபுரமாம்?' சன்னமாக உள்ளுக்குள் சிரித்துக் கொள்கிறாள் பவித்ரா...

மிகவும் அந்தரங்கமாகப் பேசும் வாக விடம் மெல்ல விசாரிக்கிறாள்...



''ஏன் ஸார், ரொம்ப சேதாரம் போகாம நகைகளை விக்க ஏதாவது வழியிருக்கா?''

''ஏம்மா?''

''இந்த ரெண்டு வளையல்களையும் வித்துத் தரணும்... அதுவும் உடனடியா வேணும் சார்... முடியுமா?''

''அப்படி என்னம்மா...?''

தம்பியின் கடிதத்தை நீட்டுகிறாள்...

....

''அவசியம் செய்யணும்மா... அந்தக் குழந்தையோட எதிர்காலமாச்சே... நீ செய்யாம யார் செய்வா... நான் உடனடியா ஏற்பாடு பண்றேன்...''

''தேங்க் யூ ஸார்... தேங்க் யூ வெரி மச்...''

இரவுச் சாப்பாடு ஆனதும், சமையல் கட்டைக் கழுவி முடித்து, பாத்திரம் தேய்த்து, படுக்கைக்குப் பவித்ரா வரும் போது மணி பத்தரை...

''சீக்கிரம் கதவைச் சாத்திட்டு வா...''

ஓரக் கண்ணால் கணவனைக் கவனிக்கிறாள்..

ஏராளமான உற்சாகத்தில் இருக்கிறான்... எல்லாமாக இருக்கும்...

''இரும்பு பவித்ரா...''

ஒரு கூடை மல்லிகை தலையில் ஏறி உட்கார்ந்து கொள்ள, ஆச்சரியமாக அவனைப் பார்க்கிறாள்...

''இந்தா உனக்குப் பிடிச்ச காராசேவ்''

''ஏன் இவ்ளோ குஷி இன்னிக்கு....''

''ஏன் இருக்கப்படாதா? நான் என்னிக்கு உங்கிட்ட கோவமா இருந்திருக்கேன்.... சொல்லு பார்க்கலாம்?'' இடுப்பைச் சுற்றிக் கைகளைப் படர விடுகிறான்...

சட்டென்று தம்பியின் கடிதம் நினைவுக்கு வர, இதுதான் சமயம் என்று தோன்றுகிறது...


''ரகு லெட்டர் போட்டிருக்கான்...'' அதை எடுத்துக் கொடுக்கிறாள்...

---

வாழ்க்கை போய்விட்டது என்றால் அழுது இளைப்பவர் சிலர். பொறுத்துப் பார்க்கலாம் என்பவர் சிலர். எங்கே போய் விட்டது. மீண்டும் கொண்டு வருவோம் என்று கூறுபவர் மிகச் சிலரே.

—கவியரசு கண்ணதாசன்.

அனுப்பியவர்: இ. அருமணி.



''நீ சொன்னாப் போறும்...''

''படிச்சுத்தான் பாருங்களேன்...''

பிரித்து, சுவாரசியமாகப் படிக்கத் தொடங்கியவன், படிப்படியாக முகம் சுருங்கிப் போய், அதை அவளிடமே கொடுக்கிறான்...

''என்ன செய்ய முடியும்? நமக்கே தலை முழுமுழுனு இருக்கு... வேற ஏதாவது ஏற்பாடு பண்ணிக்கச் சொல்லி லெட்டர் போட்டுடு...''

''அவனுக்கு நம்மை விட்டா வேற யார் இருக்கா? அவனை நம்பி யாரும் மூவாயிரம் தர அந்த ஊர்ல தயாரா இல்லே...''

''வேற வழியில்லையே பவி...'' அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு வளையலை மேலும் சீழுமாகத் தள்ளுகிறான்...

''இருக்குங்க...''

''என்னது?''

''இதுதான்...'' வளையலைக் காட்டுகிறாள். ''இதை வித்தா அவனோட செக்யூரிட்டியைக் கட்டிடலாம்...''

மல்லிகைப்பூ... காராசேவ் அத்தனையும் அவனைச் சுற்றிச் சுற்றி வந்து கேலி செய்கிறது... அவனும் துண்டு விழும் மூவாயிரத்துக்கு வழி செய்ய அந்த வளையல்களைத்தான் குறி வைத்திருந்தான் என்பதோ சின்ன மீன்தான் இந்த மல்லிகைப்பூ சமாசாரங்கள் என்பதோ பவித்ராவுக்குத் தெரியாது...

சட்டென்று சிரிப்பு செத்துப்போக, ''ஸாரி பவி, இதுல எனக்குச் சம்மதமில்லே... லதாவோட வாழ்க்கைப் பிரச்னை இது... அந்த வளையலை நான் கல்யாண பட்ஜெட்ல சேர்த்தாச்சு...'' என்றான்.

''அதுக்கு வேற ஏதாவது வழி பண்ணுங்க... எத்தனையோ கடன் வாங்கறோம். காலைக் கையைப் பிடிச்சு இன்னொரு மூவாயிரம் வாங்கலாம்... நானே ஷ்யூரிட்டி போடறேன்...''

''வீட்ல வச்சுண்டு ஏன் வெளில கெஞ்சணும்...''

''இது ரகுவோட வாழ்க்கைப் பிரச்னைங்க...''

''போகட்டும்... வேற வேலை ரகுவுக்குக் கிடைக்காமலா போயிடும்...''

''இல்லீங்க... அது அவ்ளோ சுலபமில்லே. வேலை தேடற முயற்சில அவன் படற அவஸ்தை எனக்குத்தாங்க புரியும்... அவன் கைநிறைய சம்பாதிச்சா நமக்கும் நாளைக்கு நல்லதுதாங்க...''

''ஆனால் யோசிக்க இது நேரமில்லே பவித்ரா... லதாவோட கல்யாணம் நெருங்கியாச்சு... கடைசி நேரத்துல யார் காலைப் பிடிக்க முடியும்? மூவாயிரம் ரூபா... பெரிய தொகையாச்சே...''

''ரெண்டு லோனுமா கிட்டத்தட்ட ஏழாயிரம் நான்தானே ஏற்பாடு பண்றேன்... அதுக்கு நான் எந்த மறுப்பும் சொல்லலியே... லதாவை என் தங்கையா நெனைச்சுத்தானே இதைச் செய்யறேன்.... லதாவுக்காவது நீங்களும், அப்பாவும்உண்டு. என் ரகுவுக்கு என்னை விட்டா யாருங்க?'' கண்கள் தளும்பப் பரிதாபமாகக் கேட்கிறாள்...

''நான் செஞ்சேன்... நான் செஞ்சேன்... சம்பாதிக்கிற திமிர் யாரை விட்டது?''

''அய்யோ திமிர் இல்லீங்க... தப்பாப் புரிஞ்சிக்க வேணாம்... நடப்பைச் சொல்றேன்...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது... தற்சமயம் லதாவோட வாழ்க்கைதான் எனக்கு முக்கியம்...''

''அப்படி இல்லீங்க... அந்த மூவாயிரத்துக்கு ரெண்டு பேருமா முயற்சி பண்ணுவோம்...இதை வித்து ரகுவுக்குத் தரலாம்னு சொல்றேன்...''

''இதுதான் முடிவா?''

.......?

''அப்ப என் முடிவை நானும் சொல்றேன். கேட்டுக்கோ... கிழிச்ச கோட்டுக்குள்ள சீதை அன்னிக்கு நிக்கல... விளைவு என்னாச்சு, லங்கைல ஒரு போரே நடந்தது.. இப்ப நான் கிழிச்ச கோட்டுக்குள்ளே நிக்க நீ மறுக்கத் தொடங்கிட்டே!''

''அன்னிக்கு லட்சுமணன் கிழிச்ச கோடு நியாயத்துக்கு... நீங்க கிழிக்கற கோடு தர்மமில்லே... இது ஒரு பட்சமான முடிவு...

''கோடு தாண்டின சீதை அசோகவனத்துல பட்ட அவஸ்தை உனக்குப் புரிஞ்சிருக்கும்...''

''அதாவது, உங்க கோட்டைத் தாண்டி நான் போனா... இந்த வளையலை வித்து ரகுவுக்குப் பணம் கொடுத்தா எனக்கும் ஒரு அசோகவனம் உண்டுன்னு சொல்றீங்க...''

''புரிஞ்சுக்கிட்டா சந்தோஷம்...''

''சம்பாதிக்கிற மனைவி ஒரு யந்திரம்... அவளுக்குன்னு சொந்த விருப்பங்கள், ஆசைகள், ஏக்கங்கள் எதுவுமே இருக்கப்படாது இல்லியா?''

......

''மனைவிங்கற ஸ்தானம் பவித்ரமானதுதான்... ஆனா அவ ஒரு மகளா, சகோதரியா இருந்தப்புறம் தான் மனைவியா வர்றான்னு பல பேருக்கு மறந்து போயிடறது.''

''இந்தப் பேச்செல்லாம் வேணாம்... உனக்குப் புருஷன் வேணும்னா, புருஷன்கூட சேர்ந்து வாழணும்னா இந்த வளையல் லதாவோட மாலைக்கு... இல்லைன்னா ரகுவோட வேலைக்கு... முடிவு உன் கையில...''

இரவு முழுவதும் புரண்டு புரண்டு படுத்தவன், விடியும் நேரம் அவசர அவசரமாக ரகுவை உடனே புறப்பட்டு வரச் சொல்லிக் கடிதம் எழுதுகிறான்...

''என்ன அது லெட்டர்?''

''ரகுவுக்குப் புறப்பட்டு வரச் சொல்லியிருக்கேன்...''

''ஏன்? வளையலை வித்து பணத்தைக் குடுக்கவா?''

எதிரே நிற்கும் கணவனைத் திர்க்கமாகப் பார்க்கிறாள் பவித்ரா...

சட்டென்று இரண்டு வளையல்களையும் கழற்றி அவன் முன் நீட்டுகிறாள்....

''பவி... நீ... நீ...''

''உங்க விருப்பம் போல செய்யலாம்... இதை லதாவோட கல்யாணத்துக்கு உபயோகப்படுத்திக்கலாம்.''

அவன் மேலே ஏதோ சொல்ல வாயைத் திறப்பதற்குள் அங்கிருந்து எழுந்து சரேலென உள்ளே போய் விடுகிறாள் பவித்ரா...

அது தன் ஆண்மைக்குக் கிடைத்த வெற்றியாகத் தலையை நிமிர்த்திக் கொண்டு நடக்கிறான் ராம்.

கல்யாணம் முடிந்து...

லதாவை அனுப்பிவிட்டு உள்ளே வருகிறான் ராம்...

பெட்டியில் துணிகளை அடைத்துக்கொண்டிருக்கிறாள் பவித்ரா... பக்கத்தில் ரகு...

''என்ன பவி, எங்க கிளம்பிட்டே?''

''எங்க வீட்டுக்கு...''

''என்ன இது திடீர்னு... எத்தனை நாளைக்கு''

''தெரியாது... அநேகமா நிரந்தரமா அங்கேயே இருக்கும்படியாகவும் வரலாம்.''

''அக்கா...''

''நீ சும்மாயிருடா...''

''பவி, என்ன விளையாடறே?''

''விளையாட்டில்லே... இது நிஜம்தான்... நீங்க கிழிச்ச கோட்டை நான் அப்பத் தாண்டலே... ஆனா இப்ப கிழிக்காத கோட்டைத் தாண்டப் போறேன்...''

''புரியலே...''

''செக்யூரிட்டி கட்ட முடியலே... அதனால என் ரகுவுக்கு அந்த வேலை இல்லே... கை நிறைய சம்பாதிக்கிற எனக்கு என் தம்பியோட வாழ்க்கைக்கு ஒரு உத்தரவாதம் குடுக்க முடியலே... இன்னமும் நான் புருஷன் வீட்டுல இருந்தா இதுதான் எனக்கு அசோகவனம்''


''அதனால''

''போறதாத் தீர்மானிச்சிட்டேன்... பிடிப்பெல்லாம் போக மிச்சம் வர்ற என் சம்பளத்துல என் தம்பிக்குக் கொஞ்ச வயித்துக் கஞ்சியாவது ஊத்தலாமே... முடியாத எனக்கு நானே விதிச்சிண்ட தண்டனை இது...

''வாடா ரகு போகலாம்...''

காடு தாண்டிப் போகும் அந்தச் சீதையைத் தடுக்கும் சக்தி இங்குள்ள ராமர்களுக்கு இல்லே.

ராஞ்சி நகரில் மகாத்மா காந்தி டவுன் ஹாலில் இப்போது காபரே நடனங்கள் நடக்கின்றன! அதற்குமுன் இது 'மத்திய ரிசர்வ் போலீஸ'க்குப் புகலிடமாக இருந்தது. இவையெல்லாம் போதாதென்று சாராயக்கடை ஏலம் வேறு இங்கு நடக்கப்போகிறது!
—சம்பத்குமாரி.



நீரைக் கொதிக்க வைத்தல், பாட்டிலை கிருமி நீக்கம் செய்தல், வெப்பநிலை சோதனை செய்தல்—ஆகிய பிரச்சனைகள் இல்லை.



புதிதாகப் பிறந்த குழந்தை உணவைப் பெற்றிட எத்தகைய சுலபமான, வசதியான, இயல்பான வழி இருக்கிறது பார்த்தீர்களா?

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இயல்பாக நடந்த நீண்ட சோதனை கணிப்பின் மூலம் இயற்கை கண்டு கொண்டுள்ளது:

குழந்தைக்கான தாய்ப்பாலே உன்னத உணவாக்குபவை அதில் இயல்பாக சரிவிகிதமாகக் கலந்துள்ள உடல் வளர்ச்சிச் சத்துக்கள் (புரதம்), சக்தி தரும் சத்துக்கள் (கார்போ ஹைட்ரேட்டுகள், கொழுப்பு) ஆரோக்கியமான பாதுகாப்புச் சத்துக்கள் (வைட்டமின்கள்) ஆகும்.

## தூய்மைக்கேடு பிரச்சினை இல்லை.

உங்கள் குழந்தை, முலையிலிருந்து பாலை நேரடியாக குடிப்பதால் தூய்மைக்கேடு ஏற்படும் அபாயம் அதில் இல்லை, தயாரிப்பு அல்லது பாலின் வெப்பநிலையை சோதித்தல் போன்ற பிரச்சினைகளும் அதில் இல்லை. அத்துடன் வயிற்றில் வாயுக்கோளாறுகள் மற்றும் இதர நோய்களிலிருந்து உங்கள் குழந்தையை பாதுகாத்திட தாய்ப்பாலில் நோய் எதிர்ப்புப் பொருள் இயல்பாகவே உள்ளது —இன்னும் இதர நன்மைகள்கூட அதிலே —உதாரணம் ஸ்கர்வியைத் தடுத்திட வைட்டமின் 'சி'. முலைப்பால் உண்ட குழந்தை பாதுகாப்பும் தன்னம்பிக்கையும் பெறுகிறது. காரணம் நீங்கள் குழந்தையை அரவணைத்து பாசத்தையும் சேர்த்தல்லவா பாலூட்டுகிறீர்கள்.

## நாளும் பிரபலமடைகிறது

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேல் நாடுகளிலும்கூட முலைப்பால் கொடுத்தல் மிக அதிகமாக பிரபலமாகி வருகிறது.

## உலகளாவிப் பிரபலமடைகிறது.

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேலை நாடுகளிலும் கூட முலைப்பால் கொடுத்தல் மிகவும் அதிகமாக பிரபலமாகி வருகிறது.

உங்கள் உடல் நல பாதிப்பு அல்லது பால் பற்றாக்குறை ஆகியவற்றால் நீங்கள் குழந்தைக்கு பால் கொடுக்கமுடியாமல் போனால் என்ன செய்வது?

உங்கள் குழந்தைக்கு நீங்கள் சிறந்த 'தாய்ப்பால் மாற்று' தேர்ந்தெடுக்க வேண்டும்.

## ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல்ஸ்ப்ரே

அமுல்ஸ்ப்ரே–நன்கு சமச்சீராக கலக்கப்பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போ ஹைட்ரேடுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெது வெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது. முன்னாலேயே அதை பசைபோல் தயாரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

## சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு' முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

ஆனால் கொதிக்க வைத்த நீர், சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால் புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதை தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின்மீது குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை கவனமாக பின்பற்றுக.




# அமுல்ஸ்ப்ரே

**தாய்ப்பாலுக்கு அடுத்ததுதான்.**

**இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—**
இதில் அடங்கியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால் ஊட்டுதல், வெளியில் கிடைக்கும் உணவு வகைகள், லேசான தானிய உணவு தருதல், குழந்தையின் அன்றாட கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல், தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம், தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால் தலை ஒட்டி எழுதுக இம் முகவரிக்கு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட், தபால் பெட்டி எண் 10, ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.

ASP/AS-TAM6/83



அன்று நடந்த வளைகாப்பு வைபவத்துக்குப் பிறகு, இன்றுதான் மறுபடியும் பரந்தாமனின் வீடு, விழாக் கோலம் கண்டிருக்கிறது...

ஆம்... இன்று சின்ன ராஜாவின் முதல் பிறந்த நாள் விழா... மூல விக்கிரகம் தொலைந்து போனாலும் உற்சவ விக்கிரகத்துக்கு ஆராதனை செய்து பார்க்க விரும்பும் பரம பக்தனைப் போல்... பரந்தாமன், பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்து விட்டார்.

என்ன செய்து என்ன பயன்...?

வீட்டில் ஒரு ஈ, காக்கை கூட அவருடன் பேச்சு வைத்துக் கொள்வதில்லை. அவரவருக்கு அவரவர் கோபம்.

உமா எப்பொழுதுமே மாமனாரின் எதிரில் நின்று பேசியதில்லை. அப்படியே பேச நேர்ந்தாலும், மரியாதை காரணமாக, விலகி நின்று ஓரிருவார்த்தைகள் பேசுவதோடுசரி...

இப்பொழுது அதுவும் அற்றுப் போய் விட்டது...

என்னதான் தன் கணவனைப் பெற்ற தந்தையானாலும்... தன் புருஷனுக்கு ஒருவர் எதிரி என்றால் — தனக்கும் அவர் எதிரிதான் என்கிற பாவனையில் அவரோடு பேசுவதையே தவிர்த்து வந்தாள்...

அவளது நெஞ்சில் இன்னமும் பரந்தாமனின் துப்பாக்கித் தோட்டாக்கள் வெடித்து, சிதறிக் கொண்டே இருக்கிறதே...

'அன்றைக்கு இவர் சுட்டது — அவரைக் காயப் படுத்தியிருக்குமோ...

'ச்சே, என்ன மனிதர் இவர்... பெண்டாட்டியைப் பார்க்க வந்தவரை விரட்டி விரட்டிச் சுட்டாரே...'

'ஐயோ... அப்புறம் அவர் என்ன ஆனார்... எங்கே போனார்? ஒரு விஷயமும் தெரியவில்லையே?'

'குண்டடிப் பட்டு, தப்பித்தால் போதுமென்று எங்கேயாவது கண்காணாத இடத்துக்குப் போய் — கடைசி மூச்சை...'

அதற்கு மேல் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை அவளால்...

அவளது கோபத்தையெல்லாம் பரந்தாமன், குழந்தையை வைத்துக்கொண்டு கொஞ்சும் பொழுது தான் காண்பிப்பாள்....

# பிசாசு ஒன்று வேண்டும்

## அனுராதா ரமணன்

''கண்ணு... சிக் கண்ணு... தாத்தாகிட்ட வாடா... இதோ பார் துப்பாக்கி.... வா... டுமீல் டுமீல் வெடிச்சுக் காட்டறேன்.''

பரந்தாமன், பேரனை இழுத்தணைத்துக் கொஞ்ச உமா, எங்கேயிருந்தோ, பறந்து வந்து, குழந்தையைப் பிடுங்காத குறையாகத் தூக்கிக் கொண்டு போவாள்.

''வாடா... துப்பாக்கியைப் பத்தி இப்பவே பிடிச்சு ஒண்ணும் தெரிஞ்சுக்க வேண்டாம்நீ.. உன் மனசுலயாவது கொஞ்சம் ஈரம் இருக்கட்டும்... நீ ஒருத்தனாவது அவரை ஓட ஓட விரட்டாம இரு. போதும்..''

என்னமோ குழந்தைக்குப் புரிகிற மாதிரி படபடவெனப் பொரிந்து தள்ளிவிட்டுப் போவாள்.

பரந்தாமன், அவள் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்.


விஜியோ — இவர் வீட்டில் இருந்தால், ஏதாவது ஓர் அறைக்குள் போய் முடங்கி விடுவாள். முன்போல, இவருக்குக் காலையில் காப்பி கொண்டுவந்து கொடுப்பதோ, பக்கத்திலிருந்து பரிமாறுவதோ கிடையாது.

அன்று, ஆஸ்பத்திரியிலிருந்து ராஜாவைத் துரத்திக் கொண்டு ஓடியவர், ஏமாற்றத்துடன் திரும்பிய போது... இந்த விஜி தான் இவரது முழுக் கோபத்துக்கும் இலக்கானாள்...

மூச்சிரைக்க உள்ளே வந்தவர், டாக்டர், அவருக்குப் பேரன் பிறந்திருப்பதாக அறிவித்ததைக் கூடக் காதில் வாங்கிக் கொள்ளாமல், நேரே விஜியின் எதிரில் தான் வந்து நின்றார். கொஞ்சநேரம் அவளையே வைத்த கண் வாங்காமல் உறுத்துப்பார்த்தார்.

பளார் ..

தமது இரும்புக் கரத்தால், அவளது பட்டுப்போன்ற கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.



விழி விளிம்பில், கண்ணீர் குளம் கட்ட, கன்னத்தைப் பிடித்துக் கொண்டு, அசையாமல் நின்று விட்டாள் விஜி.

''எனக்கு எதிராவா வேலை பண்றே... இதுதான் உனக்கு முதலும் கடைசியுமான எச்சரிக்கை...''

வார்த்தைகள் புரியாவிட்டாலும், அவரது உறுமலின் அர்த்தம் புரியாமலில்லையே....

அன்று ஒதுங்கியவள்தான்... அவள் எப்பொழுது சாப்பிட வருகிறாள். எந்த அறையில் படுத்துத் தூங்குகிறாள் என்பது கூடத் தெரியாதபடி....

எப்பொழுதாவது மாமாவை நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்து விட்டால், விழிகளை மிக அவசரமாய்த் திருப்பிக் கொண்டு விடுவாள் அவள்.

பரந்தாமனுக்கு உமாவின் வார்த்தைகள் உண்டு பண்ணிய ரணத்தை விடவும், விஜியின் பாராமுகம் ஏற்படுத்திய ரணம்தான் அதிகம்...

கோபத்தைக் காட்ட வார்த்தைகளை விடவும் மௌனம் தான் பலமான ஆயுதமோ...

அந்த வீட்டில், இன்னமும் அவருடன் பேச்சு வார்த்தை வைத்துக் கொண்டிருக்கிற ஒரே ஜீவன் மீனாட்சிதான்.

மனசுக்குள் எத்தனை ஆதங்கமிருந்தாலும், எதையும் வெளிக்காட்டாமல், புருஷனுக்கு வேண்டியவற்றைத் தன் கையாலேயே செய்து கொண்டு...

எத்தனை வயசானால் தான் என்ன.... அவனுக்கென உள்ள கடமைகளை அவள் தானே செய்ய வேண்டும்?

இந்தப் பெண்கள் – தங்களின் கோபத்தை வெளிப்படையாகப் பரந்தாமனிடம் காட்டுவது போல அவளால் காட்ட முடியவில்லையே...

அவளுக்கும், அவர் மீது எரிச்சல் இல்லாமல் இல்லை...

'அது என்னமா... பெத்த பிள்ளையைத் துரத்திட்டுப் போய்ச் சுட முடிஞ்சது? அன்னிக்கு மாத்திரம் அந்தக் குண்டு அவன் மேலே பாய்ஞ்சிருந்தா இந்தப் பொண்ணோட தாலிக்கு இவரே எமனா இல்லே மாறியிருப்பார்...'

நினைக்கும்பொழுதே 'பகீரென்'கும் அவளுக்கு. சில சமயங்களில் குழந்தைத்தனமான வீம்பும் சேர்ந்து கொள்ளும்.

'அது என்ன... எப்பப் பார்த்தாலும் கடமை, கடமைன்னு... சாப்பாட்டு நேரத்துல மேஜை முன்னாடி வந்து உட்கார்ந்தா, போலீஸ்காரனு வந்து சாப்பாடு பரிமாறனும்... எதுக்காக 'மீனாட்சி'ன்னு கூப்பிடணுமாம்... ஒரு 'டூ நாட் த்ரீ'யையோ 'த்ரீ நாட் ஃபைவையோ' கூப்பிடட்டுமே..'

இந்த நினைப்பில் சற்று நேரம் பிடிவாதமாக உட்கார்ந்திருப்பான். கணவரின் இரண்டாவது குரல் வரும்பொழுது அதற்கு மேலும் அலட்சியப்படுத்த முடியாது....

''இதோ வந்துட்டேன்...''

—இப்படி குரல் கொடுத்தபடி, தன் வயோசையும் மறந்து ஓடுவாள்.

இன்று —

பரந்தாமனின் ஆணையைத் தட்ட முடியாமல்தான் அவள் பேரனின் ஆண்டு நிறைவு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறாள்.

இது மாதிரியான வைபவங்களில் இஷ்டமே இல்லை அவளுக்கு.

'என்ன வேண்டிக் கிடக்கு... பின்னே ஓடிப் போனதால தான் ஒன்றும் பாதிக்கப்படலேங்கறதை வெளிக்காட்டிக்க இவருக்கு இந்த மாதிரியான கொண்டாட்டங்கள் எல்லாம் தேவைப்படலாம். இவரைத் தவிர வேறு யாருக்கு இதிலெல்லாம் ஆசையிருக்கு...'

கண்ணனின் பெயர் சூட்டு விழாவே அமர்க்களமாக நடந்திருக்க வேண்டியது...

ராஜாவைத் தேடுவதிலேயே மும்முரமாயிருந்தவர் பேரனை எடுத்துப் பார்க்கவே ஒரு மாதத்துக்கு மேலாகி விட்டதே...

குழந்தையின் பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடுவதில் உமாவுக்குத் துளிக் கூட விருப்பமே இல்லை. முன் போல் இல்லாமல் தனது அபிப்ராயத்தைப் பரந்தாமனின் எதிரில் 'பட்'டென்று போட்டு உடைக்கிறாள்.

''என் குழந்தைக்கு ஆண்டு நிறைவு ஒண்ணுதான் தேவையா இருக்காக்கும்... அதெல்லாம் வேண்டியதில்லே...''

அவளது வார்த்தைகளில் பரந்தாமனின் மூக்கு நுனி சிவக்கிறது... வெளிறிய சாம்பல் நிற மீசை லேசாகத் துடிக்கிறது...

''உன் குழந்தைக்குப் பிறந்த நாள் கொண்டாட்டமெல்லாம் வேண்டாம்தான். ஆனா, 'பரந்தாமன் — ஐ. பி. எஸ். ஸோட பேரனுக்கு அந்த வைபவமெல்லாம் எதுவும் குறையாம நடந்தாகணும்.''

உமா, பரந்தாமனை வெட்டுவது போல ஒரு பார்வை பார்த்து விட்டு, குழந்தையுடன் அங்கிருந்து நகருகிறாள்....

அன்றைய மாலைப் பொழுதில் — அந்தப் பங்களாவின் விஸ்தாரமான ஹால் முழுக்க, வண்ண விளக்குகளும், காகிதத் தோரணங்களும், பலூன்களுமாய் அலங்கரித்திருக்க....

நடு ஹாலில் அலங்கார மேஜைமீது, அழகான பெரிய கேக், தன் வயிற்றுப் பகுதியில் ஒற்றை மெழுகுவர்த்தியைச் சுமந்து கொண்டு நிற்க...

பரந்தாமனும், மீனாட்சியும் வந்தவர்கள் அனைவரையும் வரவேற்றபடி வாசலில் நிற்க...

ஆறு மணியளவில் குழந்தை 'கேக்'கை வெட்டுவதாக ஏற்பாடு...

மாடியிலிருந்து உமா, இன்னமும் கீழே இறங்கி வரவேயில்லை.

விரைவில் பரவும் செய்தி...



கண்ணனுக்கு, பரந்தாமன் வாங்கித் தந்த சட்டையை மாட்டிவிட்டு, அவனையே பார்த்துக் கொண்டு, உட்கார்ந்திருக்கிறாள் உமா.

மேடை தன் வருகைக்காக எத்தனையோ பெரிய மனிதர்கள் காத்திருக்கிறார்கள் என்கிற உறுத்தல் இருந்தாலும்... அதையும், மீறிக் கொண்டு நெஞ்சில் ஒரு அழுத்தம்!

'இருக்கட்டும்... காத்துக் கொண்டுதான் இருக்கட்டுமே... யார் இவர்களையெல்லாம் வரவழைத்தது? நானா... இல்லையே..... ஊரைக் கூட்டி, விருந்து வைத்து — ஒடிப் போன கொலைகாரனின் பெண்டாட்டியும், பிள்ளையும் இவர்கள் தான் என்று வெளிச்சம் போட்டுக் காட்டுவது யார்... இவர் தான்... காத்திருக்கட்டும்...'

அதேசமயத்தில், மேடையிருந்து பரந் தாமன் குரல் கொடுக்கிறார்.

''மீனாட்சி... கண்ணனைக் கொண்டுவா.''

கூடத்திலிருந்த அத்தனை பேரும் மாடிப் பக்கம் தலையைத் திருப்ப...

பரந்தாமனின் விரிந்த தோளை மெல்லத் தொடுகிறார் போலீஸ் கமிஷனர்...

''மிஸ்டர் பரந்தாமன்...''

''எஸ்...''

''அதோ, அந்தக் கோடியில கறுப்பு ஷெர்வானி போட்டுட்டு, தாடியோட நிக்கறாரே சேட்... அவர் யார்....?''

பரந்தாமன் அவர் சுட்டிக்காட்டிய திசை யில் 'சட்'டெனத் திரும்பிப் பார்க்கிறார்.

''யார் இந்த சேட்?''

நிச்சயமாக அவருக்கு அறிமுகமான நபர் இல்லை. ஆனால் அந்த மூக்கும், கண்ணும்...

பரந்தாமனின் தேகமே பரபரக்கிறது...

அந்த மனிதரை நோக்கி அவர் அடி யெடுத்து வைத்த அதே நேரத்தில், உமா, கையில் குழந்தையுடன் மாடியறையை விட்டு வெளியே வர...

பரந்தாமனையே உற்றுப் பார்த்தபடி வாசல் வராந்தாவில் நின்று கொண்டிருந்த விஜி, பங்களாவின் மொத்த வெளிச்சத்துக் கும் ஜீவ நாடியான மின்சார இணைப்பு ஸ்விட்சைத் தட்டிவிட....

ஒரு நிமிஷ நேரம்தான்...

கூடத்து இருட்டில் பேச்சுக் குரல்கள் மட்டும் அலையலையாய்...

மறுபடியும் விளக்குகள் ஒளிரத்தொடங் கிய போதோ...

விஜி, அந்தக் கூடத்தின் ஒரு பக்கமாய்ச் சுவரில் சாய்ந்து நின்று கொண்டிருக்கிறாள்...

உமா, குழந்தையுடன் மிக நிதானமாய் மாடிப்படிகளில் இறங்கி வந்து கொண்டிருக் கிறாள்...

கூட்டத்தின் நடுவிலிருந்த கறுப்பு ஷெர் வானியை மாத்திரம் காணவில்லை!

பரந்தாமன் 'விருட்'டென வாசலுக்குப் பாய்கிறார்.


(தொடரும்)


ஹேர் டை செய்வது இவ்வளவு எளிதாக
முன்பு இருந்ததே இல்லை.



பாதுகாப்பான ஹேர் டை.

இயற்கையான ஹேர் டை.




கோத்ரெஜ் வழங்கும் தானே-பரவும் ஹேர் டை

இனி ஹேர் டை செய்வது கேசத்தை அலசுவது போன்று எளிது.

CLARION/GS/5/106

## வாசகர் பங்கு

# எம்.ஜி.ஆரிடம்



- எம். லட்சுமி நாக்கையா, போடி நாயக்கனூர்.
? கலைஞர் கருணாநிதியின் இலக்கிய நயங்களில் தங்கள் மனத்தைத் தொட்டது எது?

- அ. வசந்தா, செவலவடை.
? எட்டாம் வகுப்பு படித்த ஆசிரியர்கள் அரசுப் பணியாற்றும்போது பதினோராம் வகுப்பு தேர்ச்சி பெறாத கிராம அதிகாரிகள் என்ன பாவம் செய்தார்கள்?

- குமாரி வி. ரெங்கம், ஸ்ரீவைகுண்டம்.
? தங்கள் காலத்துக்குப் பின் தமிழக முதல் மந்திரியாக இருக்கத் தகுதியுடையவர் என்று யாரைச் சிபாரிசு செய்வீர்கள்?

- எஸ். கே. வள்ளி, மேட்டூர் அணை.
? ஏன்தான் தமிழக முதல்வராக வந்தோமோ? என்று தாங்கள் நினைத்து வருந்தியது உண்டா?

- ஆ. பார்வதம், சென்னை-41.
? விலைவாசிகளெல்லாம் வானத்தை எட்டிப் பிடிக்கின்றனவே எப்படிக் குடும்பம் நடத்துவோம்?

- நெய்வேலி ஞானி, நெய்வேலி.
? உங்கள் காலத்துக்குப் பின் அ.தி.மு.க. நிலைத்து, தமிழகத்தை வளர்க்க எதிர்காலத் திட்டம் என்ன?

- வி. எஸ். கே. மூர்த்தி, சென்னை-26.
? நீர் வெற்றி நடை போடுவதற்குக் காரணம் ஒவ்வொரு காரியம் செய்யும் முன்பும் ஒரு பிரபல ஜோதிடரைக் கலந்தாலோசிப்பதுதான் என்று கூறப்படுகிறதே உண்மைதானா?

- மு. திருநாவுக்கரசு வேலூர் (வ. ஆ.)
? தமிழக முதல்வரான பிறகும் நீங்கள் தங்கள் பெயரைக் குறிப்பிட எம். ஜி. ஆர் என்ற ஆங்கில எழுத்துக்களையே பயன்படுத்துவது ஏன்?

- டி. எஸ். சீதாராமன், கும்பகோணம்.
? திடீரென்று ஜெயலலிதா கட்சியின் கணக்கைக் கேட்டால், கணக்குக்காட்டுவீர்களா? கட்சியை விட்டு வெளியேற்றுவீர்களா?

- து. ரங்கநாதன், கோட்டைக்காடு.
? கிருஷ்ணா நதி நீர் எப்பங்க வரும்?


- ஏ. தங்கராஜன், கோவை.
? மற்ற மாநிலங்களைவிடத் தமிழகத்தில் தங்கள் ஆட்சியில் தொழில் வளர்ச்சி பின் தங்கியிருப்பது ஏன்?

- ப. மூர்த்தி, பெங்களூர்.
? கலைஞர் கருணாநிதியின் மணிவிழாவையொட்டி அவருக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன? அவரிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன?

- ஆர். ஜெயலக்ஷ்மி, பேரளம்.
? வேளை தவறிய உணவு, உறக்கம், அதிகப் பிரயாணம் இவ்வளவிருந்தும் எவ்வாறு உடல் கட்டுக் குலையாமல் இருக்கிறது?

- தாமல் கண்ணன், ஆவடி.
? தாய் மூகாம்பிகை கோயிலுக்குச் சென்று வரும் நீங்கள் 40,000 கோயில்கள் நிறைந்த தமிழகத்தில் ஒரு கோயிலுக்குள்ளும் நுழைய மறுப்பது ஏன்?

- வி. அசோக்குமார், சென்னை-14.
? தாங்கள் செயல்படுத்தும் பல திட்டங்களில் தங்களுக்குத் தெரியாமல் நடக்கும்



தவறுகளைத் தங்கள் நேரடிப் பார்வைக்குக் கொண்டுவர என்ன செய்ய வேண்டும்?

● டி. வி. சம்பத், சென்னை—33.
? எளிய குடும்பத்தில் பிறந்து மக்கள் பிரதிநிதியான தங்களை எந்தத் தனியொரு குடிமகனும் நேரில் சந்தித்துப் பேச முடியாத நிலைக்குத் தாங்கள் மாறியிருப்பது உங்களுக்கு நல்லது என்று எண்ணுகிறீர்களா?

● டி.பொன்னம்மாள்,டோம்பிவிலி (கிழக்கு)
? சினிமாவில் நடிக்கும்போது பாமர மக்கள் வியக்குமாறு பல புரட்சித் திட்டங்களைக் கூறிப் புகழடைந்த நீங்கள் ஆட்சிக்கு வந்ததும் அவற்றை நிறைவேற்றவில்லையே ஏன்?

● டி. சந்திரசேகர், சென்னை—94.
? உங்களுக்குப் பிடித்தது, அரசியல் வாழ்க்கையா? சினிமா வாழ்க்கையா?

● வசந்தா பாலசுப்பிரமணியம், திருவாரூர்.
? மாணவர்களை வழிநடத்திச் செல்வதில் அரசியல் கட்சிகள் தங்கள் சுயலாப

# ஒரு கேள்வி

நோக்கு ஒன்றையே முன்வைத்துச் செயல்படுகின்றன என்பதை ஒப்புக் கொள்வீர்களா?

● கோ. ராதிகா, திருவள்ளூர்.
? மதுவிலக்குக் கொள்கையில் உங்களுடைய பேச்சும் அரசின் செயல்பாடும் வேறுபாடின்றி ஒருங்கிணைவது எப்போது?

● பிரேமா சந்தானம், பெங்களூர்.
? உங்களுடைய இத்தனை முன்னேற்றத்துக்குக் காரணம் உங்கள் திறமையா? மக்களின் அன்பா?

● டி. சந்திரா, சென்னை—54.
? சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் ஏழைப் பிள்ளைகளுக்கு உணவளித்து விட்டு அவர்கள் தகப்பன்மார்களுக்குச் சாராயக் கடைகள் திறந்து வைத்திருப்பது நியாயமா?



● ஆர். கமலா, பெங்களூர்.
? எதையும் தாங்கும் இதயம் பெற எளிய பயிற்சி ஏதும் உள்ளதா?

● எஸ். உமாமகேசுவரி, சேலம்.
? இந்தப் பட்டுப்புடவை பரிசுத் திட்டத்தில் நீங்கள் கலந்து கொண்டு பட்டுப் புடவை பரிசு பெற்றால் அதை யாருக்கு அன்பளிப்பாக வழங்குவீர்கள்?


● இரா. வி. மல்லிகா, திருவாரூர்.
? தாய்க்குலத்தின் மீது பற்று கொண்ட தாங்கள் வரதட்சிணைக் கொடுமையிலிருந்து கன்னியரை மீட்க என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?

● எஸ். சாவித்திரி, சென்னை—83.
? கருணாநிதியைக் குறை கூறுவதை நிறுத்தி, எப்போது ஆட்சியைக் கவனிக்கப்போகிறீர்கள்?

● ஏ. ரேணுகாதேவி, குடியாத்தம்.
? ஜாதி அடிப்படையில் அல்லாமல் நன்றாகப் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு உதவ ஏதாவது திட்டம் கொண்டு வரக் கூடாதா?

● எஸ். காயத்ரி, சென்னை—44.
? தமிழகத்தின் தலைநகரைத் திருச்சிக்கு மாற்றும் தங்கள் திட்டம் என்ன வாயிற்று?

ராகமாலிகா வழங்கும் பட்டுப்புடவையைக் குலுக்கல் முறையில் அன்பளிப்பாகப் பெறுபவர்: **து. ரங்கநாதன், ரங்கநாதன் ஸ்டோர்ஸ், கோட்டைக்காடு போஸ்டு, மதுராந்தகம் வட்டம், 603 304.**





## அத்தியாயம் 8

### "அது வேறு–இது வேறு"

காஞ்சியிலிருந்து எவ்வளவு முயன்றும், பாண்டியகுமாரி திருமேனியின் தரிசனம் கிடைக்காமல் அலைமோதினான் ஒற்றன் பசுபதி.

அவனைத் தனது சாணக்கியோதயத்தில் கண்ட, ராஜதந்திரத்தின் அர்த்த சாஸ்திர அம்பாக ஏவி இருந்தாள் தியாகவல்லி.

விளக்குகளைத் தரிசனம் செய்யும் இராப் போது வந்த பிறகே அவளது தரிசனம் கிடைத்தது.

வணங்கிய பசுபதியின் கண்கள், வாய் திறந்த அவனது பற்களில் சொற்களாய் இமைத்தன. நாவின் அடக்கம் அவ்வளவிற்கு!

வேங்கைவனத்தில் நடந்த நிகழ்ச்சிகளை, தியாகவல்லி கொடுத்து அனுப்பியதுபோலத் தொட்டுத் தொட்டுக் கூறி அவன் விளிப் பிள்ளையானான்.

மற்றபடி வேங்கைமார்பனைப் பற்றித் திருமேனியும் கேட்கவில்லை; அவனும் ஏதும் சொல்லவில்லை.

கேட்கத்தான் என்ன இருக்கிறது?

அவனைப் பொறுத்தமட்டில் அது ஒரு முடிந்த கதை. ஆனால் எதற்காகத் தியாகவல்லியைச் சிறைப்படுத்த முயல வேண்டும்? காளிங்கன் காப்பாற்றிக் கொண்டு வந்து புகலிடம் கேட்க வேண்டும்?

"நல்லது பசுபதி: இரவு முதல் யாமத்துக்குப் பிறகு நமது அந்தரங்க மாளிகைக்கு அவர்களை அழைத்து வா! ஆனால் கவனமாகவும், 'ரகசியமாகவும் அழைத்து வா"

ஒரு நிறைவான பெருமூச்சுடன் நிம்மதியாகப் பணிந்து விடைபெற்றான் பசுபதி.

முதல் யாமமும் முடிந்தது.

ஆய்வாசனைக்குரிய அந்தரங்க மாளிகையின் மாமன்னர் பெருவழுதியின் ஓய்வறையில் அன்னதூளிகை மஞ்சத்தில் அமர்ந்திருந்தாள் திருமேனி.

எதிரே இரு இருக்கைகளில் காளிங்கனும், தியாகவல்லியும் இருவேறு கோணங்களில் எண்ணங்களைப் புரட்டியும், புனைபட்டியும் காணப்பட்டனர்.

தியாகவல்லியின் கண்கள் திருமேனியை அபிஷேகிக்கின்றன.

ஓ... இவள்தான் பாண்டியகுமாரி திருமேனியா?

அந்த நீண்ட சிகையலங்காரத்தின் உச்சியில் மீன் வடிவம் வைரங்களாக ஒளிர்கிறது.

கொட்டிக் கிடக்கும் பேரழகுகளைத்தையும் கொண்டு வந்து, பட்டியல் போடாது அவளது பாதங்களில் நிவேதனம் செய்தது போன்ற ஒரு சௌந்தரியத் தோற்றமா?

தமிழ்ச் சங்கத் தலைவியாக இவள் எதிர்காலத்தில் அமரப் போவதால், தமிழ்க்காப்பியங்களுக்கு மீறிய இலக்கணம் பிறழாத பேரழகை நான்முகன் படைத்து விட்டானோ?

முதற்சங்கத் தலைவியாக மீனாட்சிதேவி இருந்தாள். இப்போது மூன்றாவது சங்கத் தலைவியாக இவள் வீற்றிருக்கப் போகிறாள் என்பதற்காக அந்த அங்கயற்கண்ணியே அவதாரம் பூண்டாளோ?

எண்ணி வியக்கிறாள், எழிலரசிகளுக்கே உரிய பொறாமையற்ற பூம்பூவை தியாகவல்லி.

ஆ வேங்கைமார்பன், என்பொருட்டு எவ்வளவு தன்மையாக மறுமொழி பகர்ந்திருக்கிறார்

"உன்னைப் போலவே அழகாக இருக்கிறாள்" — என்று சொன்னதை நினைத்துப் பார்க்கிறாள்.

'தமிழைப் போல அழகாக இருக்கிறாள்' என்றல்லவா அன்று என்னிடம் சொல்லி இருக்க வேண்டும்? அவ்வாறு சொல்லாமல்..

"என்ன தியாகவல்லி பெயர் கேட்டேன்; சொன்னாய். அன்னைப் பெயரையும்

# வேங்கை வனம்



அறிமுகம் செய்தாய். பிறகு நீயாகவே சொல்ல வேண்டியதைச் சொல்வாய் என்று எதிர்பார்த்தேன். ஏன் மௌனமாகிவிட்டாய்?''

''திருமேனியாகி விட்டேன்.''

''என்னது?''

''சிலையாகிவிட்டேன்.''

திருமேனியின் யாழ் நாவில் சிரிப்புநாதம் மெல்லியதாகச் சுருதி கூட்டுகிறது.

காளிங்கனை அந்த விழிவாசல்கள் கவனிக்கின்றன.

''காளிங்கரே. பகபதி ஓரளவு சொன்னான். என் பொருட்டு உங்களது நிலை உற்பாதத்துக்குரியதாகியது வருத்தமாக இருக்கிறது.''

''உங்கள் மீது நாங்கள் எந்தத் தவறும் கூறவில்லை இளவரசி. அவ்வாறானால் நாங்கள் இங்கு வந்திருக்க மாட்டோம். நீங்கள் கேள்விப்பட்டதும், சொன்னதும் நியாயம் தானே? உங்கள் நிலையில் யார் இருந்தாலும் இதனையே சொல்லுவர். ஆனால் உங்கள் மகோன்னத நிலையைப் பார்க்கிற போது வேங்கைமார்பனை விரட்டியடித்தது சத்திய நியாயம். ஆனால் அந்த அடிபட்ட வேங்கை—ரணப்பட்ட மார்பு ஆத்திரத்துடன் திரும்பியதும், 'நீ இருந்ததால்தானே இந்த ஏமாற்றநிலை? உன்னைச் சிறை வைத்து, இதோ பார் பாண்டியகுமாரி. நீ நினைத்தது போல இவன் எனது சிருங்காரத்துக்குரியவனல்ல; சிறைக்குரியவன் என்று கூறி, நிரூபித்து விட்டால்... பாண்டியகுமாரி என் அரியணையை அழகு செய்வாள்' என்று கொக்கரித்ததை நாங்களல்லவோ அனுபவித்தோம்! படைப்பலம் என்னிடமிருந்ததால் எப்படியோ ரகசியவழி மூலம் வெளிவந்து தப்பியோடினோம். அரச மரபுக்குரியவனா அவன்? நாகரிகமற்றவன்!''

''காளிங்கரே! அவர் அரசர்! 'அன்' விகுதி போட்டுப் பேசுவது நாகரிகமா என்று யோசியுங்கள்.''

''எங்கள் மாமன் மகன்; சிறு வயது முதல் பழகியவன்!''

''ஆனாலும் அரசர்!''

''பகைவனாகி விட்ட பிறகு மரியாதை மட்டும் எப்படி நட்பு கொள்ளும் மீனவர்ச் செல்வி! மேலும் என் தங்கையிடம் சாகசம் புரிந்து, சல்லாபித்து, பிறகு பெரிய இடத்து உறவு? சொல்லிக்கொண்டு மதுரை நாடி, தூது வந்திருப்பானா? தூது முறிந்த

**கோவி. மணிசேகரன்**

தும் சினம் கண்டு இவளைச் சிறைவைக்க முயன்றிருப்பானா?''

''ராட்சஸத் தனமாக இருக்கிறதே!''

''அவனே ஒரு ராட்சஸன்தானே! இல்லையென்றால் வேங்கைகளுடன் பழக முடியுமா?''

''நல்லது; உங்கள் திட்டமென்ன?''

''எனது தங்கைக்கு ஒரு நல்ல வாழ்வு அமைத்துத் தாருங்கள். நன்றியுள்ளவனாக இருப்பேன்!''

''எந்த வழியில்?''

''வேங்கைவன நாடான கானப்பேரெயில் அரியணையில் என் தங்கை அமர வேண்டும். அதற்காக எனது வீரத்தைக் காலம் முழுவதும் மதுரைக்குக் காணிக்கையாக்குவேன்!''

விழியாய் விழித்த தியாகவல்லியின் நெஞ்சுள் குளவி கூடுகட்டிக் கொட்டுகிறது. எந்த வேங்கைமார்பனைக் குறித்து நான்கு நல்ல சொற்களைச் சொல்ல வந்தாளோ, அவற்றுக்குக் குந்தகம் விளைவித்து விட்டாரே இந்த அண்ணன்! 'சல்லாபித்து' என்ற வார்த்தையைச் சொல்லலாமா? எவ்வளவு அருமையானது....

இந்த வார்த்தை உண்மையிலேயே திருமேனி நெஞ்சைத் தீச்சுனையாக்கிவிட்டது. இவ்வளவு கேவலமானவரா வேங்கை மார்பன்?

''என்ன யோசிக்கிறீர்கள் இளவரசியாரே?''

''ஒன்றுமில்லை; கானப்பேர் என்ற பெயரைவிட வேங்கைவனம் நன்றாக இருக்கிறது என்று யோசித்தேன்.''

''அந்தப் பெயரைக் கொடுத்தவனே நான்தான்! வேங்கை என்ற பெயர் கொண்டவன் வேங்கைகளுடன் விளையாடி வாழ்வதாலும், வேங்கையனைய வீரம் கொண்டதாலும் அப்பெயர் பொருத்தமாகி மக்கள் வரை வழக்கில் வந்து விட்டது. அவனது தனி மாளிகையிருக்கும் உய்யானம் மட்டுமே தான் அரண்மனையைப் பொறுத்தமட்டில் வேங்கைவனம்!''

''வேங்கை மார்பரை வேங்கையனைய வீரர் என்று நீங்களே ஒப்புக் கொள்கிறீர்கள்!''

''அதில் சந்தேகமே இல்லை. அந்த வீரத்துக்குப் பயந்துதானே உங்கள் உதவி நாடி வந்திருப்பது? இல்லையென்றால் நானே ஊதி விடமாட்டேனா?''

இந்த மறுமொழி....

அவனை நம்பும்படி செய்துவிட்டது...

''அது ஏன் எனது நினைவு உங்களுக்கு வந்தது? பகையாகியதாலா?''

''அதுவல்ல மூல காரணம். உங்களை அவன் கடத்தவும் செய்யலாம். குலப்பெருமையைக் காக்க நானே முன் வந்தேன்; அதே நேரத்தில் குலப்பெருமை அழிந்து காணப்படும் எனது தங்கைக்கு வாழ்வுதந்து குலத்தை நிலைநாட்டவும் வந்தேன்!''

''மெச்சுகிறேன் உங்கள் நோக்கத்தை! என்னைக் கடத்துவது அவ்வளவு எளிதில் முடிகிற காரியமா?''

''ராட்சஸன்! வீரத்தில் பத்து வேங்கை பலமிக்கவன்; நரிக்குணம் படைத்தவன். அவனை நான்தான் அறிவேன்!''

திருமேனி வியந்தாள். அவளது பொன்மேனி வியர்த்தது.

''நல்லது, காளிங்கரே! நானே என் தந்தையிடம் கூறி ஆவன செய்வேன்!''

திருமேனி நாவு முற்றுப் பெற்ற அடுத்த கணம்...

அதுவரை துடித்திருந்த புதிய நாவு தொடர ஆரம்பித்து வெளிப்பட்டது.

''உங்களை மட்டும் எதை வைத்து நம்பச் சொல்கிறீர்கள்? இதுவும் பாண்டியகுமாரியைக் கடத்த வேங்கைமார்பன் செய்த சூழ்ச்சியாக ஏனிருக்கக் கூடாது?''

''அப்பா!''

விதிர்த்து எழுந்து கொண்டாள் திருமேனி.

பாண்டிய குலதிலகம் பெருவழுதிப் பாண்டிய மாமன்னரா?

அதிர்ந்து எழுந்து கொண்டனர் காளிங்கனும், தியாகவல்லியும்!

இதுவரை மாமன்னர் எங்கோ நின்று ஒற்றறிந்து கொண்டிருந்தாரோ?

திருமேனி நிலைமையைப் பூர்த்தி செய்கிறாள்: ''அப்பா! இவர்களைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை.''

''எதை வைத்துக் கூறுகிறாய் மகளே?''

''முதலாவதாக, இந்தக் கடத்தலுக்கு ஒரு சேனாதிபதியை அனுப்பத்தேவையில்லை; இரண்டாவதாக, அவ்வாறான ஒரு சேனாதிபதி, தனது உடன்பிறந்த தங்கையின் இழிந்த நிலைகூறி இதனைச் சாதிக்க முன்வர நாணப்படுவார். மூன்றாவதாக, நட்புடன் கூடிய உரிய முறையில் இருக்கும் அரசனைக் குறித்து உதவாத வார்த்தைகளால் இவ்வளவு கடுஞ்சொற்களால் விமர்சனம் செய்ய நாக்கூசும்; நான்காவதாக, தங்கையின்

---


ரஷ்ய விஞ்ஞானிகள் இமர் வைக்கோல் செய்கிறார்கள்.

ஒரு கன்வேயர் பெல்ட் மூலம் பசும்புல் கொண்டு செல்லப்படுகிறது. வழியில் ஆயிரக்கணக்கான வோல்ட் மின்சாரம் பசும்புல் மீது பாய்ச்சப்படுகிறது. இதனால் பசும்புல் உடனடியாகக் காய்ந்து வைக்கோலாக மாறிவிடுகிறது. நீண்ட காலம் வைத்திருந்து மாடுகளுக்குப் போடலாம். இமர் வைக்கோல் தரம் மிக்கதாகவும், சத்துள்ளதாகவும் இருக்கிறதாம்!

—எஸ். விஜயாசீனிவாசன்.



# Money at Home Vanishes



## Keep it at KCUB

Do not give in to temptations!
What little money you have, save it
at KCUB and see it grows in to a real wealth.

**THE KUMBAKONAM CITY UNION BANK LTD**

REGISTERED OFFICE : KUMBAKONAM 612 001

FOR PROTECTION AND GROWTH

எதிர்கால வாழ்வு என்று கூறி, உடன் பிறந்த தங்கையையே அழைத்து வந் திருக்க முடியாது. ஒரு போலியையே அழைத்து வந்திருப்பார். ஐந்தாவதாகக் கடத்த வந்தவர்கள் கடத்த இருப்பதாகக் கோடிட்டுப் பேச மாட்டார்கள். போதுமா அப்பா?''

காளிங்கன் நெஞ்சில் சற்றே தேன் கொட்டியது.

தியாகவல்லி நெஞ்சிலோ, எப்போதோ தேன்கொட்டி விட்டது.

''திருமேனி! நீ பசுபதியை அனுப்பிய தால் வந்த தீவினை இது!''

''இல்லை நல்வினை!''

சற்றே தலையை அண்ணாந்திக் கண்களை மூடுகிறார் பாண்டியமாமன்னர். பெருவழுதி. இன்னமும் அவரது நெஞ்சில் வேங்கை மார்பன் குடிகொண்டிருந்தான். மகளைத் தாரமாக்கவே அந்த மனம் துடித்தது.

என்னவோ நடக்கப் போகிறது...

அதையும்தான் பார்ப்போமே!

அப்பா ஏதோ சிந்திக்கிறார்...

மௌனமாகக் கவனிக்கிறாள் திருமேனி.

பெருவழுதிப் பாண்டிய மாமன்னர் நாவசைந்தது: ''திருமேனி! உன்னை வேங்கை மார்பன் கடத்தவும் செய்யலாம் என்று காளிங்கன் சொன்னானல்லவா? எனவே காளிங்கனையே உனக்கு மெய்க்காப்பாளனாக நாளை ராஜசபையில் பிரகடனம் செய் வேன்! காளிங்கா! நீங்கள் போகலாம். நாளை உனக்காக வசதிகளை அமைச்சர் கவனிப் பார்!''

''தியாகவல்லி! எனக்குத் துணையாக இருக் கட்டும். காளிங்கர் போகலாம்.''

காளிங்கன், முன்னே வணங்கி விடை பெற்றுச் சென்று விட்டான்.

சற்றுநேரம் வரைத் தியாகவல்லியைக்கவ னித்த பெருவழுதிப் பாண்டியமாமன்னர், என்ன நினைத்தாரோ, ஒன்றையும் கேட்டுக் கொள்ளாமல் வெளியேறினார்.

தியாகவல்லி சிந்திக்கிறாள்...

தனிமையில் வாய்ப்பு கிடைத்து என்ன பயன்? என்ன சொல்ல முடியும்? முன்னுக்குப் பின் முரணாகாதா? .. ..

''தியாகவல்லி! உன்னை எனக்கு மிகவும் பிடிக்கிறது'' என்றாள் திருமேனி.

குரலில் ஒரு புதிய ஓசை சிந்தியதைத் தியாகவல்லி அறிய நியாயமில்லை.

''மகிழ்ச்சி இளவரசி!''

''அழகில் நீ என்னைவிட நன்றாக இருக் கிறாய்!''

''பொய்!''

''பொய்யா?''

''வேங்கைமார்பரிடம் நீங்கள் பொய், பொய், பொய் என்று மும்முறை அலறினீர்க ளாம்! நான் ஒருமுறைதான் அமைதியாகச் சொன்னேன்!''

ஆ! சந்தர்ப்பமே நீ வாழ்க!

''நான் சொன்னது பொய்யா? தியாக வல்லி?''

''பின்? உங்களைப் பார்த்துவிட்டுத் திரும் பிய வேங்கைமார்பரை நோக்கி நான் கேட் டேன்: 'பாண்டியகுமாரி எப்படி இருக்கி றார்கள்?''



'காரல்மார்க்ஸ்' வறுமைப்பிடியில் மிகவும் துன்பப்பட்டவர். இவருடைய குழந்தை வறுமையினால் இறந்தது மட்டு மின்றி, குழந்தையின் சவ அடக்கத் திற்குக் கூட வசதியில்லாமல் கஷ்டப் பட்டார். நாற்பது ஆண்டுக்காலம் கஷ்டப்பட்டு உழைத்து 'டாஸ் கேபிடல்' என்ற உலகப் பிரசித்தி பெற்ற நூலை இயற்றினார். அதற்காக அவருக்குக் கிடைத்த சன்மானம், அதை எழுதிய போது பிடித்த சுருட்டுக்களுக்குக் கூடப் போதவில்லை யாம்.

தகவல்: ஜா. ரவி.
ஆதாரம்: 'ட்ரை அண்டு வின்.'

---

''அதற்கு என்ன சொன்னார்?''

திருமேனியின் குரலில் சற்றெ கடுமை.

தியாகவல்லி சொன்னாள்:

''தமிழைப் போல இனிக்கிறாள்!'' — என்றார்! இதனை நானே நேரில் காண் கிறேன். என்னைப் பார்த்தா நீங்கள் அழகி என்பது? பொய்யல்லவா?''

சந்தர்ப்பம் அவளை வாழ்த்தி ஒரு பொய்யைக் கூற இடமளித்தது.

அந்தப் பொய்...

திருமேனியைத் தித்திக்கச் செய்யாவிட் டாலும் இனிக்கச் செய்தது.

''வேறு என்ன சொன்னார்?''

புரிகிறது! திருமேனியின் மனச்சுனை யின் அருவியோசை மெல்லியதாகக் கேட் கிறது...

''வேறு என்ன சொன்னார்? சொல்ல முடிந்தது? அக்கணமே பழக்கமில்லாத யவனத் தேறலை மாந்தத் தொடங்கியவர் இன்னமும் மறந்த பாடில்லை. அந்த அள வுக்குப் பைத்தியமாகப் போனார்!''

''அப்படியானவர் உன் மீது கொண்ட ஆசை? சல்லாபித்த சல்லாபங்கள்? யாவும் பொய்! இல்லையா?''

இப்போது தியாகவல்லியால் சந்தர்ப் பத்தை வாழ்த்த முடியவில்லை. தலைகுனிந்து கொண்டாள்.

''ஏன் தலைகுனிந்து கொண்டாய், தியாக வல்லி?''

''அது வேறுவிஷயம்; இது வேறுவிஷயம்!''

அவ்வளவே கூறி நிறுத்தினாள்.

குனிந்த தலை நிமிரவே இல்லை.

(தொடரும்)

# பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக் ரேடியோ
# இது க்ளாக் மற்றும் ரேடியோ இவற்றின் இணைப்பு மட்டுமல்ல...

கூடுதல் சிறப்புகள் பல கொண்டதாகும்.






**படுக்கையறைக்கு ஒரு அழகுப்பொருள்**

படுக்கையில் படுத்தவாறே இசையை அனுபவியுங்கள் (உடன்குருக்கெல்லோ ஒரு தனி சுகம் !). இது தானே நிறுத்திக் கொண்டு, காலையில் தானே இயங்கி உங்களை எழுப்பும்.



**வரவேற்பறையில் பல நிகழ்ச்சிகளை வழங்குவது**

சக்திவாய்ந்த MW மற்றும் SW செட் ஆகிய இது பட்டனைத் தட்டிய மாத்திரத்தில் உலக நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது.



**சமையலறையில் ஒரு உதவிப்பொருள்**

பல்வேறு வேலைகளைச் செய்யும்போது சுவையான ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை வழங்குகிறது. குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவது போன்ற முக்கிய வேலைகளை "பஸ்ஸர்" மூலம் நினைவூட்டுகிறது.



**நம்பகமான உதவியாளர்**

அலுவலகம், தொழிற்சாலை, கடை, வியாபார நிறுவனம்—எங்கிருந்தாலும் சரி—உங்களை நேரந்தவறாது வேலைப் புகளை செயல்படுத்த உதவி செய்து, திறமை வாய்ந்தவரென பெயரெடுத்துக் கொடுக்கிறது.



**பரிசளிக்க உன்னதமான பொருள்**

மனதிற்கு செயல்படுவதைப் புரியவைக்க சிறந்த வழி ! நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புகிறது. அதே சமயம் புத்திசாலித்தனமாக நேரத்தைத் திட்டமிட்டு செயல்பட உதவுகிறது.

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக் ரேடியோ, சக்தி வாய்ந்த ஒரு MW/SW செட் மற்றும் கனகச்சிதமான க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக்கின் இணைப்பு மட்டுமல்ல...கூடுதல் அம்சங்கள் பல கொண்டதாகும். உதாரணமாக:

- கண்ணயர்ந்து விட்டாலோ தூங்கி விட்டாலோ அதைத் தானே நிறுத்திக் கொள்ள 'செட்' செய்து விடலாம் (கேட்கும் இசையே உங்களைத் தாலாட்டி விட்டாலும் கவலை இல்லை அல்லவா ?)
- இசையுடன் இணைந்த அலாரம் உங்களைக் காலையில் எழுப்புகிறது. தொட்டால் போதும்—நீங்கள் மேலும் பத்து நிமிடங்கள் தூங்கலாம்.
- நாள் முழுதும், உங்கள் அலுவல்களை நினைவூட்டிக் கொண்டிருக்கும், (குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவது, லஞ்ச் அல்லது மீட்டிங் நேரம் முதலியவை)
- ரேடியோ மற்றும் அலாரத்தை முன்கூட்டி 'செட்' செய்து செய்திகளையோ உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகளையோ கேட்கலாம்.

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் ரேடியோவை மேலும் மேலும் உபயோகப்படுத்தும் போது நீங்கள் ஒப்புக்கொள்வது...அது பல சிறந்த அம்சங்கள் கொண்ட ஒரு எலெக்ட்ரானிக் அதிசயம் என்பதே. அழகு மற்றும் அறிவின் இணைப்பு.

**பிலிப்ஸ்**

வழங்குவோர் பிலிப்ஸ்.
50 ஆண்டுகளுக்கும் மேலாக
இந்தியாவில் இல்லங்களெல்லாம்
முழங்கும் நம்பகமான பெயர்

PHILIPS

CASPR-929-203 TAM

"என்னைக் கூப்பிட்டது யார் என்று தெரியவில்லை. இருவருமாக ஆனால், எழுந்து ஓடினோம். எங்களுக்குச் சுமார் இருபது அடிகளுக்கு முன்னால் 'அவன்' வேகவேகமாய்ப் போய்க் கொண்டிருந்தான். சுற்றிலும் வேறு யாருமில்லை. தொலைவில் எதிரே பெரும் இரைச்சலுடன் ஆர்ப்பரிக்கும் கடல். நாங்கள் 'அவனை' நெருங்குவதைத் திரும்பிப் பாராமலேயே, 'அவன்' உணர்ந்துவிட்டவன் போல ஓட ஆரம்பித்தான். நாங்களும் மூச்சு வாங்க விரைந்தோம். ஒரு பாய்ச்சலில் 'அவனை'த்தொட்டு விடுமளவுக்கு நாங்கள் நெருங்கிவிட்டதும், அப்பொழுது தான் அவன் நின்று சரேலெனத் திரும்பிப் பார்த்தான். நான் அதிர்ச்சியால் உறைந்து போனேன். என் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. வெகு விநோதமாய் உணர்ந்தேன். 'அவன்' யார் தெரியுமா டாக்டர்? அது... அது... அவன்... நான்தான்... நானே தான்.''

டாக்டர் உடனே அதிர்ந்து போவார் என்று நான் எதிர்பார்த்திருக்க, அவர் மௌனமாய், எனக்கு என்றே பிரத்யேகமாய்ப் போடப்பட்டிருந்த விளக்கின் பின்னால் மங்கினவராய் ஒரு வகையில் கனத்த நிழலில் கறுப்பு மூட்டையாய்க் கரைந்து விட்டவர் போலிருந்தார். அறையின் சூழல் அசாதாரணமாய் என்னைப் பாதித்து, என்னை அசையவொட்டாது வைத்திருந்தது. எங்கும், எவையும் மிக மங்கலாகப் போதிய வெளிச்சமில்லாமல் இருந்தது.

# ஒரு சிதறல் பற்றி சில விவரங்கள்

**கார்த்திகா ராஜ்குமார்**



''அவ்வளவுதானா கனவு?'' என்றார் டாக்டர்.

''ஆமாம்.''

''இது ஸ்கிட்ஸோப்ரீனியாவின் ஆரம்பமென நினைக்கிறேன்.''

நான் திடுக்கிட்டுப் போனேன். அவர் அப்படிச்சொன்னதால் அல்ல. அவரின் அந்தக் குரல் மிகவும், மிகவும் விசேஷத்துக்குரிய வகையில் எனக்குப் பரிச்சயமாய்த் தெரிந்தது. அந்தக் குரல் என்னிலிருந்தே வருவது போலக் கூடத் தோன்றியது.

என்மேல் முழுக்க ஏதேதோ பூச்சிகள் ஊர்ந்தன. சிலிர்ப்புடன் என்னை உதறிக் கொண்டேன். குலுக்கிக் கொண்டேன். எனக்கு ஒன்றுமில்லை. ஒன்றுமில்லை. நிதானி, நிதானி.

''ஏன் என்ன ஆயிற்று உனக்கு?'' என்றார் டாக்டர்.

''நிறைய பூச்சிகள் என் மேல் ஊர்கின்றன. மொய்க்கின்றன. அதனால் உடம்பைக் குலுக்கி அவைகளை உதிர்க்கிறேன்.''

''ஆகா இது ஸூரிலியம் மாதிரி கூடத் தெரிகிறது.''

''......''

''இதைப் போலவே வேறு எப்போதாவது உனக்கு நிகழ்ந்திருக்கிறதா?''

''ம்ம். விதவிதமாய் டாக்டர்.

''பல தடவைகள் என்னை வெறும் கரப்பானாக உணர்ந்து அருவெறுத்திருக்கிறேன். பல தருணங்கள் நான் நாயாகி நாக்கைத் தொங்க விட்டு நாலு கால் பாய்ச்சலில் ஓடுகிறேன். டாக்டர் எனக்குச் சாது பூனைகளால் தான்.

மிக மென்மையான முடிகளுடன் ஐந்தேகால் அடி உயர பூனைகள் வந்து மேல் உரசிக் கிளுகிளுப்பூட்டி, நான் மயங்கும்போது என்மேல் கால் பதித்து, கூர் நகம் பிதுக்கி என்னைக் கீறி, என் ரத்தத்தை, சக்தியை உறிஞ்சுகின்றன. எனினும் அப்போது எனக்கு வலி இல்லை. வெகு இன்பமாய் இருப்பதைப்போல் ஒரு பிரமை. ஆனால் பிறகே உடல் கூசுகிற மாதிரியான உணர்வு வேதனையாக மாறுகிறது. டாக்டர் இங்கு பூனைகள் உண்டா?''

''இல்லை. ஒரு ரஹஸ்யம் சொல்லட்டுமா? கொஞ்ச நாட்களுக்கு முன் நீ 'காஃப்காவைத் தொட்டாய் இல்லையா?''

''இப்படிச் சம்பந்தமில்லாமல் பேசுவது அதிகம் எரிச்சலூட்டுகிறது டாக்டர்?''

''முட்டாள். காஃப்காவின் கரப்பானாகிப் போன கிரிகர் சாம்ஸா உன் மனத்தை மிகப் பாதித்திருக்கிறான். என் சூழலும், அவன் சூழலும் ஒன்றுதானே, நானும் அப்படியாகி விடுவேன் என்று ரகசியமாய் ரொம்பவும் பயந்திருக்கிறாய். அப்பயத்தின் பல ரூபங்களே உன் நினைப்புக்கள்... பிறகு நீ மது எடுத்துக் கொண்ட நாட்களில் இப்படி டிலீரியம் போல் ஏற்பட்டிருக்கக் கூடும். உன் நினைப்புக்களுக்கு ஏற்றபடி பூனைகளாய், நாயாய் ஒரு தடவை ஒரு பேஷண்ட் போன் செய்தார். அவர் அறைக்குள் எங்கும் பூனைகள் நடனமாடிக் கொண்டு அவரைக் கொலை செய்ய முயலுகின்றன என்று...''

''......''

''ஏன் பேசாமல் இருக்கிறாய்?''

''என்னை எங்கே பேச விடுகிறீர்கள்? உங்களின் பிலாக்கணமே பெரிதாக இருக்கிறது.''

''சரி, சரி சொல். பிறகு என்ன?''

''மேகங்களிலிருந்து சுழன்று சுழன்று ஒரு நீண்ட படிக்கட்டு கீழ் இறங்குகிறது. அதில் நான் இறங்க, எனக்கு முன் 'பாலே' நடனம் போல ஒருத்தி இறங்கிக் கொண்டிருக்கிறாள். அவளைத் தொடர்வதில் எனக்குப் போட்டியைப் போலத் தெளிவற்ற முகங்கள் முன்னொருவன் வந்து கொண்டிருக்கச் சற்று நேரத்தில் வெற்றி எனக்கு.

''அவள் எங்கோ தொலைந்துவிட, நான் அவளை நெருங்குகிறேன். கைகோக்கிறேன். சுற்றிலும் போவோர், வருவோர். பேசுகிறோம், விநோத மொழியில். நான் அவளை முத்தமிட விரும்ப, அவளும் சம்மதிக்கிறாள். அவள் முகத்தை நெருங்குகிறேன். சற்றே திறந்து, மெலிதாய் ஆடின உதடுகளுள், அவளின் முன் பற்கள். வெகு அற்புதமாக, இருக்க சாத்தியமில்லாத ஜியோமிதித்தனமான சதுரங்களாய்ப் பளிச்சிடுகின்றன. பிறகு வேறு ஏதும் தெரியவில்லை. அந்த நடுங்கும் உதடுகள், பற்களைத் தவிர, அவை பெரிதாகிக் கொண்டிருக்கின்றன. மெல்ல, மெல்ல... விவரிக்க இயலாத விநோத உணர்வுகள் என்னைக் கவ்வ, செயலிழந்து நின்றேன். கால்கள் மெல்ல மெல்லக் கற்களாய் மாற ஆரம்பித்தன. டாக்டர், சுற்றி வளைக்கிற உங்கள் வியாக்கியானங்களை மறந்துவிடுங்கள். எனக்கு எதனால் இப்படி கனவுகள் டாக்டர்? தயவு செய்து சொல்லுங்கள்.''

''ம்ம்? சரி. சற்று மொன்னையாகச் சொல்வதானால் உன் சிறு வயதில்—அடி மனத்தை மூர்க்கமாய்கட்டுப்படுத்தி, தீய்த்த ஆசைகளின் வெடிப்பு இது. சிறு வயது என்ன, இப்பொழுதுமே உன் வாழ்க்கை வரைமுறைகள் இடமான சதுரக் கூண்டினுள்தான்.



எல்லைகள் நிர்மானமாய், தீர்க்கமாய் நிர்ண யிக்கப்பட்டிருக்கின்றன என்று நினைக்கிறேன். பிராய்ட் என்ன சொல்கிறார் தெரியுமா?''

''தெரிய வேண்டாம். எனக்கு உண்மையில் என்ன?''

''சொல்கிறேன். உன் கனவுகள் (நினைப்பு கள்)நான் முதலில்சொன்னதைஉறுதிப்படுத்து கிறது. ஆமாம். இது ஸ்கிட்ஸோப்ரீனியா.''

''என்னது?''

''ஆமாம். என் கேள்விகளுக்குப் பதில் சொல். உன் சூழல் உனக்கு வெறுக்க ஆரம்பித்திருக்கிறது இல்லையா? இத்தனை நாள் நண்பர்கள், காரியங்கள், இன்ன பிற அலுப்பூட்டுகின்றன. ம்?''

''சரிதான். விதிக்கப்பட்டதைப் போல் தினமும் தொடர்கிற 'டிட்டோஸ்'களை நான் சபிக்கிறேன். இவைகளிலிருந்து இந்தச்சலிப்பு களிலிருந்து தப்பித்துக் கொள்ள வேஷங்கள் அவசியமாய் இருக்கிறது. ஆனாலும் டாக்டர், இப்படி முகங்களை மாற்றிக் கொள்வதை, கொண்டிருந்ததை வெறுக்கிறேன்.''

''உன் இந்த இவர் நடவடிக்கைகள், உன் சூழலில் வியப்பை ஏற்படுத்திவிட்டது. இல்லையா?''

''அத்துடன் அதிர்ச்சியையும்.''

''சந்தேகமில்லை. நான் சொன்னதின் ஆரம்ப நிலையின் நிர்மானமான அறிகுறிகள் தான்.''

மௌனம். மௌனம். நீண்ட மௌனம்.

காலம் உறைந்து நின்று விட்டதா? நிமிடங்களின் நகர்தல் இல்லாமல் போனதா? ஏன்? எதனால்? எப்படி? யார் என்னை ஒளியின் வேகத்தை விட வேகமாய் இழுத்துப் போவது? அப்படிப் போகிறார்களா என்ன? பின் ஏன் நிமிஷங்கள் நின்று விட்டிருக்கின் றன? இல்லை. இது பிரமையோ? எல்லாமே தெளிவற்று. புகை படிந்த கண்ணாடியின் வழியே பார்ப்பது போல, நிழலாடுகிற வையே.

டாக்டர், டாக்டர் உங்கள் முகத்தை எங்கே ஒளித்து வைத்து இருக்கிறீர்கள்? கனத்த இருளுள் காணாமல் போனதோ? ஐயோ. டாக்டர், இந்த விளக்கின் வட்ட வெளிச்சத்தை, சற்றே உங்கள் முகப்புற மாகத் திருப்பக் கூடாதா? உங்களை நான் பார்க்க வேண்டும். உடனடியாக இப் போதே. ஆகா! மறந்தே போனேன். ஐயோ டாக்டர்! ஆ! அதற்கு முன் உங்கள் குரல்! உங்கள் குரல்! அது எப்படி என் குரலைப் போலவே இருக்கச் சாத்தியமாயிற்று? ஏதோ, ஏதோ ஏதோ நடக்கிறது. எதுவும் பிடிபடாமலேயே. பிடிபடாமலேயே.

''ஏய், என்ன மௌனமாகி விட்டாய் மீண்டும்?''

''டாக்டர்! எனக்கு அதிக பயமாக இருக் கிறது.''

''பயம் உன்னை வரும் விளைவுகளிலிருந்து தப்புவிக்கப் போவதில்லை.''

''டாக்டர், டாக்டர் நீங்கள் இப்படிப் பேசக் கூடாது. அதைரியமான என்னை ஆறுதல் படுத்த வேண்டியது உங்கள் கடமை.''

டாக்டர் சிரிக்கிற சப்தம் என்னை அருவெறுப்பு கொள்ள வைத்தது.

''ஏய், உன்னை ஸ்கிட்ஸோப்ரீனியா பாம்பு கடித்து விட்டது. விஷம் இன்னும் ஏற வில்லைதான். ஆனால் ஏறும் நிச்சயமாய்.''

''என்னைக் காப்பாற்றத்தான் உங்களிடம் வந்திருக்கிறேன்.''

''என்னிடமா? என்னது என்னிடமா?''

மீண்டும், அதே அருவை கொள்ளவைக் கிற சிரிப்பு.

''ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்? ஸ்கிட் ஸோப்ரீனியா அது இதுவென டையகனைஸ் செய்தது நீங்கள்தானே?''

''இருக்கலாம். என் சிற்றறிவைக்கொண்டு சொன்னேன். ஆனால் என்னால் உன்னைக் காப்பாற்ற முடியாது.''

''ஏன்? ஏன்?''

''நான் டாக்டரே கிடையாது. என் புத்தக அறிவைக் கொண்டு மட்டும் சொன் னேன். நான் யார் தெரியுமா?''


''யார்?''

''நீ தான்.''

விளக்கின் வட்ட வெளிச்சம், மெதுவாக நகர்ந்து... டாக்டரை இல்லை... என்னுடன் பேசினவரின் மேல் ஒளிர, ஒரு ராட்சதப் பல்லி என் மேல் விழுந்து என்னை இறுக்கி யது.

அந்த டாக்டர்... இல்லை... என்னுடன் பேசியவன்... அவன்... நான்தான், நான் தான். நானேதான். அப்படியானால் 'அவனு' டைய நானுடன் பேசிய 'இன்னொரு நான்' நான்?

முதுகில் அழுந்தி, கனத்த ராட்சதப்பல்லி யுடன் துரிதமாய்ப் பாய்ந்தேன். அறையின் மூலையில் இருந்த நிலைக்கண்ணாடியை நோக்கி. 'இன்னொரு நான்' என்பது யார், அந்த முகம் என்னவென்று பார்க்க. டாக்டர் என்று நான் சம்பாஷித்த அவனுடைய, நானின் சிரிப்பு சத்தம் அறையுள் நிறைந்து கொண்டிருக்க, வெளிச்சமும் மெல்ல பரவி யது. சகலத்தையும் மங்கலாய்த் தெரிய வைத்த பனிப்படலத் திரை மறைய — நிலைக்கண்ணாடியில், சுவர் ஓரத் திரைகள், படங்கள், சோபா, அறையின் மற்ற இத் யாதிகளும் தெரிந்தன. சிரித்துக் கொண் டிருந்த அவனும் தெரிய... எவ்வளவு முயன்றும் வேறு எதுவும் தெரியவில்லை.. என் முகம் உட்பட, ஏதும் தெரியவில்லை.



கருத்து : நாஸிப்பு

# டெபாசிட்தாரர்களுக்கு

# 24%

## வட்டி வழங்கப்படுகிறது

**மேற்படி கூடுதல் வட்டி**
**பென்ஷனர், மகளிர், மைனர்களுக்கு மட்டும்**
**''வெள்ளிக் குத்துவிளக்கு'' அன்பளிப்புடன் வழங்கப்படும்.**

கீழ்க்கண்ட வட்டி விகிதங்களில்
டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

| 1-வருடம் | 2-வருடங்கள் | 3-வருடங்கள் | 5-வருடங்கள் |
|---|---|---|---|
| 17% | 18% | 19% | 22% |

# ஜெயசக்தி பைனான்சியர்ஸ்

**(A LEADING HIRE PURCHASE FINANCIERS)**

| | | |
|---|---|---|
| சென்னை | : | 39, நடேச ஐயர் தெரு (2வது மாடி)<br>(சிவா-விஷ்ணு கோயில் அருகில்)<br>உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-600 017<br>போன் : 447186 |
| பெங்களூர் | : | 24/1-A, மார்கோஸா ரோடு (10வது கிராஸ்)<br>மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003. போன் : 366971 |
| திருச்சி | : | 22 மதுரை ரோடு (முதல் மாடி)<br>திருச்சிராப்பள்ளி-620 008 |
| பாண்டிச்சேரி | : | 11, நேரு தெரு (கனரா வங்கி எதிரில்)<br>பாண்டிச்சேரி-605 001 |
| தஞ்சாவூர் | : | எண் : 2 & 3, முதல் மாடி, ஜி. ஏ. கனால் ரோடு,<br>தஞ்சாவூர்-613 001 போன் : 1626 |
| திருவண்ணாமலை | : | 14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601<br>போன் : 483 |
| பட்டுக்கோட்டை | : | 9-A, தலையாரி தெரு, பட்டுக்கோட்டை-614 001<br>போன் : 453 |

CHARI



ஓம் க்ரீம் க்ரைம்
10
சதீஷும் மாதவியும் இருள் கவிந்த ரெஸ்டாரண்டில்.....
சதீஷ்! மசால் தோசையும் மெது பகோடாவுமா! வெறவு ஆய்டதா?
நம்ம கதையில எவ்வளவு மசாலா இருந்தது துன்னு மெதுவா பகோடா வரதுக்குள்ளே உங்கிட்ட சொல்ல வேண்டாமா? எங்கிருந்து ஆரம்பிக்கலாம்
கதை: ஜே.எஸ்.ராகவன்
சித்திரம்: செல்லம்
ஆதிகால கீர்த்தனாரம் பத்திலேந்து
ரைட்! மாதவி என் மாமா, ஆதியிலே ஒழுங்கா இருந்தார். அப்புறம் நீலகண்டனோட சேர்ந்து, கருப்புப் பணம், கோல்ட் பிஸ்கட்டுனு நடம் புரள ஆரம்பித்தார்.
ஆமா உன் மேல தன் வெறுப்பு?
என் வெள்ளைத் தலை "ஒயிட்" மணியையும் நீலகண்டனோட கருப்புத் தலை "பிளாக்" மணியையும் அவருக்கு சிம்பாலிக்கா உறுத்தி இருக்கணும்.
ரியலி!
சொத்து என் பேரிலும், அக்கா பேரிலும் இருக்கா! ஒண்ணும் செய்ய முடியாம இருந்தபோது தான்.....
நீலகண்டன் பிஸ்டலானந்தா வாக அப்பப்போ உருமாறி, தன் வேலையை ஆரம்பிச்சான்.
கரெக்ட். மேக்கப் போட்டுக்கறது அவனுடைய ஹாபி! ஸ்ரீலஸ்ரீயையும் ஈசியா ஏமாத்திருவான்.
பட், உங்க அக்கா எப்படி செத்தாங்க?
அமாவாசை அன்னிக்கு பிஸ்டல் பூஜைக்கு மாமா அழைச்சிண்டு வரச் சொன்னார்னு குடிலுக்கு அக்காவை அழைச்சிண்டு போனவன் நீலகண்டன்.


அவன்தான் பிஸ்டலால சுட்டானு மறைஞ்சிருந்து பார்த்த எனக்குத் தெரிஞ்சுது. பூஜையிலே கலந்துக்க வந்த மாதிரி நான் வெள்ளைத் துணிக்குள்ள புகுந்துண்டேன்.
டுமீல்னு குண்டு சத்தம் கேட்ட உடனே வெளியே வந்து பார்த்தபோது, அக்கா சாய்ந்து இருந்தாங்க. நீலகண்டனும், மாமாவும் ஓடிட்டாங்க!
நேரா உன் பிரதர்கிட்டே வந்து எல்லாத்தையும் சொன்னேன். பின்னாலே அவன் மூலமா அக்கா குண்டடிபட்டு சாகலே. ஏற்கனவே விஷம் வெச்சுக் கொல்லப்பட்டாங்கனு தெரிஞ்சுண்டேன்.
மைகாட்! எப்படி?
கூடுவாஞ்சேரிக்கு அழைச்சு வரதுக்கு முன்னே அக்காவுக்கு புது 'பிளேவர் ஐஸ் க்ரீம்'லே விஷம் கலந்து சாம்பிள் பாருங்கனு நீலகண்டன் கொடுத்திருக்கான்.
அர்ஜுனனின் கைரேகை படிய துப்பாக்கியால அக்காவையாவது, என்னையாவது சுட்டுக் கொல்லட்டும்னு நீலகண்டன் பிளான் போட்டான். அவர் கறுப்புத் துணியைப் பார்த்து சுட்டார். அப்புறம் நடந்தது தான் தெரியுமே.
மெது பகோடா வந்தபின்....
அர்ஜுனனை விட்டுடுவாங்க. இனிமே என் வெள்ளைத்துணி அவர் கண்ணை உறுத்தாது.
சதீஷ்! அவர் கண்ணை மாத்திரம் இல்லை. என் கண்ணையும் உறுத்தாது!
அப்போ நம்ப கல்யாணப் பத்திரிகை அடிக்கறோம். ஆனா அதிலே திருநிறைச்செல்வன் சதீஷ்னு போடக் கூடாது.
பின்னே?
திருநிறைச் செல்வன் சதீஷ்னு தான் போடணும்
முற்றும்

# தேவை ஒரு நாடகம்!

**628**

"ஒரு லேடீஸ் கிளப் உறுப்பினர்கள் Annual day'ல் போட நாடகம் தேடுகிறார்கள். பலவிதமாக யோசிக்கிறார்கள். பாலசந்தர், சோ ஆகியோரிடமும் ஓரங்க நாடகம் கேட்கிறார்கள். முடிவில் கிளப் பிரசிடெண்ட் தாமே ஒரு நாடகம் எழுதப் போவதாகக் கூறுகிறார்.

தங்களை இந்தச் சோதனையிலிருந்து கடவுள் காப்பாற்ற வேண்டும் என்று அங்கத்தினர்கள் வேண்டிக்கொள்ள—

—முடிவு அங்கத்தினர்களுக்குச் சாதகமாகவே அமைகிறது.]

## காட்சி—1

இடம்: ஒரு லேடீஸ் கிளப் ஹால்.
பாத்திரங்கள்: கிளப் பிரசிடெண்ட் மீனாட்சி,

உறுப்பினர்கள்: 1. லக்ஷ்மி — செக்ரட்டரி,
2. சுசீலா,
4. பத்மா,
5. விஜயா.

செக்ரட்டரி லக்ஷ்மி ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறாள். பத்மாவும் சுசீலாவும் வருகிறார்கள்.

பத்: என்ன லக்ஷ்மி எதையோ விழுந்து விழுந்து கூட்டிக்கிட்டு இருக்கீங்க?

லக்ஷ்மி: லேடீஸ் கிளப் செக்ரட்டரின்னு சும்மாவா பத்மா? கணக்கெல்லாம் ஒழுங்காப் பார்த்து வெச்சு இருந்தாத் தானே பிரசிடெண்ட் கிட்ட பதில் சொல்ல முடியும்? அது யாரு? சுசீலாவா?

சுசீ: ஆமாம் லக்ஷ்மி.

லக்ஷ்: சுசீலா உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கணும். போன வாரம் சேரியில இருக்கிற குழந்தைகளைக் குளிப்பாட்டப் போனது நீங்கதானே?

சுசீ: ஆமா... அதுக்கென்ன குழந்தைகளைக் குளிப்பாட்டறது சமூக சேவைதானே?

லக்ஷ்: ஆமா... அதுக்காக அந்தக் குழந்தைகளுக்கு 102 டிகிரி ஜுரம் பொறிபறக்கிற போது, இழுத்து வெச்சுக் குளிப்பாட்டலாமா? அவங்க அப்பாவைச் சமாளிக்கறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடுச்சு. இந்தா பத்மா உனக்கு டீ. வி.யிலேருந்து ஒரு லெட்டர் வந்திருக்கு.

பத்: அப்பாடா! இந்த லெட்டரைத்தான் ரொம்ப நாளா எதிர்பார்த்துட்டு இருந்தேன். கண்மணிப் பூங்காவுக்காகப் பத்து வயசா இருந்த போது அப்ளை பண்ணினேன். இப்பத்தான் மனைமாட்சிக்குக் கூப்பிட்டிருக்காங்க. பரவாயில்லே.

லக்ஷ்: மனைமாட்சியிலே என்ன செய்து காட்டப் போறீங்க?

பத்: பால் கவர்லேருந்து புடவை கிடைக்கற வழியைச் சொல்லித் தரலாம்னு இருக்கேன்.

சுசீ: பால் கவர்லேருந்து புடவையா! விளையாடறீங்களா!

பத்: இல்லே சுசீ. ஒரு வருஷப் பால் கவர் சேர்த்து வைச்சுக் கடையில போட்டாக் கணிசமா ஒரு தொகை வரும். அதிலேயிருந்து புடவை வாங்கிக்கலாம் இல்லையா?

லக்ஷ்: Stupid Idea அப்படி பார்த்தாப் பழைய பேப்பர்லேயிருந்து கூட ரவிக்கை வாங்கலாம்.

சுசீ: பத்மா டீ. வி. யிலே எப்படி சொல்லித் தரணும்கற விஷயத்தை முதல்லே தெரிஞ்சுக்குங்க. தெரிஞ்ச விஷயங்களைக் கூட யாருக்கும் தெரியாத மாதிரி சொல்லித் தரணும். அதுதான் மனைமாட்சி.


லக்ஷ்: எப்படி சுசீலா?

பத்: புரியலியே!

சுசீ: உதாரணமா ஒரு கிண்ணத்தை வெச்சுக் கிட்டு Programme ஆரம்பிக்கிறீங்கன்னு, 'இதுதான் கிண்ணம். இது எல்லா பிளாஸ்டிக் கடையிலும் கிடைக்கும். இப்படி எல்லாம் சின்னச் சின்ன விஷயங்களைச் சொல்லணும்.

பத்: இப்படி சொன்னா ரொம்ப கிண்டலா விடுமே!

சுசீ: என்ன இதைப் போய்க் கிண்டல்ங்கறே? பக்கத்துலே ஒருத்தங்க நின்னுகிட்டு எப்படி எல்லாம் கேட்பாங்க தெரியுமா? குழந்தைத்தனமா இருக்கும்? அதையும் சமாளிக்கணும். அப்புறம் நீங்க பாதி பேசிட்டே இருக்கிற போது உங்களை 'அம்போ'ன்னு விட்டுட்டு யாரையோ பார்த்துச்சரின்னு தலையை ஆட்டுவாங்க.




அதுக்காக நீங்க பேசறதை நிறுத்திடக் கூடாது. நீங்க பாட்டுக்குப்பேசிக்கிட்டே இருக்கணும்.

லக்ஷ்: Programme-ஐ எப்படிமுடிக்கறது?

கவி: பத்மா முடிக்க வேண்டியதே இல்லே. 'அடுத்த நிகழ்ச்சி சில நொடிகளில்'னு இவங்களே மறைக்க ஒரு கார்டு போடு வாங்க அவ்வளவுதான்.

(மெம்பர் விஜயா வருகிறார்.)

லக்ஷ்: என்ன விஜயா ரொம்ப டல்லா வரீங்க? இன்னிக்கு ஒரு சேஞ்சுக்காக வீட்டுலே உங்க சமையலா?

பத்: மாமியார் ஏதாவது திட்டியிருப்பாங்க.

விஜ: வாசல்லே பாத்திரக்காரன் வந்திருந்தான். பழைய துணி ஏதாவது கேட்டான். சரின்னு பழைய துணிகளோட இவரோட பாண்ட்டை எடுத்து அவன்கிட்டப் போட்டு முப்பது ரூபா பணமும்

கொடுத்து ஒரு தோசைக்கரண்டி வாங்கி னேன். சாயங்காலம் வந்தவர் மறுநாள் ஆபீசுக்குப் போட்டுக்கிட்டுப் போக பாண்ட் இல்லேன்னு பார்த்துட்டு, பெரிய தகராறு பண்ணினுர்.

பத்: விடு விஜயா இதெல்லாம் சகஜம் தானே?

விஜ: அதோட போகலே. வேற ஒரு பாத்திரக் காரனைப் பிடிச்சு வீட்டுல இருந்த நாலு எவர்சில்வர் பாத்திரத்தைப் போட்டு அவன்கிட்டேயிருந்து 2 டெரிகாட்பாண்ட் வாங்கிக்கிட்டார். இனிமே இப்படித் தான் பண்ணப் போறேன்னு சொல்லிட்டு காட்ரேஜ் பீரோவில இருந்த அத்தனை துணி மணிகளைச் சமையல் உள்ளே கொண்டு வெச்சுட்டுப் பீரோ பூரா பாத்திரங்களை வெச்சிகிட்டு அமர்க்களம் பண்ருர்.

லக்ஷ்: இது எவ்வளவோ பரவாயில்லே விஜயா. கமலாவோட வீட்டுக்காரர் பண்ணின அநியாயத்தைப் பார்த்தா...

பத்: என்ன பண்ணினுர்?

லக்ஷ்: என்ன பண்ணினுரா? கமலாவுக்கு பத்து குழந்தைகள் தெரியுமா?

கசி: ஆமா, அவளுக்குன்னு கோஷா ஆஸ்பிட்டல்லே ஒரு கட்டில் கோட்டாவே உண்டு. தெரியும்.

லக்ஷ்: ஒருநாள் அனுதை ஆசிரமத்துக்கு ஏதோ உதவி வேணும்னு சில பேர் வந்திருக்காங்க. இவர் கிடுகிடுன்னு கடைசி பையன் கணேஷைத் தூக்கிக் கொடுத்துட்டார். கையில பணம் இல்லே பையனை வெச்சுக்குங்கன்னு. கமலா 'ஓ'ன்னு கதறியிருக்கா. அதுக்கு, நமக்கு பணத்துக்குத் தான் பஞ்சம், குழந்தைகளுக்குப் பஞ்சம் இல்லேன்னுராம்.

விஜ: அப்புறம் அந்தக் குழந்தை கிடைச்சதா இல்லையா?

லக்ஷ்: அந்தக் குழந்தையைப் போய்க் கமலா கூப்பிட்டிருக்கா. அது சொல்லித்தாம்.

சென்ற தசரா விடுமுறையில் நாங்கள் குடும்பத்துடன் நேபால் சென்றோம். அன்று விஜயதசமி. காளி கோயில் சென்று வரலாம் எனப் புறப்பட்டோம். அங்கு நாங்கள் கண்ட காட்சி அப்பப்பா பயங்கரம்! தெருவுக்கு 4 எருமை மாடுகள் பலியுண்டு கிடந்தன. ரம்பத்தால் அதனை அறுத்து மக்களுக்கு விற்கின்றனர். காளி கோயில் செல்லும் வழியெல்லாம் ரத்தம். ஆடு, மாடு, சேவல், வாத்து. இவைகளைப் பலி கொடுத்து. அருகிலுள்ள ஆற்றிலேயே அவைகளைக் கழுவி எடுத்துச் செல்கின்றனர். ஆறு பூராவும் ரத்தம், குடல் என மிதக்கின்றது. எத்தனையோ இந்து மதத் தலைவர்கள், மடாதிபதிகள் இருக்கிறுர்களே இந்தக் கொடிய பழக்கத்துக்கு ஒரு முடிவு கட்டக் கூடாதா? அன்பே தெய்வம் என்று இவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா?

—எஸ். விஜயலக்ஷ்மி.



இந்த இடமே பரவாயில்லே. எனக்குத் தூக்கம் வரபோது தூங்கச் சொல்ருங்க. வீடு மாதிரி இல்லேன்னு. கமலா திரும்பி வந்துட்டா.

கசி: ஒரொரு சமயம் மனுஷங்க நடந்துக்கறதைப் பார்த்தாப் பைத்தியம் மாதிரி இருக்கு.

பத்: பிரஸிடெண்ட் மீனுட்சி வராங்க.

(மீனுட்சி பரபரப்பாக வந்து): இன்னும் 2 வாரத்துல நம்ம ஸிளப்போட ஆனிவர்சரி வருது தெரியுமில்லே.

கசி: ஆமா... அதை வழக்கம்போல கொண்டாடத்தான் போறோம்.

மீனு: எப்படி? எப்படி? பாக்கி லேடீஸ் கிளப்பிலே எல்லாம் பிரமாதமா Plan பண்ணியிருக்காங்க. ஒருத்தர் பத்மா சுப்பிரமணியம் டான்ஸ், ஒருத்தர் மனேகர் நாடகம் இப்படின்னு ஏற்பாடு பண்ணியிருக்காங்க. நாம என்ன பண்ணப்போறோம்?

லக்ஷ்: ம்... வந்து... பட்டிமன்றம் நடத்தலாமான்னு யோசிக்கறேன்.

மீனு: சரி, சரி சீக்கிரம் யோசிச்சுச் சொல்லு. இல்லேன்னு பாட்டி மன்றம் தான் நடத்த வேண்டி இருக்கும்.

கசி: பிரஸிடெண்ட்ஜி! பக்த துளசிதாஸ் நாட்டிய நாடகம் மெம்பர்ளை வெச்சுப் போடலாம்.

மீனு: நம்ம ஆடிடோரியம் ரொம்ப புதுசுல்லா. அதாவது தீபாவளியின் போது நம்ம மெம்பர்ஸ் ஆடின டான்ஸுக்கு வந்த கல்லே வைச்சுத்தான் கட்டினது. வேற...?

(எல்லோரும் யோசிக்க...)

மீனு: எனக்கொரு ஐடியா.

மெம்பர்ஸ்: என்ன?

மீனு: அதாவது சில சினிமா உலக புள்ளிகள், எழுத்தாளர்கள் ஓரங்க நாடகம் எழுதி வெச்சிருப்பாங்க. அவங்க கிட்டே பேசி தைஸா ஒரு ஸ்கிரிப்ட் வாங்கிட்டு வந்து டிராமா போட்டா எப்படி இருக்கும்?

கஸி: Very nice idea
பத்: Fantastic!
லக்ஷ்: யாருகிட்ட வாங்கலாம்?
மீனு: டைரக்டர் பாலசந்தர்கிட்ட கேட்க லாம். அவரும் சின்னச் சின்ன நாடகங்கள் போட்டிருக்கார்.
பத்: பாலசந்தர் கிட்ட நான் கேட்கறேன்.
லக்ஷ்: காமெடி வேணும்னு கேளு.
மீனு: சோ கிட்டே கேட்கலாம்.
லக்ஷ்: சோ எப்படி? தருவாரா?
மீனு: Play why not?
லக்ஷ்: அது அவரோட ட்ரூப் நடத்தற Play அதைத் தருவாரா?
மீனு: கஸி... நீதான் சோ கிட்ட போய்க் கேட்டு வாங்கிட்டு வரணும்.
கஸி: O. K.
மீனு: இன்னும் 1 வீக்லே நமக்கு Script வந்தாகணும். கிளம்புங்க. ஆ... முக்கிய மான விஷயம். நம்ம சினிமா ஆசாமிகள் கிட்டேயிருந்து ஸ்கிரிப்ட் வாங்கிப்போடப் போறோம்கற விஷயம் யாருக்கும் தெரியக் கூடாது.
கஸி: சோவுக்கும் பாலசந்தருக்கும் கூட வா?
மீனு: No No ... பாக்கி கிளப்புகளுக்குத் தெரியக் கூடாதுன்னேன்.
காட்சி 1 நிறைவுறுகிறது.

## காட்சி 2

ஒரு வாரம் கழித்து கிளப் ஹால்
கஸிலா, பத்மா, மீனாட்சி, லக்ஷ்மி.

லக்ஷ்: பத்மா... பாலசந்தர் கிடைக் கலே. ஆறு உன்னோட, ஆட்டோ டாக்ஸி டயணக் கட்டணம் மட்டும் 150 ரூபா ஆயி ருக்கு. Presidentஐ எப்படிச் சமாளிப் பேனோ?
பத்: நான் என்ன கம்மாவா சுத்திட்டு வரேன். பாலசந்தர் வீட்டுக்குப்போனேன். இப்பத்தான் ஏ. வி. எம். போனார்னுங்க. அங்க போனா, விஜயான்னு சொன் னுங்க. அப்புறம் பிரசாத் ஸ்டுடியோன்னு சொன்னாங்க. நானும் ஒவ்வொரு இடமாச் சுத்திக்கிட்டிருந்தேன். கடைசிலேதான் தெரிஞ்சது அவர் ராத்திரி பாம்பே போயிருக் கார்ன்னு: சரி! இன்னிக்கு பம்பாய்க்கு விமானத்திலே போகலாம்னு இருக்கேன்!
(மீனாட்சி வந்தபடி)
மீனு: என்ன ஆச்சு பத்மா?
லக்ஷ்: பாலசந்தர் ஊரிலே இல்லையாம். பம்பாயிலே இருக்காராம். அதான் பத்மா பிளான் பண்ணிக்கிட்டிருக்கா.

---

**மேலட்டையில்**

**நாய்க்குட்டியுடன் காணப்படுபவர்**

**குமாரி அனிதா**

வண்ணப்படம்: அனு

---

மீனு: என்னது இந்த ஒரு சின்ன ஸ்கிரிப்ட்டுக் காக பம்பாய் போகப் போறியா?
பத்: இதுக்காக மட்டும் இல்லே. என் தங்கை பம்பாயில் இருக்கா. அப்படியே கிளப் போட செலவுல அவளையும் பார்த்துட்டு வரலாம்னு பார்த்தேன்.
மீனு: அதெல்லாம் கிடையாது. அனிவர்சரி முடியற வரை யாரும் எங்கேயும் போகக் கூடாது.
(ஹேமா சோகமாக வருகிறாள்.)
பத்: ஏய்... ஹேமா... எங்கே இரண்டு மாசமா கிளப் பக்கமே காணோம்? முன்பெல்லாம் இங்கேயே இருப்பே?
ஹே: அது ஒரு பர்சனல் விஷயம்! அதுதான் வர முடியலே.
மீனு: என்னது? உங்க வீட்டுக்காரரோட ஷீலான்னு ஒரு பொண்ணு சுத்தறான்னு கேள்விப்பட்டியா?
ஹே: அது வந்து... எப்படி?...
மீனு: அதுக்குத்தானே வருத்தப்பட்டுக்கிட்டு வரலே...?
ஹே: ஆமா.
மீனு: பைத்தியம்! அது நான் பண்ணின ஏற்பாடுதான். ஒருநாள் உங்க வீட்டுக் காரர் என்னைப் பார்த்து 'ஓ'ன்னு அழு தார். விசாரிச்சேன். ஹேமா வீட்டுக்கே வரதில்லே. நான் பூரா வீட்டு வேலையெல் லாம் நானே பார்க்க வேண்டியிருக்கு. அவ லேடீஸ் கிளப்புன்னு சுத்திக்கிட் டிருக்கா. தினமும் ராத்திரி சாப்பாடு வைக்கலேன்னு கத்தறு. நீங்கதான் ஏதாவது வழி பண்ணி உடைஞ்சு போல உன் னங்களை ஒண்ணாக்கி வைக்கணும்னார். ரொம்பப் பாவமா இருந்தது. சரின்னு ஷீலான்னு ஒரு பொண்ணு லவ் லெட்டர் அவருக்கு எழுதற மாதிரி நான் எழுதி னேன். ஹேமாவுக்குச் சந்தேகம் வர ஆரம்பிச்சது. வீட்டோட இருக்க ஆரம் பிச்சுட்டா. நேத்து ஹேமாவோட வீட்டுக்காரர் பிள்ளையார் கோவிலிலே 108 தேங்கா உடைச்சுக்கிட்டு இருந் தார். கண்களிலே நன்றியோட என்னைப் பார்த்துச் சிரிச்சார்.
(கஸிலா வந்து விடுகிறாள்.)
ஹே: அப்படியா! இப்பவே நான் அவரை மீட் பண்ணி மன்னிப்புக் கேட்கறேன்.
லக்ஷ்: இப்ப சொன்ன இந்த ஐடியாவை அப்படியே நாடகமாப் போடலாம்.
மீனு: ஏன்...? இதோ கஸிலா ஏதோ ஸ்கி ரிப்ட் வாங்கிட்டு வந்திருக்கா. சோ கிட்டேயிருந்து! என்ன ஆச்சு கஸிலா?
கஸி: சோவைப் பார்த்துப் பேசினேன். அவர் கேட்டார். இப்ப நாட்டுல எவ்வ ளவோ பிரச்னை இருக்கு. இதுக்கு நடுவில நீங்க ஆனிவர்சரி கொண்டாடலேன்னு

எவன் அழுதான்னுர். இல்லே, எப்படியும் கொண்டாடணும் ஒரு நாடக ஸ்கிரிப்ட் வேணும்னேன். இந்த மாதிரி நாடகம் போட்டு ஆனிவர்சரி கொண்டாடறதை விட சோஷல் சர்வீஸ் பண்ணுங்க, என்றார். சரின்னு வந்துட்டேன்.

மீனு: சே: ... நம்ம பிளான்படி எதுவும் நடக்காது போல இருக்கே?

லக்ஷ்: நாடகம் சுஜாதாகிட்ட கேட்டா எப்படி?

பத்: முடியாது. அவர் கதையில கம்ப்யூட்டர் தான் ஹீரோ, ஹீரோயின் எல்லாம், நமக்கு ரோல் கிடைக்காது.

மீனு: நானே ஒரு நாடகம் எழுதப்போறேன்

லக்ஷ்: ஆ!

பத்: நீங்களா?

கவி: சினிமாக்காரங்க மேலே கோவிச்சுக்கிட்டு எங்களைத் தண்டிக்காதீங்க.

மீனு: என் எழுத்து மேல உங்களுக்கு நம்பிக்கை இல்லேயா? நான் எழுதின கதைகளைப் படிச்சுட்டு, எழுத்தாளர் சோமசுந்தரமே 'ஓஹோன்'னு புகழ்ந்து பாராட்டியிருக்கார்.

பத்: யார் அவர்?

மீனு: எங்கவீட்டுக்காரர் தான்! நான் விழுந்து, விழுந்து சிரிச்சிருக்கேன்.

கவி: சரி... நீங்க சிரிக்கலேன்னு எப்படி? ஆகக்கூடி நீங்கதான் எழுதப்போறீங்க?

மீனு: ஆமா பார்த்துக்கிட்டே இருங்க, இன்னும் இரண்டு நாட்களிலே ஸ்கிரிப்ட் போட வரேன்.

(போகிறாள்.)

லக்ஷ்: கடவுளே, இந்த ஆபத்துலேயிருந்து எங்களைக் காப்பாத்த நீதான் வரணும்.

பத்: ம்... நம்ம தலைவிலே அந்த மாதிரி நாடகம்தான்னு எழுதி இருந்தா மாத்த முடியுமா? கவலேப்படாதீங்க... நாடகம் மட்டமா இருந்தா ஏதாவது ஒருசாக்கைச்



**அண்ணாதுரையின் உவமைகள்**

- குற்றாலம் சென்று குழாயடியில் குளிப்பது போல்.
- கரும்பைக் கொண்டு வந்து அடுப்பெரிப்பது போல்.
- யானை மீது அம்பாரி அமைத்து அமர்ந்து பூனை பிடிக்கச் செல்வது போல்.
- கழனியை உழுது கள்ளிச் செடி நடுவது போல்.
- சாமியார் ஆகிவிட்டு மாமியார் வீட்டுக்குச் சாப்பிடச் செல்வது போல்.
- தங்கத் தாம்பாளத்தில் தவிட்டுப் பொடியை வைப்பது போல்.

தொகுப்பு: ப. மூர்த்தி.

---

சொல்லிட்டு, நாம எல்லோரும் ஆளுக்கு ஒரு ஊருக்குக் கிளம்பிடுவோம்.

## காட்சி—3

லக்ஷ்மி, பத்மா, கவிதா.

கவி: பத்மா... கொஞ்சநேரம் ரெஸ்ட் எடுத்துக்கலாம்னு இருக்கேன், ஜுரம் வரும் போல இருக்கு...

பத்: இப்படியெல்லாம் சொல்லி எங்கக்கிட்டேயிருந்து தப்பிச்சுடலாம்னு நீனைக்காதே. அப்புறம் எங்களுக்கு மட்டும் ஜுரம் வராதா?

கவி: இல்லே பத்மா, தலைவிக்கு ஏன் இந்த ஆசை? ஒரு நாள அவங்க எழுதின லெட்டரைப் பார்த்தேன், மகா மோசம். சின்ன 'ர' போட வேண்டிய இடத்துல பெரிய 'ற'. 'ல்', 'ள்' வேற தகராறு. பயமா இருக்கு.

கவி: இதுலேயிருந்து தப்பிக்கணும்னு யாராவது சினிமாக்காரங்களே வந்து ஆக்ட் பண்ணணும்.

(லக்ஷ்மி ஓடிவந்து)

லக்ஷ்: கவி... பத்மா... விஷயம் தெரியுமா?

கவி: என்ன பிரஸிடெண்ட் எழுதமாட்டேன் னுட்டாங்களா?

லக்ஷ்: நம்ம தலைவி எழுதி எடுத்துக்கிட்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்திருச்சாங்க பஸ்ஸுக்காக வெயிட் பண்ணிண்டு இருந்திருக்காங்க. அந்த நேரத்துல ஒரு கார். அதுல டைரக்டர் பாரதிராஜா, தன்னோட அடுத்த படத்துக்காக ஹீரோயினைத் தேடிக்கிட்டு வந்திருக்கார் நம்ம தலைவி எழுதறது வேணு சுமாரா இருக்கலாம். ஆனு மூஞ்சி மோசம் இடையாது. இல்லேயா? உடனே அவங்ககிட்ட பேசித் தன்னோட அடுத்த படத்துலநடிக்க ஒத்துக்க வெச்சுட்டார் நம்ம தலைவி. நாளைக்கு மதுரைக்குப் போறாங்க. ஏதோ ஒரு கிராமத்துல ஷூட்டிங்காம்.

கவி... நம்ம தலைவி சினிமாக்காரங்களே வேண்டாம்னுங்க. இப்ப அவரே சினிமாவில நடிக்கிறதற்குப் போயிட்டாங்க.

பத்: எப்படியோ நம்ம கிளப்புக்கு வரவேண்டிய மோசமான நாடகத்தைத் தடுத்துப் பாரதிராஜா நம்மைக் காப்பாத்திட்டார்.

லக்ஷ்: தெய்வமா வந்து பாரதிராஜா நமக்கு உதவி பண்ணியிருக்கார். அதனால ஆனிவர்சரிலே பாரதிராஜாவைக் கூப்பிட்டு ஒரு பாராட்டு விழா நடத்துவோம்...!

பத், கவி: சரி...

(முற்றும்)

தாய்லாந்து நாட்டில், நந்தபர்நகரில் ''திட்டும் போட்டி'' ஒன்று நடக்கிறது. யார் விடாமல் வலுவாகத்திட்டுகிறார்களோ அவர்களுக்கே பரிசு. இப்போட்டியில் பெண்கள் மட்டுமே பங்கேற்கலாம். மதம், பரம்பரை, நாடு— பற்றித் திட்டக் கூடாது.

- அன்னா அன்பழகன்.

# குலுக்!

''அல்லாவே! மழை பெய்ய வேண்டித் தானே பிரார்த்தனை செய்தோம்! எங்களது பிரார்த்தனைக்கு ஏன் செவி சாய்க்கவில்லை? எங்களிடம் என்ன குறையைக் கண்டீர்கள்?'' —என்றார் மூஸா நபி.

''உங்களின் கூட்டத்தில், பிறரைப் பற்றிக் குறை கூறிப் பழிக்கும் இழி குணம் படைத்த ஒருவன் இருக்கிறான்!'' என்று பதில் ஒலித்தது.

''அவனை யாரென்று அடையாளம் காட்டுங்கள்! எங்களின் கூட்டத்தில் இருந்து அவனை நீக்கி விடுகிறோம்.'' என்றார் மூஸாநபி.

''உங்களில் ஒருவனை நான் அடையாளம் காட்டினால், பிறரைப்பற்றிப் பழித்துக் கூறுபவர்களில் நானும் ஒருவனாகி விடுவேன்! இது நியாயமாகுமா?'' — அல்லாவின் குரல் மீண்டும் ஒலித்தது.

தவற்றை உணர்ந்து மூஸாநபி தமது சீடர்களுடன் அல்லாவிடம் மன்னிப்புக் கோரினார்.

மறுகணம், அப் பஞ்சப் பிரதேசம் மழையில் நனைந்து கொண்டிருந்தது.

—ஏ. நிர்ச்சலா தேவி.

டாக்டர் சந்திரசேகரன் பூக்கடிகாரம் ஒன்றினைத் தயாரித்திருக்கிறார். இவர் மதுரை காமராஜர் பல்கலைக்கழக விலங்கியல் துறை பேராசிரியர். காலை 6 மணிக்கு மயில் கொண்டை பூ மலர்கிறது. 9 மணிக்கு செம்பருத்தி பூக்கிறது. 12 மணிக்கு இட்லிப்பூ இதழ் விரிக்கிறது. இது போல மதியம் 3 மணி, மாலை 6 மணி, இரவு 9 மணி, 12 மணி, 3 மணி என ஒவ்வொன்று மூன்று மணிநேரத்திற்கும் மலரும் பூ இருக்கிறது என்கிறார் இவர். இந்த அடிப்படையில் தான் இவரது பூக்கடிகாரம் உருவாகியுள்ளது.

—மீனாமுத்து



செவ்விந்தியர்களில் ஒரு பிரிவினர் தங்கள் சமூகத்தின் பேச்சாளர்களுக்கு இந்த விசித்திர நிபந்தனை விதித்திருக்கிறார்கள்: பேச்சாளர் ஒற்றைக்காலில் நின்று கொண்டு தான் பேச வேண்டும். கால் வலிக்குப் பயந்து பிரசங்கி மரியாதையாகச் சுருக்கமாகவே பேசுவார்.


சைபீரியாவில் ஒருசமயம் வேறொரு விதமான வழக்கம் அமுலில் இருந்தது. பேசுகிற துரதிர்ஷ்டசாலி, ஐஸ் தண்ணீரில் நின்று கொண்டு பேசவேண்டும்; கால் கடுத்துப் போவதற்குள் பிரசங்கி தம் பேச்சை முடித்துக் கொண்டு ஓடி விடுவார்.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்

# குலுக்!

சிறைச்சாலைகளைக் கட்டவும், நிர்வகிக்கவும் தனியார் துறை நிறுவனங்கள் உருவாகியுள்ளன. கைதிகளைக் குறிப்பிட்ட காலத்துக்குச் சிறைப்படுத்தி வைத்திருக்க அரசாங்கத்திடம் பணம் பெற்றுக் கொள்கிறார்கள். அரசாங்க சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதால் இந்தத் தனியார் துறை சிறைக் கூடங்களுக்கு நல்ல கிராக்கி. மேலும் இதிலுள்ள வசதிகளைச் சிராக்கப் பல கைதிகள் தம்மைத் தனியார் துறை சிறைக்கே அனுப்புமாறு கோருகிறார்கள்! எங்கே இப்படி நடக்கிறது? தனியார் துறைக்கு மிகுதியான சுதந்திரமும் ஊக்கமும் அளிக்கப்படும் அமெரிக்காவில்தான்!

—நியூஸ்வீக்.



# பாகம் பிரியாளும் வனதுர்க்கை நாயகியும்

சில தலங்களில் அர்ச்சகர்களின் அசிரத்தை நமக்கு ஏமாற்றமளிப்பதாக இருக்கிறது. வேறு சில தலங்களுக்குப் போகும் போது தல புராணம் மட்டுமில்லாமல், வரலாற்றுச்செய்திகளையும் கல்வெட்டுக்களையும் பற்றிக் கூடத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் அர்ச்சகர்களைச் சந்திக்கிறோம். வேதாரண்யத்தின் அருகில் உள்ள அகத்தியான் பள்ளியில் வைரவநாத குருக்களைச் சந்தித்த போது "இந்த மாதிரி ஈசனுடைய சேவையில் ஈடுபட்டிருப்பவர்களுக்காகத்தான் நாட்டில் மழை பெய்கிறது" என்று தோன்றியது.

"என்றுமுள தென்தமிழ்
இயம்பி இசை கொண்
டான்"


என்று அகத்திய முனிவரைப் புகழ்ந்து விட்டார் கம்பர். தமிழ் என்றும் நிலைத்திருக்குமானால் அதை அளித்த அகத்தியரின் நினைவும் என்றும் நிலைத்திருக்கும்.

கொடிய அரக்கனை விளையாட்டாக ஜீரணம் செய்து கொண்டவர். ஸமுத்திரத்தை உள்ளங்கையால் எடுத்துக் குடித்து விட்டவர். விந்திய மலையின் கர்வத்தை அடக்கியவர். பார்வதி பரமேசுவரனின் திருக்கலியாணக் கோலத்தைக் காண எல்லாத்தேவர்களும் வடதிசை சென்ற போது அந்தப் பாரம் தாங்காமல் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்து போயிற்று. ஈனதைச் சமன் செய்ய ஈசனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அகத்தியர். இத்தனை தவவலிமையுடைய மகரிஷியை அவர் குறுமுனிவர் என்பதால் தும்பிக்கை இல்லாத விநாயகரைப் போலக் குட்டை குட்டையாகத் தொப்பையுடன் வழக்கமாகக் காண்கிறோம்.

ஆனந்தி

அதற்கு மாறாக அகத்தியான் பள்ளியில் ஆனந்தப் புன்னகை தவழ சின் முத்திரையுடன் வீற்றிருக்கிறார் அகத்திய முனிவர். அகத்தியான் பள்ளி என்றதும் அகத்திய முனிவருக்கு எழுப்பப்பட்ட கோவில் என்று தோன்றுகிறது. தமிழ்நாட்டுக் கோவில்களில் வழிபட்டோரின் பெயர்களுடன் விளங்குவனவும் உண்டு. அகத்தியான் பள்ளியும் அப்படிப் பெருமையோடு விளங்குகிறது. அகத்தியர் திருக்கயிலாய மலையில் உமா மகேசுவரர் திருக்கலியாணக் கோலத்தைக்காண முடியாமல் போயிற்றல்லவா? அந்தக் கோலத்தைக் காண வேண்டும் என்று அகத்தியர் இந்த இடத்தில் தவம் செய்தாராம்.

○ வேதாரண்யம் வன துர்க்கை அம்மன் ஆலயம்



சுவாமி பெயர் அகஸ்தீச்வரர். அம்மை பாகம் பிரியாள் நாயகி.


பாடல் பெற்ற தலம் என்ற உடனேயே ஒரு தனி சுவாரஸ்யம் உண்டாகி விடுகிறது நமக்கு. பாலகனை ஞானசம்பந்தர் இந்த வழியாக வந்திருப்பார். தன் பிஞ்சுக் கைகளால் பொற்றாளத்தைத் தட்டிக் கொண்டும், பாடிக் கொண்டும் இந்தப் பிராகாரத்தில் வலம் வந்திருப்பார். நாம் நிற்குமிடத்திலேயே ஒரு வேளை நின்று கொண்டு சுவாமி தரிசனம் செய்திருப்பார் என்றெல்லாம் எண்ண அலைகள் எழும்பிவிழ சுவாமி தரிசனம் செய்யச் செல்கிறோம்.

திருவகத்தியான் பள்ளியை அடைந்த சம்பந்தர் பெருமான் பதிகம் பாடியிருப்பதோடு திருக்ஷேத்திர கோவையிலும் அகத்தியான் பள்ளியைக் குறிப்பிட்டிருக்கிறார்.

"அன்னந்தங்கு பொழில்சூ
ழகத்தி யான் பள்ளியை
உன்னஞ்செய்த மனத்தார்க
டம் வினை யோடுமே"

என்று நீர்ப்பறவைகள் தங்குவதைக் கண்டு பாடியிருக்கிறார். இருபதாம் நூற்றாண்டிலும் கூட அகத்தியான் பள்ளியிலிருந்து கோடிக்கரை, அதற்கும் தெற்கே சித்தர் ஓடை என்று வழங்கப்படும் கடற்கரை வரையில் ஓரளவு இயற்கை வளங்கள் அப்படியே இருக்கின்றன.

அகத்தியான் பள்ளிக்கு அருகிலே தான் 1930–ஆம்



அகஸ்தியான் பள்ளி முகப்புத் தோற்றம்

ஆண்டில் உப்பு சத்தியாக்ரகம் நடைபெற்றது. ஆகவே தமிழ்நாட்டின் சுதந்திரப் போர் வரலாற்றிலும் ஒரு முக்கியமான இடம் உண்டு அகத்தியான் பள்ளிக்கு. இந்தக் கோவிலுக்குச் சொந்தமாகப் பல ஏக்கர் உப்பளங்கள் இருப்பதாக வேதாரண்யம் தல வரலாற்றில் காணப்படுகிறது.

கோவில் சுத்தமாக இருக்கிறது. பிராகாரத்திலுள்ள அகத்தியரை முதலில் தரிசனம் செய்கிறோம். அருகிலுள்ள வேதாரண்யத்தில் ஈசனும் உமையும் மணக்கோலத்தில் காட்சி தருவதைக் கண்டு மகிழ்ந்திருக்கிறாரோ? அல்லது நம்மைப் பார்த்துத் தான் முகமலரப் புன்னகை புரிகிறாரோ?'' என்று அதிசயிக்கிறோம்.

விநாயகப் பெருமான் முருகப் பெருமான் சந்நிதிகளில் தீபாராதனை செய்துவிட்டு அகத்தீஸ்வரருக்கு அர்ச்சனை செய்து பிரஸாதம் வழங்குகிறார் குருக்கள். பாகம் பிரியாள்நாயகி சிறு பெண்ணைப் போல அடக்க ஒடுக்கமாக நிற்பது நமக்கு ஒரு இன்பமான பூரிப்பைத் தருகிறது. பாகம் பிரியா நாயகி என்று நாம் கூறுவதால் நாணி நிற்கிறாளோ? அகத்திய முனிவருக்கு வேதாரண்யத்தில் தானே திருமணக்கோலத்தில் காட்சி தரப் போகிறார்கள்? அந்த வைபவத்தை எதிர்பார்க்கும் புன்னகையோ?

''...பொழிக்கும் அகத்தியான் பள்ளியான்
புரிந்ததுவும் உமையாளோர்
பாகம் புணர்ந்ததுவே'' என்ற

தேவாரம் நினைவுக்கு வருகிறது. தன்னை விரும்பித் தன் பாகத்தோடு இணைத்துக் கொண்டு பாகம் பிரியாளாக ஈசன் ஏற்றுக்கொள்வதை எதிர்பார்த்து நாணி நிற்கிறாளோ?

இப்படியெல்லாம்பரவசப் பட்டுத் திருமணப்பெண்ணை கண்டு உவகையுடன் மகிழும் தாயின் மனப்பாங்கோடு தேவியைத் தரிசனம் செய்து கொண்டு ஒரு சிறிய அழகான கோவிலைப் பார்த்துக் களித்த நிறைவுடன் கிளம்புகிறோம்.

அகத்தியான் பள்ளியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது அருள்மிகு வன துர்க்கை ஆலயம். ''வேதாரண்யம் கோவில் வடக்கு வடகட்டளை வனதுர்க்கையம்மன்'' என்று கூறினார் அங்கு பூஜை செய்து கொண்டிருந்த குருக்கள்.

தரிசனத்துக்குச் சென்ற போது ராகு கால பூஜை நடந்து கொண்டிருந்தது. வெள்ளிக்கிழமையும் கூட. கோவில் நன்றாக அலங்கரிக்கப்பட்டு சர விளக்குகளும், நில விளக்குகளும் மாவிளக்குகளும்(எலுமிச்சம் பழ மூடிகளில் ஏற்றிய விளக்குகளும்) சுடர் விட்டெரிய அழகாகக் காட்சியளிக்கிறது. தரிசனத்துக்கு வந்திருக்கும் அன்பர்கள் பயபக்தியோடு வழிபாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அம்மாள் மாவிளக்குப் போட மாவு பிசைந்துகொண்டிருக்கிறாள். புஷ்பமாலைகளும், உடைத்த தேங்காய் மூடிகளும், அழும் குழந்தைகளுமாகத் திருவிழாக் கோலம் பூண்டிருக்கிறது கோவில். கருவறையும், எதிரே உள்ள கொட்டகையும் தான் கோவில். வன துர்க்கையம்மன். ஆகாயத்தையே கோபுரமாகவும், பூமியையே தன் பீடமாகவும் கொண்டவள் அல்லவா? கருவறைக்குள்ளே மோனத்தவமிருக்கும் அன்னை அல்ல இவள். அகில [illegible] லும் [illegible]த்துக்கொண்டு [illegible]ண்டப் பெருவெளியில் தொங்குகின்ற எல்லா நக்ஷத்திர மண்டலங்களின் இயக்கத்துக்கும் காரணமாக இருக்கும் சக்தி இவள். நமக்கும் அருள் புரிவதற்காக ஒரு சின்னக் கோவிலில் உருவம் தாங்கி வந்திருக்கிறாள்.

மிருகண்டு மகரிஷி தன் பிள்ளைப்புத்திர சோகத்திலிருந்து காக்க வேண்டுமென்று துர்க்கையை நோக்கித்தவமிருந்த வனம் இது என்று கூறினார்கள்.

விந்திய மலையின் கர்வத்தை அடக்கும் சக்தியை அகத்தியருக்கு அருளிய அன்னை இந்த வனதுர்க்கை.

திரை விலகித் தீபாராதனை ஆகிறது. அற்புதமான அலங்காரத்துடன் மலர்மாலைக் குவியலில் அன்னையைத் தரிசிக்கிறோம்.

மண்ணும் காற்றும்
புனலும் அனலும்
வானும் வந்து
வணங்கிநில் லாவோ!
விண்ணு ளோர்பணித்
தேவல்செய் யாரோ!
வெல்க காளிபதங்களென்
பார்க்கே.
—பாரதியார்.

அகஸ்தியான் பள்ளி அகஸ்திய முனிவர்



# குழந்தைகள் முடித்த திருமணம்!

-ராமப்ரியா-

அன்று வந்த தினசரியில் வெளியான விளம்பரம் கோபாலனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அந்த விளம்பரத்தை மட்டும் பேனாவினால் கட்டம் போட்டான். அதிலுள்ள வாக்கியங்களைக் கீழே கோடிட்டு அதற்கு முக்கியத்துவம் கொடுத்தான். அந்த நாலைந்து வாக்கியங்கள் அவனுக்கு மனப்பாடம் ஆகிவிட்ட போதிலும் அதை ஏனோ மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய ஐந்து வயதுப் பெண் தேன்மொழி இரு கைகளையும் கன்னத்தில் வைத்துக் கொண்டு தந்தையையே கண்ணைக் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். ''டாடி! பக்கத்தைத் திருப்பலையா?'' என்று கேட்டதும் தான் பெண் தன்னையே கவனித்துக் கொண்டிருக்கிறாளென்பது கோபாலனுக்குப் புரிந்தது. ''தேன்! உனக்கு அம்மா வேணுமென்று சொல்வாயே! நல்ல அம்மாவாக இருந்தால் அவளை இங்கு அழைச்சுண்டு வரலாமா?'' என்று ரொம்ப சகஜமாகக் கேட்டான். தேன்மொழி ரொம்ப சுட்டிப் பெண். மகா புத்திசாலி. எதையும் உடனே மண்டைக்குள் கிரகிக்கும் சக்தியுடன் வயதுக்கு மீறிய கெட்டிக்காரத்தனமும் இருந்தபோதிலும் என்னமோ சாக்லேட் வேணுமா வாங்கி வரட்டுமா என்கிறமாதிரி அப்பா கேட்டது அந்தக் குழந்தைக்குசிரிப்பு அடக்க முடியாமல் வந்தது. வெள்ளிக் காசுகளைத் தரையில் கொட்டினமாதிரி விடாமல் சில நிமிஷங்கள் சிரித்தாள். ''அம்மா தான் செத்துப் போயிட்டான்னு சொன்னியே அப்பா. செத்துப் போன அம்மா எப்படி வர முடியும்?'' என்று தன் பெரிய கண்களை இன்னும் அகலமாக்கிக் கொண்டு கேட்டாள்.

குழந்தையை அப்படியே ஆட்டுக்குட்டி மாதிரி தூக்கி ஒரு சுழற்று சுழற்றி மடியில் இழுத்துக் கொண்டான். கன்னத்தில் மாறி மாறி முத்தம் கொடுத்தான். ''கண்ணு மணியே! தேனே! என் ஹனிக்குட்டியே! நான் சொன்னது உன் பழைய டர்ட்டி அம்மாவை இல்லே. புதுசா ஒரு அம்மாவை உனக்கு வரவழைக்கட்டுமா?'' என்றான்.

''எங்கம்மா ஒண்ணும் டர்ட்டி அம்மா இல்லே? ஆமாம்! புது அம்மாவை மந்திரம்போட்டு வரவழைப்பாயா?'' என்று ரொம்ப சீரியஸாகக் கேட்டாள்.

'அந்தச் சனியன் இப்படி ஒரு அதி மேதாவியைப் பெத்து விட்டுப்போனாளே!' என்று தன் மாஜி மனைவியை மனதார வைதான். ''மைடியர் ஹனி! எதிர்ப்பேச்சு பேசக் கூடாது. இன்னும் இரண்டு நாளில் புது அம்மா வீட்டுக்கு உன்னை அழைச்சுண்டு போவேன். அங்கே உனக்கு ஒரு ஸிஸ்டரும் இருக்கா. உனக்குப் புடிச்சா அவா ரெண்டு பேரையும் இங்கே அழைச்சுண்டு வருவேன். அப்புறம் நம்ம நாலு பேரும் ஜாலியா சினிமா, பீச், ஐஸ்கிரீம் பார்லர், கிண்டி பார்க் எல்லா இடத்துக்கும் போலாம். சரியா?'' என்று கேட்டான் கோபாலன். தேன்மொழிக்கு ஒரே குழப்பம் தான் அதிகமாகியது.

''இதைப்பார்! அம்மா வீட்டுக்கு அழைச்சுண்டு போறவரை நான் ஒண்ணுமே சொல்ல மாட்டேன். நீயே பார்த்துக்கோ!'' என்று தற்காலிகமாக அந்தச் சின்னஞ்சிறு வாயை மூடினான்.



அவனுக்கே ஒரு விவரமும் தெரியாமலிருக்கும் போது குழந்தைக்கு எப்படிப் பதில் சொல்வான்.


உஷாவைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டான் கோபாலன். கோபாலனுக்குப் பெற்றவர்கள் கிடையாது. ஒன்று விட்ட சித்தப்பாவின் கண்காணிப்பில் வளர்ந்து படித்தவன். ஊரில் இருக்கிற டிகிரிகளில் சில பலவற்றை இவன் வாங்கிய பிறகு கோபாலன் பொறுப்பான உத்தியோகத்தை ஏற்றுக் கொண்ட பிறகு தன் கடமை முடிந்தது என்பதற்கிணங்க அவன் சொத்துக்களை அவனிடம் ஒப்படைத்து விட்டு அந்தச் சித்தப்பா நிம்மதியாகக் கண்ணை மூடினார்.

உஷா மிகவும் படித்த பணக்காரர் வீட்டுப் பெண். தாயில்லாமல் வளர்ந்ததால் ஆண்பிள்ளை குணங்களே அதிகம் அவளிடம் இருந்தன. எப்படியோ கோபாலனுக்கும் உஷாவுக்கும் நட்பு உண்டாகிக் காதலில் ஈடுபாடு ஏற்பட்டு, கலியாணத்தில் முடிந்தது.

உஷாவுக்கு ஆண்கள் தான் அதிகமான நண்பர்கள். எல்லோரிடமும் சகஜமாகப்பேசுவாள். எல்லோரையும் தொடாமல் பேசத் தெரியாது. கணவன் எதிரே யாராவது ஒரு நண்பரைக் காட்டி, 'அவருடன் சினிமாவுக்குப் போகிறேன்' என்று போவாள். இன்னொரு நாள் ஹோட்டலுக்குப் போவாள். முதலிலேயே அவளுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்து விட்டிருந்ததால் கோபாலனுக்கு வாயைத் திறக்கவே வழியில்லை. உஷா ஜாலியாக ஆண் பிள்ளைகளுடன் சுற்றுவதையும் அவர்களோடு தொட்டுப் பேசுவதையும் நாகரீகமாக வைத்துக் கொண்டாளே தவிர நடத்தையில் அவள் சுத்தமானவள் என்பது கோபாலனுக்கு நன்ருகத் தெரிந்திருந்ததால் அவளைக் கண்டிக்க முடியாத நிலையில் இருந்தான்.

இரண்டு வருடங்களுக்குக் குழந்தை பிறக்கக் கூடாது என்று ஏதேதோ கலர்கலராக இரவில் மாத்திரைகள் சாப்பிடுவாள். அதற்கும் கோபாலன் வாயைத் திறக்கவில்லை. இரண்டாவது மணநாளன்று உஷா பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து அமர்க்களப்படுத்தி விட்டாள். கோபாலனும் உயர்வான பதவியிலிருப்பதால் விழா வெகு சிறப்பாக நடந்தது. கோபாலனுக்கு மனைவியின் சாமர்த்தியத்திலும் மனிதர்களிடம் அவள் பழகும் விதத்தைப் பார்த்து ஒரு வித பிரமிப்பே உண்டாகியது. அவளிடம் தனி கௌரவமும் அன்பும் உண்டாயின.

விழா முடிந்து நைட் கவுனில் அப்ஸரஸ் மாதிரி அவள் வரும் பொழுது அவளை அத்தனை நாளும் இல்லாத விதமாய் முரட்டுத்தனமாய் இறுக்கி அணைத்துக்



கொண்டான். "உஷா ரியலி யூ ஆர் இரேட்!" என்று முகத்தோடு முகம் பதித்தான். உஷா புன்னகையுடன் அந்த நிலையிலும் மாத்திரைப் புட்டியை எடுக்கப் போனாள். "நோ! இனி நான் இந்த மாத்திரையை அனுமதிக்கவே மாட்டேன். உன்னைப் போல எனக்கு ஒரு குழந்தை வேண்டும்!" என்று தன் பிடியை இறுக்கினான். உஷா நெகிழ்ந்து விட்டாள். மாத்திரைப் புட்டியை குப்பைக் கூடையில் எறிந்தாள். "உங்களைப் போலத் தான் குழந்தையை நான் ஆசைப் படுகிறேன்!" என்று முணுமுணுத்தாள்.

உஷா கர்ப்பமாக இருக்கும்போது அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினான். கோபாலன் சற்றுத் தமிழ்ப் பித்துக் கொண்டவன். உஷாவோ ஆங்கில இலக்கியத்தில் எம். ஏ. டிகிரி வாங்கியவள். தமிழில் நாலு வார்த்தை சேர்ந்த மாதிரி பேச வராது. ஆங்கிலம் ஊடே எட்டிப் பார்க்காமல் அவளுக்குப் பேசத் தெரியாது. உணர்ச்சி வசப்படும் போதும் கோபப்படும் போதும் சந்தோஷமாக இருக்கும்போதும் ஆங்கிலம் தான் சரணமாக வரும்.

குழந்தைக்குப் பேர் வைப்பதில் கணவன் மனைவி இருவருக்கும் தகராறு வந்து மூளையிட்டது. கொழு கொழுவென்று கன்னமும் சிக்கென்று உடம்பும் அவளைப் போன்ற நிறமும் கண்களுமாக இருந்த பெண் குழந்தையைப் பார்த்துப் பூரித்துப் போய் விட்டான் கோபாலன். அவளைப் போலவே தீர்க்கமான மூக்கு. இரு மோவாய்கள். கால்களும், கைகளும் வாளிப்பாக அப்பாவை உரித்து வைத்திருந்ததைப் பார்த்து உஷா ஆனந்தப்பட்டாள். பெயர் என்ன வைப்பது? கோபாலன் ஒரே தீர்மானமாக, "தேன்மொழி" என்றான். ஒரு நிமிஷம் உஷா விக்கித்துத்தான் போனாள். மறு நிமிஷமே கடகடவென்று சிரித்தாள். "நன்னா இருக்கு! பேரைப் பொறுக்கினதைப் பார். நம்ம குழந்தைக்கு இந்தப் பத்தாம் பசலிப் பெயர்தானா உங்களுக்குக் இடைச்சது! என் சிநேகிதர்கள் இந்தப் பெயரைக் கேட்டாலே சிரிப்பார்கள். பெண் குழந்தையாகப் பிறந்ததனால் பெயர் வைப்பதை எல்லாம் என்னிடம் விட்டுவிடுங்கள்!" என்று வெகு சாதாரணமாகவும் படபடப்போடும் சொன்னாள்.


கோபாலனுக்குக் கோபம் வந்து விட்டது. "உஷா! இந்தக் குழந்தை பெண்ணாக இருப்பதால் நான் பெயர் வைத்ததிலிருந்து இவளை வளர்க்கும் பொறுப்பையே நான் ஏற்றுக் கொள்ளப் போகிறேன். உன் மாதிரி இவள் வளர அனுமதிக்க மாட்டேன். இவள் ஒரு ஆதர்ச பெண்ணாக வளரவேண்டும். நம் கலாச்சாரப்படி இருக்கவேண்டும். அதற்கு முன்னோடி தான் இவள் பெயர். உன்னைப் போல வெடுக்கென்று பேசாமல் அவள் தேன் மொழியாக இருக்க வேண்டும். இதில் மாறுதல் வந்தால் நாமிருவரும் பிரியக் கூடத் தயங்க மாட்டேன்!" என்று ஆத்திரத்துடன் எழுந்து போய் விட்டான்.

உஷா திக்பிரமையடைந்தாள். கையிலோ பெண் குழந்தை. சாது மாதிரி இருந்த கோபாலன் பாம்பாகச் சீறுவானேன்? வழி தெரியாமல் ஒரு வினாடி திகைத்தாள். மறுவினாடியே படித்த பணத்தில் வளர்ந்த அவள் பெண்மை சிலிர்த்தெழுந்தது. ஒரு வினாடிக்கு இவரை விட்டுப் பிரிந்தால் என்னால் வாழவா முடியாது! தேன்மொழியாம்! சிநேகிதிகளிடம் என்னத்தைச் சொல்வது!" புதுமைப் பெண்ணான வீராங்கனை மறுவினாடியே உஷா வெகு சாதாரணப் பெண்ணின் நிலைக்கு வந்து விட்டாள். கண்கள் குளமாயின.

குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டு வந்தாள். கார்ப்பரேஷன் ஜனன பதிவேட்டில் தேன்மொழி கோபாலன் என்ற பெயரைத் தான் தைரியமாகக் கொடுத்தான் கோபாலன். உஷாவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. குழந்தையைச் செல்லமாக 'ஹனி' என்று கூப்பிட்டாள். கோபாலன் தேன்மொழி என்று அழைத்தான். உஷா, தமிழில் தான் வைத்தபெயரையே ஆங்கிலத்தில் கூப்பிடுகிறாள் என்று உள்ளுக்குள்சந்தோஷப்பட்டான்கோபாலன். உஷா மெதுவாகத் தன் வழிக்கு வந்ததாக நினைத்துக் கொண்டிருந்தான்.


இருவருக்கும் இடைவெளி நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தது. குப்பைக் கூடையில் போட்ட கலர் மாத்திரைகளைக் கடையிலிருந்து வாங்கிப் படுக்கை அறை அலமாரியில் வைத்தாள். குழந்தைக்கு


கோகுலம் இருக்குமிடம்
குதூகலம் பொங்கும் இல்லம்



கோகுலம்

உங்கள் குழந்தைக்கு ஜூன் மாத கோகுலம்
வாங்கித் தந்துவிட்டீர்களா?




உடனே தடவுங்கள்
பர்னல்—சுட்ட புண்களுக்குச்
சிறந்த சிகிச்சை.




தீப்புண்கள் வித்தியாசமானவை. தீவிறற் சுட்ட புண் தீவிர வேதனை தரும்: கொப்புளங்கள் ஆகும். அவற்றுக்குத் தேவை சிறந்ததொரு மருந்து. அதுவே பர்னல். பர்னல் குளுமை தருகிறது. இதமாக ஆற்றுகிறது. கொப்புளமேற்படுவதை உடனே தடுக்கிறது. பர்னல் ஆன்ட்டிஸெப்டிக் க்ரீம்—தீப்புண்கள் விரைவில் ஆறத் தேவையானதைக் கொண்டது.

வீட்டில் எப்போதும் வைத்திருங்கள் பர்னல்.

**பர்னல்**

தீப்புண்களுக்குச்
சிறந்த சிகிச்சை.



# மழை வேண்டுமா?

நாம் சம்பாதிக்கும் செல்வத்தில் ஒரு பகுதியை நல்லவர்கள் சிலரோடு பங்கிட்டுக் கொள்ளும் செயலே தானம் என்று பெயர் பெறுகிறது. மக்களுக்கிடையிலே உள்ள சீரிய மனப்பான்மையும் அதனின்று வரும் சத் கர்மங்களும் முறையாக மழை பெய்வதற்கு முதற்காரணங்களாகின்றன.

*தர்ம சக்கரம்*

ஆகையால் எங்களுடைய **இனிப்பு கார பண்டங்களை** வாங்கி நல்லோர்களுக்கு விநியோகிக்கவும்.

**திருமண வைபவங்களுக்குத் தேவையான:** பருப்புத் தேங்காய், (பலவகை) அதிரசம், சீர்முறுக்கு, திரட்டுப் பால், காப்பரிசி, கட்டிப் பருப்பு, வறுபயறு ஆகியவற்றைத் தயாரித்துத் தருகிறோம்.

இனிப்புகள்: பாதாம் அல்வா, கோதுமை அல்வா, ரஸமலாய், பாதுஷா, குலாப் ஜாமூன், மைசூர்பாகு, ஜாங்கிரி, தூத்பேடா, முந்திரி கதலி, மங்களூர் போளி, தேங்காய் போளி, ரவாலட்டு முதலியன.

காரம்: தட்டை, சீடை, தேன்குழல், கைமுறுக்கு, மிக்ஸர் முதலியன.

பருப்புப் பொடி, சாம்பார் பொடி, மசாலாகடலை, பொரி விளங்காய் உருண்டை முதலியவற்றையும் தயாரிக்கிறோம்.

## தி கிராண்ட்
## ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர்,
அடையாறு, சென்னை-600 020

போன்: 412557

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி,
தேனாம்பேட்டை, சென்னை

பவுண்டன் பிளாசா,
பாந்தியன் ரோடு, எழும்பூர்

# பட்டுப் புடைவை

**(எல்லா வாசகர்களும்கலந்துகொள்ளலாம்; பெண்களுக்காக மட்டுமல்ல)**



**போட்டி 7 : எஸ். பி. முத்துராமனிடம் ஒரு கேள்வி**

கல்கி வழங்கும் ''நேரம் நல்ல நேரம்'' நிகழ்ச்சியில் விவிதபாரதி மூலமாக நேயர்களுடன் உரையாடச் சம்மதித்திருக்கிறார். திரு. எஸ். பி. முத்துராமன். அவரிடம் என்ன கேள்விகேட்க விரும்புகிறீர்கள்? ஒரே ஒரு கேள்வியைக் கீழே உள்ள வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து கல்கி காரியாலயத்துக்கு அனுப்பவும். உறையின் மேல் ''எஸ். பி. முத்துராமனிடம் ஒரு கேள்வி'' என்று குறிப்பிடவும். ரசமான கேள்விகள் கல்கியில் பிரசுரமாகி சன்மானம் பெறுவதுடன் திரு. எஸ். பி. முத்துராமன் பதில்களையும் பெற்றுத் தரும். தவிர குலுக்கல் முறையில் ஒரு வாசகருக்குப் பட்டுப் புடவைப் பரிசும் கிடைக்கும்.

முடிவு தேதி: 2.7.84.

**நினைவிருக்கட்டும் 46 பட்டுபுடவைகளுள் ஒன்றை நீங்கள் பெற வாய்ப்புள்ளது. வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.**

என் பெயர் : ..........................

விலாசம் : ..........................

..........................



# பரிசுத்திட்டம்

ஆறு மாதம் ஆனவுடன் ஓர் ஆயாவை வைத்துவிட்டு நண்பர்களுடன் சுற்றத் துடியாய்த் துடித்தாள். கோபாலனோ தீர்மானமாக ஆயா வைக்கக் கூடாது என்று சொல்லி விட்டான். மத்தியானமெல்லாம் பல்லைக் கடித்துக் கொண்டு வீட்டில் இருந்து விட்டு, கோபாலன் ஆபீஸிலிருந்து வந்தவுடன் வெளியே புறப்பட்டு விடுவாள். சமையற்காரி சமைத்துப் போடுவதைச் சாப்பிட்டு விட்டுக் குழந்தையோடு விளையாடி அவளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்வதில் அலாதி சந்தோஷமடைந்தான். வரவர உஷாவின் நடவடிக்கைகள் மோசமாகிக் கொண்டிருந்தது. கோபாலன் அவளைத் தன் படுக்கை அறைக்கே வராமல் தடுத்து அடுத்த அறையை உஷாவின்படுக்கை அறையாக மாற்றினான். உஷாவுக்கு இது முதல் சவுக்கடி. ஆனாலும் வெகு சாதாரணமாக இந்த ஏற்பாட்டை எடுத்துக் கொண்டாள். 'நீங்களில்லாமல் என்னால் வாழ முடியாதா?' என்றபடி அலட்சியத்தோடு அடுத்த அறையில் தாழ்போட்டுக் கொண்டு படுத்துக் கொள்வதை வழக்கமாக வைத்துக் கொண்டாள்.

குழந்தை அப்பாவுடன் ஒட்டிக்கொண்டாள். பகல் நேரங்களில் அம்மாவின் சிசுருஷைகள் தேவைப்பட்ட போதிலும் அப்பாவைத் தான் அதிகமாக எதிர்பார்த்தாள். உஷாவுக்கு இந்தச் சிறை வாழ்வு அலுத்துவிட்டது. பிய்த்துக் கொண்டு ஓடத் தயாரானாள். மீண்டும் வளர்த்துவதற்கு என்ன இருக்கிறது? ஆறு மாதம் சட்டப்படி பிரிந்து சட்டப்படி விவாகரத்து பெற்று இருவருமே நிம்மதியுடன் பிரிந்தார்கள். உஷா யாரையோ மறுமணம் செய்து கொண்டு வெளிநாட்டுக்குப் போய் விட்டதாகச் சொன்னார்கள். கோபாலனுக்குப் பதவி உயர்வும் பலவித சௌகரியங்களும் வந்தன. தேன்மொழி இப்படித் தாயில்லாமல் இருப்பது எப்போதாவது வேதனையைக் கொடுத்தாலும் உஷாவை நினைத்தாலே அவள் எதிரில் நிற்பது போலவும் அவள் கழுத்தை நெரிக்க வேண்டுமென்ற வெறியும் கூடவே வரும்.

அன்று பேப்பரில் வந்த விளம்பரத்தைப் பார்த்ததும் அவனுக்குச் சற்று சபலம் உண்டாயிற்று. ஐந்து வயசுப் பெண் குழந்தையுடன் இருக்கும் இளம் விதவை மாலினிக்குக் கணவன் தேவை. வயதான பெற்றோர்களின் ஆதரவில் இருக்கும் அவள் விபத்தில் கணவனைப் பறிகொடுத்த பெண். வயது இருபத்தைந்து. தாரமிழந்தவர்களோ, குழந்தைகள் உள்ளவர்களோ கூட விண்ணப்பிக்கலாம்! என்றிருந்த விளம்பரத்தில் தினசரி பேப்பரின் விலாசத்தையே கொடுத்திருந்தார்கள். தன் சரிதையையே விவரமாக எழுதித் தன் பெண்ணை வருகிறவர் அவள் பெண்ணாகக் கவனிக்கவேண்டுமென்றும் அவளுடைய பெண்ணையும் தான் ஏற்றுக் கொள்வதாகவும் எழுதித் தபாலில் சேர்த்து விட்டுப் படுத்தான். அவனையறியாமல் நன்றாகத் தூங்கினான்.

மாலினியின் தந்தை கணபதி அன்றுவந்திருந்த தபால்களையெல்லாம் வரிசைப்படுத்தி

# மரங்கள்



- அவர்களுடைய முறையீடுகளை எவ காதுகள் கேட்க விரும்பவில்லை. மீண்டும் நான் நிலமெங்கும் நிறைந்திருந்த மரங்களை நோக்கித் திரும்பிக் கொண்டேன். மரங்கள் ஒன்றையொன்று தள்ளி மோதிக் கொண்டு நகர்ந்தபடி இருந்தன. அவைகளின் அடியில் மனிதர்கள் குறைப்பிறவிகளாய்த் தோற்றம் காட்டினார்கள். ஒருவன் கையை இழந்தான் — இன்னொருவன் காலை இழந்தான் — மூன்றாமவன் தலையை இழந்தான். இந்தச் சேதாரங்களின் நிகழ்வு நிமிடத்தில் எல்லா மரங்களும் சேர்ந்து ஒரே மரமாக மாறி விட்டன. அதனுடைய உச்சியில் ஆணவம் அமர்ந்திருந்தது. அதன் கிளைகள் உலகம் முழுவதும் பரவிக் கவிந்திருந்தன.

- வடக்கிலிருந்து வரும் வாடைக்காற்று கிளைகளினூடே வீசியது. மரம் — எல்லா சுமைகளும் காற்றில் பூமியின்மேல் சரிய — ஒற்றைத் தனிமையில் பனிக்கு போல் நின்றது.

- காற்றின் இரைச்சலும், மரத்தின் தன்னழிவும் என்னைப் பாதித்தன. சிதறிக் கிடந்த சில புத்தகங்களே என்முன் இருந்தன. கசிந்த கண்களோடு அவைகளை எடுத்துக் கொண்டு — நான் செல்ல வேண்டிய வழியைக்காட்டுமாறு காலதேவனைப் பிரார்த்தித்தேன்.

- காட்டை விட்டு விலகித் தப்பித்துக் கொண்டேன். நடந்து கொண்டே இருந்தேன். சமவெளிகளுக்கு காலால் ஆயிரம் முத்தங்கள் கொடுத்தேன். இரவு நேரத்தில் மரப்பொந்துகளில் உறங்கினேன். பழக்கொட்டைகளை உலைவாக்கிக் கொண்டேன். வயல்வெளிகளில் — கடுங்குளிரில் கதிர்களைக் கசக்கித் தானியங்களை எடுத்து உண்டேன்.

- வைகறைப் பொழுதில் பாதி எரிந்த நகரத்துக் கதவுகள் விழுந்திருக்கக்கண்டேன். வீடுகளின் அருகே — பாதி உயரம் வரை குப்பைகள் கொட்டப்பட்டிருந்தன. உயிருள்ள எதையும் நான் அங்கே காணவில்லை. தெருக்களில் மனிதப் பிணங்கள் சிதறிக் கிடந்தன. எதிரே ஒரு காவல் வீரன் வந்தான். அவன் என்னைப் பிடித்துக் கொண்டான். அவனுடைய தோழர்கள் வந்தனர். அவர்கள் என்னை முட்டாள் என்று கருதினார்கள். அவர்களை நான் சந்தித்திருக்கா விட்டால் — அவர்கள் என்னை முட்டாளாகக் கருதியது சரியாகவே இருந்திருக்கும்.

**நா. காமராசன்**

---

ஒவ்வொன்றாகப் படித்தார். மிக கவனமாகப் படித்தார். இருபத்தைந்து வயதுப் பெண் என்று பேப்பரில் போட்டதனாலேயே கடிதங்கள் குவிந்து வந்திருந்தன. இந்த நாளில் இருபத்தைந்து வயதில் கலியாணம் ஆகிற பெண்கள் மிகக் குறைவு. அதனால் மாலினியின் விதவைத் தனம் அவ்வளவாக ஒருவருக்கும் தோன்றவில்லை. அவளுடைய பெண்தான் பலருக்குப் பாரமாக இருந்தாள். கலியாணம் செய்து கொள்ளத் தயார் என்றும் மாலினியின் பெண்ணைக் கான்வென்ட்டில் சேர்த்துப் படிக்க வைத்தால் கலியாணத்துக்குச் சம்மதம் என்று சொல்லி வைத்த மாதிரி பல கடிதங்கள் ஒன்றுபோல் வந்திருந்தன. மாலினி தந்தையின் செய்கையை ஓர் ஓரத்தில் உட்கார்ந்து ஒரு கண்ணால் பார்த்துக் கொண்டே ஒரு கண்ணால் தன் செல்விக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். செல்வி தன் தந்தையிடம் கொஞ்சிக் குலாவியது இரண்டு வருடங்கள்தான். லாரி விபத்தில் கணவனை இழந்த மாலினி தன் இருபத்திரண்டாவது வயதிலேயே ஒரு பெண் குழந்தையுடன் பெற்றோரிடம் வந்து விட்டாள். பெற்றோர் மனம் கொதித்தது. மாலினிக்குக் கணவன் கங்காதரன் கணிசமான இன்ஷூரன்ஸ், ஆபீஸ் பிராவிடண்ட்பண்ட் பணம் அது, இது என்று ஒன்றரை லகரத்துக்கும் மேலேயே வந்தது. அதை அப்படியே செல்வியின் பெயரில் பாதியையும் மாலினியின் பெயரில் பாதியையும் பாங்கில் போட்டுப் புத்தகத்தைப் பெண்ணிடம் கொடுத்துவிட்டார் மாலினியின் தந்தை. அவளுக்கு அடுத்தாற்போல இரண்டு பெண்கள் கலியாணத்துக்கும் ஒரு தம்பி படித்துக் கொண்டும் இருந்தார்கள். தன் பணத்தில் வரும் வட்டியை மாதாமாதம் பெற்றோரிடம்கொடுத்து விடுவாள். தான் அவர்களுக்குப் பாரமாக இருக்கக் கூடாது என்பது தான் அவள் எண்ணம். மாலினியின் தந்தைக்கோ இந்தச் சிறிய வயதில் எத்தனை வருடங்கள் இப்படித் தனியாக இருக்க முடியும் என்ற

கவலை வெகுவாக அவரை வாட்டியது. தனக்குப் பிறகு அவள் கதி என்ன? நிரம்ப யோசனை செய்த பிறகு அவளுக்கு மறு மணம் செய்து வைத்து விடுவது என்று தீர்மானித்தார். மாலினி முதலில் ரொம்ப முரண்டு பிடித்து மறுத்தாலும் செல்வியைத் தன் செல்வமாக ஏற்றுக் கொள்பவரை கலியாணம் செய்து கொள்வது என்ற முடிவுக்கு வந்து விட்டதாக தந்தையிடம் சொன்னாள். அப்படிப் பெரிய மனத்துடன் யார் வரப் போகிறார்கள் என்ற தைரியத்துடன் தான் சொன்னாள்.

கோபாலனின் கடிதமும் எழுதி இருக்கும் பாங்கும் மாலினியின் தந்தையை வெகுவாகக் கவர்ந்தன. ஒன்றையும் ஒளிக்காமல் எழுதினது அவருக்கு ரொம்பப் பிடித்தது. "மாலினி! இந்தக் கடிதத்தைப் படி அம்மா! இதற்கு இன்று பதில் எழுதப் போகிறேன். அவரையும் அவருடைய குழந்தையையும் வரச்சொல்லப் போகிறேன்!" என்று சொல்லி விட்டு வந்த கடிதத்தை மகளிடம் கொடுத்தார்.

"எங்களுக்குப் பிறகு நீ ஒருவரிடமும் ஒண்டிக் கொள்ளக் கூடாது என்றுதான் இந்த யோசனை பண்ணினேன். இவர் வயதிலும் சிறுசுதான். முப்பத்திரண்டு தான் ஆகிறது. நீ ஒரு விதமாகத் துக்கம் அனுபவித்த மாதிரி இந்த மனுஷன் வேறே மாதிரி கஷ்டம் அனுபவிச்சிருக்கார். இரண்டு பேருக்கும் ஒரே வயதில் பெண் குழந்தைகள் வேறே. எல்லாம் பொருத்தித்தான் இருக்கு. ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே குழந்தையுடன் வரச் சொல்கிறேன். ஒருநாள் இரு குழந்தைகளும் சேர்ந்து இருக்கட்டும். நீங்களிருவரும் மனசைப் புரிஞ்சண்டு சரியாயிருந்தா பார்த்துக் கொள்ளலாம்."

"எப்படியோ செய்யுங்கோ அப்பா!" என்றாள் மாலினி.

மாலினி அன்று இரவு தூங்கவே இல்லை. செல்வியைக் கட்டி அணைத்துக் கொண்டே படுத்தாள். "ஏம்மா இப்படி இறுக்கிக் கட்டிக்கறே!" என்று செல்வி சிணுங்கும் அளவுக்கு அவளை இறுக அணைத்துக் கொண்டாள். "செல்வி உனக்கு அப்பா இல்லேன்னு வருத்தப்படுவாயே. இப்போ ஒரு அப்பா வரா! சந்தோஷமா?" என்று குழந்தையின் மனத்தைச் சோதித்தாள்.

"அப்பாவா? எனக்குத் தான் அப்பா செத்துப் போயிட்டாரே!" என்றாள் சோகமாக. "புது அப்பா வரப் போறா! உனக்கு சந்தோஷமா?" என்றாள் மீண்டும். குழந்தைக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.

ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. கோபாலனும் தேன்மொழியும் வந்தார்கள். செல்வி தன் தாத்தாவுடன் வெட்கத்துடன் அவரை வரவேற்க, தாத்தாவின் வேஷ்டியின் பின்னால் நின்று கொண்டிருந்தாள்.

கோபாலனைக் கைகுலுக்கி வரவேற்றார் மாலினியின் தந்தை. கோபாலன் வாட்ட சாட்டமாக இருந்தார். தேன்மொழி துறுதுறுவென்றிருந்தாள். சில கணநேர மௌனத்தை அவள்தான் கலைத்தாள். "ஹாய் செல்வி!" என்று ஓடிவந்து செல்வியை அணைத்துக் கொண்டாள். செல்வியும் சற்று சங்கோஜத்துடன் "ஹாய்!" என்று சொல்லிக் கொண்டே ஆதுரத்துடன் தேன்மொழியின் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

தேன்மொழி மூச்சுவிடாமல் பேசினாள். ஸ்கூலைப் பற்றி, அப்பாவைப் பற்றி, வீட்டைப் பார்த்துக் கொள்ளும் ஆயா கடைசியாகச் செத்துப் போனதாகச் சொல்லும் தன் தாயைப் பற்றியும் கூட. ஆண் வளர்த்த குழந்தை எப்படி இப்படி கலகலவென்று பேசுகிறது என்று எல்லோரும் வியந்தனர். அப்பா இல்லாமல் அம்மா விடால் வளர்க்கப்பட்ட பெண்ணோ வாயைத் திறக்காமல் அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். எத்தனை வித்தியாசம்!

"அப்பா! புது அம்மா எங்கே அப்பா!" என்று தேன்மொழி கேட்டவுடன் தான் எல்லோருமே தம் நிலைக்கு வந்தனர். "வருவா அம்மா!" என்று கோபாலன் வாஞ்சையுடன் பெண்ணின் தலையைக் கோதினார். "எங்க அம்மாவையா சொல்றே!" என்று செல்வி தேன்மொழியிடம் கிசுகிசுத்தாள். ஆமாம். என்பதற்கு தலையை மேலும் கீழும் ஆட்டினாள். "இதுதான் புது அப்பாவா?" என்று பதிலுக்குத் தன் பங்குக்கு அடித்தொண்டையில் கேட்டாள் செல்வி. தேன்மொழி ரகசியக் குரலில், "இந்த அப்பாவும் இனிமே நம்ம இரண்டு பேருக்குமே அப்பாதான். உங்க அம்மாதான் நம்ம இரண்டு பேருக்கும் அம்மா. அம்மா ஏன் வர மாட்டேன்கிறா." என்று தேன்மொழி கேட்டாள்.

மாலினியிடம் சென்று "அம்மா" என்று கால்களைக் கட்டிக்கொண்டாள் தேன்மொழி. மாலினி தன் துக்கமெல்லாவற்றையும் துடைத்தெறிந்துவிட்டுத் தேன் மொழியை வாரி அணைத்தாள்.

இரு குழந்தைகளுக்கும் தங்களுடைய புது அம்மா அப்பாவைப் பிடித்துவிட்டது. மாலினி தேன்மொழியுடன் ஹாலுக்குள் வந்தாள். கோபாலனைப் பார்த்தாள்.

மாலினியும் கோபாலனும் நேருக்கு நேர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

"செல்வி! நம்ம வீட்டுக்கு வர்ற போது நீ டான்பித்த எல்லா காமிக்ஸையும் கொண்டு வந்துடு!" என்றாள் தேன்மொழி பெரிய மனுஷித்தனமாக.

"நீ இங்கே இருக்க மாட்டாயா!" என்றாள் செல்வி தாங்கலுடன். "அம்மாவும் நீயும் அங்கேதானே வரப்போறேன்னு அப்பா சொன்னா. 'ஏம்மா! அங்கே நம்ம வீட்டுக்குத்தானே செல்வி கூட வரப் போறீங்க?' என்றாள் தேன்மொழி. எல்லோரும் கோபாலன் உள்பட மாலினியின் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்து அவள் முகத்தையே பார்த்தனர். மாலினி தேன்மொழியை அணைத்துக் கொண்டு, "ஆமாமடி, கண்ணே!" என்றாள்.

"ஹை! ஹை! ஜாலி! ஜாலி!" என்று இரு குழந்தைகளும் கும்மாளம் இட்டனர்.

'குழந்தைகள் முடித்த திருமணம்' தெய்வம் முடித்ததாகச் சகல நிறைவுகளுடன் இருக்க, பெரியோர்கள் கண்கள் பனிக்க மனமுருகினார்கள்.

சினிமாவில் நீங்கள் பார்த்து ரசித்த காட்சிகள் இவை. ஒவ்வொரு காட்சியிலும் யாராவது ஒருவரது கையில் ஒரு பொருள் இருக்கிறது. மீன், எம்.ஜி.ஆர். படம், உண்டியல், புத்தகம், டம்ளர் இவற்றுள் ஏதோ ஒன்று. அது இங்கே மறைக்கப்பட்டுள்ளது. காட்சியை நினைவு படுத்திக் கொண்டு பொருட்களில் எது யார் கையில் இருந்திருக்கும் என ஊகியுங்கள் பார்க்கலாம். விடை கடைசி பக்கம்.


தொகுப்பு: திரைஞானி.











# கையிலே இருப்பதென்ன?

## வெள்ளித்திரை



# அழகு

''இத பாரு, உனக்கும் இவனுக்கும் ஆயிரம் சண்டை இருக்கலாம். அதுக்காக 'அழகு' படத்துக்கு இவளை அழைச்சிட்டுத் தான் போவேன்னு நீ பிடிவாதம் பிடிக்கறது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கல்லே.—''

### இடைவேளை வரை

'பெண்' என்றால் ஒரு லாகிரி வஸ்து, வைத்துக் கொண்டு எதையும் சாதிக்கலாம் என்கிற கொள்கையோடு ஒரு அழகி.' ரிடையரான அப்பாவும், பள்ளிக்குப் போகிற தங்கை, தம்பியும் 'நல்லாயிருக்க' வேலை தேடுகிற சீதைத்தனமான பெண் ஒருத்தி. சீதைகளையும் தன் படுக்கைக்கு அடிபணிய வைப்பதே லட்சியம் என்று 'உசரமாய்' ஒரு பணக்கார ஆண். அகங்காரமில்லாத அடக்கமும், பெண்கள் பால் மரியாதையான பரிவும் காட்டுகிற இன்னொரு கம்பீர ஆண். நாலு வித்தியாச காரக்டர்கள். போதாதோ, சுவையான சம்பவங்களை அமைத்துக் கொடுக்க?

ஊஹூம், ஊஹூம் என்கிறது வறட்சியான இந்தப்படம்.

சுத்தமாய் அமெச்சூர்த்தனமாய் அணுகு முறை ஒருபுறம், இலக்கில்லாத கதை அமைப்பு மறுபுறம் என்று படத்தை அமுக்கோ அமுக் என்று மண்புரட்டுகின்றன. சிறப்பான விசேஷம் என்னவென்றால்....

சில 'அமர' நட்சத்திரங்களை (சாவித்திரி, லட்சுமிஸ்ரீ) மறுபடியும் திரையில் பார்க்க முடிகிறது — அடடா என்று அனுதாபப்பட முடிகிறது.

'தோசை திருப்பி'யை வாளாய்ப் பாவித்து ஹோட்டல் அடுக்களையில் தோசைபோடும் ஸ்டைல் மாஸ்டராய், ஒய். ஜி. மகேந்திரன் தான் பெரிய பணக்காரன் என்று பாவலா செய்ய, 'அரை பிளேடு' உத்தியோகம் பார்க்கும் வனிதா அவரை ஏய்த்துப் படுக்கை அறைக்கு அழைத்து வந்து சப்ஜாடாய் எல்லாவற்றையும் 'ஜேப்பிக்' கொண்டு போகிற காட்சி கொஞ்சம் 'ஹி ஹி' டைப்.

'புருஷன் பேச்சை மீறிட்டுத் தான் வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது. அவரைத் தேடிக்கிட்டுப் போறது தப்பில்லே' போன்ற ஏதோ சில வசனங்கள் — 'ஆஹா' டைப். ஜி. கே. வெங்கடேஷின் இசையில் 'தேவி வந்தாள்' பாடல் — 'ஓ.கே' டைப். நல்ல உயரமாய், வாட்டசாட்டமாய் வளைய வரும் மதன், அவருடைய நடை, உடை, பாவனை, வசன உச்சரிப்பு (சொந்தம்?) எல்லாம் 'அட!' டைப்.

ஒரு சின்ன சஸ்பென்ஸ் நுழைகிற இடத்தில் இடைவேளை வருகிறது. கஷ்டப்பட்டு இதையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு வெளியே வந்தால், சுதந்திரக் காற்று.

இடைவேளைக்கு அப்புறம்... சுதந்திரக் காற்றை விட்டுப் போக மனசில்லே.

# நல்லநாள்



ஊர் மக்கள் முகத்தில் கொஞ்சம் திகிலோடு, கொஞ்சம் வெறுப்போடு 'கொலைகாரனை' வரவேற்கும் முதல் காட்சி — போலீஸ் லாரியிலிருந்து அந்தப் பத்து வயது கொலைகாரன் இறங்கும் நேர்த்தி! தலையை நிமிர்த்துக் கொண்டு உட்கார்ந்து பார்க்கும்படி செய்து விட்டார்கள்.

அப்புறம் தான் கதை திடீரென்று தண்டவாளம் மாறின ரயிலாய்ப் பயணப் படுகிறது.

இங்கே ஒரு பக்கம் அந்தக் கொலைகாரச் சிறுவன் சீர்திருத்தப் பள்ளியில் வளர, அங்கே இன்னொரு பையன் கையில் அரிவாளை எடுத்துக் கொள்கிறான். — அதாவது விஜய்காந்த் தன் தந்தையைக் கொன்றவன் தலையைச் சீவி, சிறுவர் பள்ளிக்குச் சென்று வளர, அந்தக் கொலையுண்ட தந்தையின் பையன் (தியாகராஜன்) இவன் எப்போது ஜெயிலில் இருந்து வருவான் என்று அரிவாளும் கையுமாய் அலைகிறான். விஜய்காந்தின் தங்கை நளினி. (யார் வளர்த்தார்கள் அம்மா செத்த பின்னால்?) தியாகராஜனை மலையூர் மம்பட்டியான் ஸ்டைலில் காதலிக்கிறார். மணம் புரிகிறார். தியாகராஜனும் விஜய்காந்தும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளாமல் இருப்பதற்குப் பாடுபடுகிறார் என்பது கதை.

நடுவில் விஜய்காந்த்திற்கு ஜோடி வேண்டும் என்பதால் 'மோகினிப் பெண்ணாய்' விஜி.

அந்தக் குதிரை லாயம், மைதானம், பெரிய பங்களா — என்னவோ இங்கிலீஷ் படத்திற்கு வந்து உட்கார்ந்து விட்ட பிரமையைக் கொடுக்கிறது. கூடவே இளையராஜா இங்கிலீஷ் பாணி 'ரீரெகார்டிங்' இசையுடன்.

நளினி லாயத்திற்குள் நடந்து வரும் போது சொல்லி வைத்த மாதிரி அத்தனை குதிரைகளும் எட்டிப் பார்ப்பது — நயம்.

அப்புறம் கோயிலில் 'சின்னதுரை' பேருக்கு அர்ச்சனை என்று நளினி சொல்ல அவரை வீட்டுக்கு இழுத்து வந்து தியாகராஜன் சந்தேகத் தொனியில் விளாச, 'சின்னத்துரை நன்றாக இருந்தால்தானே நீங்கள் ஜெயிலுக்குப் போகாம இருப்பீர்கள்' என்று கூறிச் சமாளிக்கும் இடம் — டைரக்டோரியல் டச்.

எங்கேயிருந்து பிடித்தார்கள் இந்தக் காப்டன் ராஜை! மனிதர் ஆறடிக்குக் குறையாத ஆஜானுபாகு. சண்டைக்காட்சியில் காலை உதைத்து உதைத்து இந்தப் பக்கம், அந்தப் பக்கம் பாய்கையில் — ஜோராகத்தான் இருக்கிறது. இந்த மாதிரி கற்பழிக்கிற வில்லன்களை சினிமாக்காரர்களே மூட்டை கட்டி அனுப்பி விட்டார்களே! இன்னும் எதற்காம் அந்தப் பழைய மாவை அரைக்கிற பிஸினஸ்? கேட்கிறாற்போல் மூன்று பாடல்கள். பார்க்கிறாற்போல இரண்டு சண்டைகள். ரசிக்கிறாற்போல ஒரு ஜெயமாலினி டான்ஸ். சிரிக்கிறாற் போல் (கொஞ்சமாய்) நகைச்சுவை. 'தேவர் குதிரைகள்'. (குதிரையை தியாகராஜன் அடக்குகிற ஸீன் —விஜய்காந்த் புலியுடன் மோதும் ஸீன்— ஆஹா!)

இன்னும் என்ன வேண்டும்.

—ஜெயமன்மதன்



# 61-ம் பக்க விடை



குமாரி பிரபா—ஸ்ரீகாந்த்—எஸ். என். லட்சுமி
(மீன்)




விசு—சாந்திகிருஷ்ணா—சோ
(டம்ளர்)



விமல்
(கேச்பில்)



லதா
(எம்.ஜி.ஆர். படம்)



ஜெய்சங்கர்—விஜயா
(புத்தகம்)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran

# உலகிற்குக் காட்டுங்கள், உண்மையான வெண்மை என்ன என்பதை




## உன்னதம்...உன்னதம்...
## வெண்மையிலே
## அனைத்திலும் உன்னதம்!

உங்களுக்கு காட்டவும் டெட்டில் உண்டு ஏராளம். இதன் புதிய உறை—கண்ணைக் கவரும். திறந்து பாருங்கள் ஆச்சரிய மளிக்கும் இதன் புத்தம்புது மணம். இக்கட்டியில் அடங்கி யுள்ளது அதிக வெண்மைக்கான சக்தி.

நீங்கள் பாருங்கள்... காட்டுங்கள் உலகிற்கு
டெட் தரும் வெண்மையை... உண்மையான வெண்மையை.

Shilpi DM 9A/84 Tam.




பாம்பே டையிங் ஸூட்டிங்குகள்

ULKA-BD-MW-1-84-TAM